Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 13/50
දිනමුරසු වාරමලර් பெப். 11-17, 2001
வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 395

# சுதந்திரம்

# இலங்கைக்கா? இனவாதத்திற்கா?



# ஷாலினி தொடங்கும் சானல்

# முரசம்

## வரி வசூலிப்பு?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

யாழ், வர்த்தகர்களிடம்
கப்பம், வரி அறவிடும் முயற்சியை
இராணுவம் தலையிட்டுத்
தடுத்து நிறுத்த வேண்டிய
நிலைமை தோன்றியுள்ளதானது
மிக வெட்கக் கேடான விடயம்!

தமிழ் மக்களின்
விடுதலைக்காகப் புறப்பட்டவர்களெனத்
தங்களைக் கூறிக்கொள்ளும்
இத்தகைய இயக்கங்கள்
இன்று தமது
ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு
ஜனநாயக வழிக்கு வந்துவிட்டதாக
இலங்கையின் அரசியல் யாப்பின்கீழ்
சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு
இன்னமும் முன்னர்போல்
இயக்கங்களை நடத்தும் பாணியில்
பண வசூலிப்பை நடத்திவருவது
எதற்காகவென
ஆச்சரியப்பட வைக்கிறது.

வெறுமனே அரசியல் கட்சியாக
இருப்பதற்காக
மக்களிடம்
பலவந்த வழிமுறைகளில்
பணம் கறக்கவேண்டிய
எந்தத் தேவையும்
இவர்களுக்கு இல்லை.

அவசரகாலச் சட்டத்தை நீக்கும்படி
ஒருபுறம் கோரிக்கொண்டு
அதே அவசரகால விதிகளின்
அனுகூலங்களைப் பயன்படுத்தி
இத்தகைய வசூலிப்புகளை
இவர்கள் நடத்துவது
நேர்மாறானதாக இருக்கிறது.

அரசாங்கத்தில்
இணைந்துகொண்ட கட்சிகள்
அரசாங்கத்திடமிருந்து
பணம் பெறுகின்றன என்றுகூறி
அதற்காகத் தாங்கள்
பொதுமக்களிடமும் வியாபாரிகளிடமும்
கப்பமும் வரியும் வாங்குவதை
இவர்கள் நியாயப்படுத்துவது
சட்டத்துக்கு மட்டுமன்றி
தர்மத்துக்கும் புறம்பானது.

அரசாங்கத்திடம் பணம்பெற்ற
இவர்கள் உட்பட
அனைத்து தமிழ்க் கட்சிகளும்
இயங்கி வந்தனவென்ற
உண்மையை இவர்கள்
மறைக்க முடியாதென்பது
ஒருபுறமிருக்க
ஏற்கெனவே கப்பல் போக்குவரத்தால்
விலையேற்ற மடைந்திருக்கும்
யாழ்ப்பாண வர்த்தகத்தில்
தனிப்பட்ட இயக்கங்கள்
தமது இஷ்டப்படி
வரிச் சுமையையும் கப்பத்தையும்
திணிப்பதென்பது
மனசாட்சிக்கு விரோதமானது.

இவர்களால்
வன்னியில் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும்
இந்த வரி வசூலிப்புகளை
யாழ்ப்பாணத்திலும் இப்போது
அறிமுகப்படுத்த முனைந்தமைக்கு
வர்த்தக சமூகம்
பாரிய எதிர்ப்பைக் காட்டி
தடுத்து நிறுத்தியமை
பாராட்டுக்குரியது.

இந்த வரிகள், கப்பங்களை
வர்த்தகர்கள் தமக்கு
மனமுவந்துதரும்
நன்கொடைகளெனக் கூறுவது
நம்ப முடியாதது.
சட்டத்தையும் வெளியுலகையும்
ஏமாற்றும் முயற்சியே இது.

இந்தக் கட்டாய நன்கொடைகள்
எப்படிப் பெறப்படுகின்றனவென்று
இத்தனை ஆண்டுகளாக
இவற்றை அனுபவித்துவரும்
எமது மக்களுக்கு
நன்றாகவே புரியும்.
நன்கொடை வழங்கும்படி கேட்டு
நாயைக் கொண்டு கடிக்க வைத்த
சம்பவங்கள்கூட எமது
வரலாற்றில் பதிவாகியுள்ளன.

வர்த்தகர்கள் வழங்கியது
நன்கொடைதானென்றால்
தம்மை இத் தொல்லைகளிலிருந்து
காப்பாற்றும்படி கோரி
ஏன் அவர்கள்
இராணுவத்திடம் போய்
முறையிடுகிறார்கள்?

வேறு வழியற்ற அவர்களுக்கு
ஆயுதப் படைகளின் துணையை
நாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமை
வேதனைக்குரியதானாலும்
இத்தகைய நிலைமைக்கு
அவர்களைத் தள்ளியது
மனித உரிமைகள் பற்றியெல்லாம்
வாய்கிழியப் பேசும்
இந்த இயக்கங்களே!

மக்களின் துன்பங்களுக்காகக்
குரல் கொடுக்க முன்வருபவர்களாயின்
முதலில் தங்கள்
மக்களைத் துன்புறுத்தும்
இத்தகைய நடவடிக்கைகளை
இந்த இயக்கங்கள்
நிறுத்திக் கொள்ளட்டும்.

அடாவடித்தன அரசியலிலிருந்து
கௌரமான அரசியலுக்குத்
தம்மை மாற்றிக் கொள்ளட்டும்.
இல்லையேல்
இவர்களின் இந்த அடாவடித்தனமே
இவர்களை
அரசியலிலிருந்து ஓரம்கட்டிவிடும்.

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்

## கடவுள் அருள் கிடைக்கும்


கடவுளை அடைய ஆடம்பரம் எதுவும் தேவையில்லை. 'யாவர்க்குமாம் இறைவனுக்கு ஒரு பச்சிலை' என்று கடவுளுக்கு ஓர் இலையைக் கிள்ளிப் போட்டால், கடவுள் திருப்தியடைகிறார் என்கிறது திருமந்திரம். 'பத்ரம், பழம், புஷ்பம், தோயம்' என்று "இலையோ, பழமோ, பூவோ எது? வழங்கினாலும் மகிழ்வுடன் நான் ஏற்பேன்" என கண்ணன் கீதையில் சொல்கிறான்.

தனது சகல நகைகளையும் கிருஷ்ணனின் எடைக்கு எடை எடுத்து வைத்த சத்யபாமாவின் கர்வத்தைப் புறக்கணித்து, ஒரே ஒரு துளசியை கிருஷ்ணன் மீதான பிரேமையுடன் வைத்த ருக்மணியின் அன்புக்குக் கட்டுப்பட்டு தராசை சமமாக்கினானே கிருஷ்ணன். எவ்விதமான யாகமும் செய்யாமல், தன் முதிய பெற்றோர்களின் பாதங்கள் பற்றி தொண்டு செய்த புண்டரீகனின் பிதுர் பக்தியை மதித்து, பாண்டுரங்கன் செங்கல் மீது நிற்கிறான் என்கிறது பக்த விஜயம்.

பக்தியோடு அழைத்தால் இறைவன் நம்மைத் தேடி நிச்சயம் ஓடி வருவார். விட்டகுறை, தொட்டகுறை இருந்தால் வணங்காதவர்களுக்குக் கூட கடவுள் அருள் கிடைக்கும்! நிறைய பக்தர்களின் வாழ்வில் இப்படி நடந்திருக்கிறது.

ரீ.குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

## அளவற்ற அருளாளன்



★ பூமியை நாம் (உங்களுக்கு) விரிப்பாக ஆக்கவில்லையா?
★ இன்னும் உங்களை (ஆண், பெண் கொண்ட) ஜோடிகளாக நாம் படைத்தோம்.
★ நாம் உங்களுடைய தூக்கத்தை (உங்களுக்கு) இளைப்பாறுதலாகவும் ஆக்கினோம்.
★ நாம் இரவை (உங்களுக்கு) ஆடையாகவும் ஆக்கினோம்.
★ நாம் பகலை வாழ்க்கைக்குரிய (வற்றைத் தேடிக் கொள்ளும்) நேரமாக ஆக்கினோம்.
★ உங்களுக்கு மேல் உறுதியான (வானங்கள்) ஏழினை நாமே உண்டாக்கினோம்.
★ (வெப்பமும் ஒளியும் கலந்த) பிரகாசிக்கும் ஒரு விளக்கையும் (சூரியனை) ஆக்கினோம்.
★ கார் மேகங்களிலிருந்து அதிகமாகப் பொழியும் (மழை) நீரையும் இறக்கி வைத்தோம்.
★ அதனைக் கொண்டு தானியத்தையும், தாவரத்தையும் வெளிப்படுத்துவதற்காக-
★ அடர்ந்த மரங்களுள்ள சோலைகளையும் வெளிப்படுத்துவதற்காக-
★ நிச்சயமாக, தீர்ப்பு நாள் நேரம் குறிக்கப்பட்டதாக இருக்கிறது.

அல் குர்–ஆன் 78: 6–17

ஏ.எச்.ஏ.ஹுஸைன்–ஏறாவூர்.

## இறை அன்பில் நிலைத்திருங்கள்

தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் எப்படி அன்பு செலுத்த முடியும்? கடவுள் நம்மீது அன்பு கொண்டதால் தான் நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார்.

அன்பார்ந்தவர்களே, கடவுள் எவ்வாறு நம்மீது அன்பு கொண்டுள்ளார் என்றால், நாமும் ஒருவர் மற்றவர்மீது அன்பு கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(1 யோவான் 5:11)

ஆம் அன்பார்ந்தவர்களே, கடவுளின் அன்பை நாம் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால், அந்த அன்பை நாம் முழுமையாக மற்றவர்களிடம் பகிர்ந்து வாழும் போது, கடவுள் தமது ஆவியை எமக்கு அருளியதால் நாம் அவரோடு இணைந்திருக்கிறோமெனவும் அவர் நம்மிடம் இணைந்திருக்கிறாரெனவும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

ஜோசப் அருள்சாமி–திகனை.

## கவிதைப் போட்டி இல.395



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 17.02.2001

கவிதைப் போட்டி இல.395
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.392

### பரிசுக்குரிய கவிதை

### நிகருண்டோ...?

சின்னப்பறவையே...!
தன்னந்தனியே தவிக்கும் உன்னை-
மானிடனின்
அன்புக்கரம் கொண்டு அள்ளி எடுத்து,
அரவணைத்தாலும்-உன் அன்னையின்
அன்புக்கு நிகருண்டோ...?

கி.ஆனந்தி-வத்தளை.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### அச்சமில்லை....!

பாதகம் செய்யாத,
கைகள்
பாதுகாப்பு என்றால்....
அச்சமின்றி வந்து நிற்கும்
எந்தவுறவும்!

எஸ்.பி.பீற்றர்போல்–
யாழ்ப்பாணம்.

### நல்ல உறவு


உண்மையான
சமாதானம்
உருவாக...
இதுபோல....,
நல்ல உறவு
வேண்டும்!

கி.பு.கபில்ராஜ்-
யாழ்.இளவாலை.

### அடைக்கலம் தேவை!

செல் உள்ள
காட்டை விட
நெல் உள்ள
கரத்தில் வாழ்!

றிஸ்மீனா இத்ரீஸ்-
பெரிய நீலாவணை-01.



### தந்திரம்?

உள்ளங்கை உணவு
உன்னை உள்ளே இழுக்க!
ஊர்க் குருவியாரே
உன்னை நீ உணர்ந்து கொள்!!

ஜி.கே.யோகச்சந்திரன்-அக்கரைப்பற்று-07.

### சமாதானம் கொண்டு வா

சிட்டுக் குருவியே
நெல்மணிகள் தந்து,
பறக்கவிடுகிறேன் உன்னை
நீயாவது தொலைதூரம்
சென்று
சமாதானத்தை கொண்டு வா!

செ.சுபாஷினி-வத்தளை.

### வெள்ள நிவாரணம்?

உள்ளங் கை கூட
நிரம்பவில்லை!
அவர்கள் வழங்கிய
வெள்ள நிவாரணம்!

கா.தனுசியா-மட்/கல்லடி, வேலூர்.

### தூது

மரணத்தின் தூது
உணவின் வடிவில்
புசித்து பசியை
போக்குவோம் என
நெருங்காதே தோழா!

எம்.எச்.எம்.ஷியாம்-
வெல்லம்போட.

### அடைக்கலம்

கூடு கட்டி, கூடிக் குலவி
பாடித்திரிந்த காடுகளும்
குண்டுகளால் அதிர
நாடி, அபயம் தேடி
வந்ததோ இந்த
வடபுலத்துக் குருவி!

வை.சித்திகிருஷ்ணா-
பாண்டிருப்பு-01.

### இன்னும்...!

உயிர்கள் மீது
இரக்கம் காட்டும்
உயிர்கள் உலவிக்
கொண்டிருப்பதால் தானோ...
இன்றும்
இந்த பூமி
பல யுத்தங்கள்
மத்தியிலும்
உயிர்வாழ்கிறது...!

லோ.சுதர்மன்-
கெங்கல்ல.

### நல்ல மனிதர்!

இரை தேடிப் பறக்கும்
எமை நோக்கி
இரக்கமின்றிப் பாய்ந்து வரும்
ஷெல் தாக்கி
உருக்குலைந்து போயிருக்கும்
எம்மினத்தைத் தூக்கி
மனம் கொண்ட பயத்தை
மனதிலிருந்து நீக்கி,
உணவுண்ணக் கொடுக்கும்
இம்மனிதரின் நேர்த்தியோ-நேர்த்தி.

சஹறுல் எம்.சலாஹுடீன்-உக்குவளை.

### புத்திமதி

ஏய் சிட்டுக்குருவி...
சரணடைவு....
புனர்வாழ்வு....
என வலைவிரித்திடும்
மானிடனை நம்பாதே!
பறந்திடு உன் இலக்கை
நோக்கி....!

சி.அபிராமி-கல்கிசை.

# வாசக[ர்] சாலை

## நாலுருவில் வரவேண்டும்

'எஸ்.டி.எஸ் கண்ட பாரதி' கட்டுரைத் தொடரில் எழுத்துச் சிற்பி தரும் தகவல்கள் எதுவும் பாரதி பிறந்த மண்ணிலுள்ளவர்களுக்கே தெரியாமலிருக்கும் என்றுதான் நான் எண்ணத் துணிகின்றேன். இலங்கையில் மட்டக்களப்பில் அவதரித்த அருட்திரு சுவாமி விபுலாநந்த அடிகளாரே, இந்தியாவில் கூட பாரதியாரின் சிறப்பை எடுத்துக்காட்டினார் என்ற உண்மை எமக்கெல்லாம். பெருமைதருகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் எஸ்.டி.எஸ். எழுதிய இக்கட்டுரை அன்றே நூல் வடிவில் வெளிவந்திருக்க வேண்டியது. அவ்வாறு நூல் வடிவம் பெற்றிருந்தால் இந்தகவல்கள் எல்லோர் மனங்களிலும் மறையாமல் உறைந்திருக்கும். இன்று 'பசு இரைமீட்டுவதுபோல்' இரா.பத்மநாதன் இக்கட்டுரையை மறுபதிப்பாகத் தருவதுடன் மட்டுமல்லாமல் நூல் வடிவிலும் இக்கட்டுரை வெளிவருவதற்கு ஆவன செய்வீர்களா?

இத்தொடரை வெளியிட்டு எம்போன்றோருக்கு முரசும் இரா.பத்மநாதனும் தருவதற்காக எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

திருமதி.வசந்தா இளங்கோ-ஸ்காப்பரோ, கனடா.

## சிரிப்புக்கும் சிந்தனைக்கும் 'வாரம் ஒரு வார்த்தை'

என் அபிமான முரசுக்கு;

பத்திரிகை வரலாற்றிலே புதுமை படைத்து 400வது இதழை எட்டிப் பிடிக்கும் முரசுக்கு எனது வாழ்த்துக்கள்.

மேலும் சிரிப்புக்கும், சிந்தனைக்கும் விருந்தான 'இன்று ஒரு தகவல்', 'வாரம் ஒரு வார்த்தையாக' முரசில் வெளிவருவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

பல அரிய தகவல்களையும்-படித்து சிந்தித்து, சிரிக்க வைக்கும் முறையில் சிறப்பாக கையாண்டு உலகெங்கும் பல ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் நெஞ்சங்களை வசீகரித்துக் கொண்டவர் தென்கச்சி கோ.சுவாமிநாதன் அவர்கள்.

அதேபோல், உலகெங்கும் பரந்து வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்களின் அபிமான பத்திரிகையான முரசில் அவரது 'இன்று ஒரு தகவல்' வெளிவருவது மிக்க பயனுடையதாய் இருக்கும்.

அடுத்த வாரம் 'வார்த்தை' எப்போது வருமென்று எதிர்பார்த்துக் காத்திருக்கும் முரசின் உரிமையுள்ள வாசகி.

ஆர்.வசந்தி-லுணுகலை.

## இன ஒழிப்பு?

சமாதானம், பேச்சு வார்த்தை, போர்நிறுத்தம் ஆகிய வார்த்தைகள் தான் கடந்த சில ஆண்டுகளாகப் பரவலாக அடிபடுகின்றன. ஆனால் உருப்படியாக எதுவும் இடம்பெறாமல், வெறும் வார்த்தை ஜாலங்களே தோரணங்களாகக் காட்டப்படுகின்றன.

பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை என்றே திரும்பத் திரும்ப அறிக்கைகள் விடப்படுகின்றனவே தவிர எதைப் பற்றி, எப்படி எப்போது பேசித் தீர்க்கப் போகிறார்கள்? இவையெல்லாம் ஏமாற்று வித்தைகளாகவே தென்படுகின்றன.

முரசில் 'நரன்' மற்றும் 'இராஜதந்திரி' ஆகிய இருவரும் நல்ல கருத்துள்ள விளக்கங்களைத் தருகிறார்கள். 'முரச'த்திலும் உண்மை விளக்கங்கள் தரப்படுகின்றன. இருப்பினும் அரச தரப்பின் நடவடிக்கைகளைப் பார்த்தால், இன ஒழிப்பையே தனது இலட்சியமாகக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது.

உரிமைக் குரலை ஒரேயடியாக நசித்து விட்டால் பிரச்சனை எல்லாம் முடிவடைந்து விடும் என்று திட்டவட்டமாகச் செயற்படுகின்றனர் போல்தான் தெரிகிறது.

ம.நடேசன்-பண்டாரவளை.

'எக்ஸ்ரே ரிப்போர்ட்' மூலம் இலங்கை அரசியல்களம் பற்றிய தகவல்களைத் தரும் 'நரன்', நிலமைகளை சிறந்த முறையில் விளக்குகிறார். அவருடைய பாணி அமரராகிவிட்ட முரசின் முதல்வர் அற்புதனின் தன்மையையே ஒத்திருக்கிறது. முரசின் தரம் உயர்ந்து கொண்டிருப்பதையே இது காட்டுகிறது.

மீ.சோமசுந்தரம்-திருமலை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.




என் அன்பின் முரசே!

வாரந்தோறும் என் உள்ளத்தை மகிழவைக்கும் என் அன்பின் தினமுரசே... உன்னில் என்னை வியக்கவைத்தவைகள் 'கவிதைப் போட்டி', அரசியல் பகுதி, 'தேன் கிண்ணம்', 'பாப்பா முரசு', 'தகவல் பெட்டி' சிந்தியா கேள்வி பதில்', 'இலக்கிய நயம்', சினிமாப் பகுதி என்று உன்னை சொல்லிக் கொண்டே போகலாம் புத்தாயிரமாம் ஆண்டில் பல... சாதனைகள் படைத்து நீ வாழ்க! வாளர்க! என்று வாழ்த்துகிறேன்.

அப்துல் கையூம், காத்தான்குடி-03.

என் அபிமான தினமுரசே;

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. உன்னைப்போன்ற தகுதிக்கு வேறு ஒன்றும் நிகராக மாட்டாது. மேலும் நீ வரப்போகும் புதிய நூற்றாண்டிலே மேலும் பல்வேறு சுவையான சம்பவங்களையும், உண்மையான, நேர்மையான, நீதியான பல சம்பவங்களையும் அனைத்து தமிழ் பேசுகின்ற மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்ற தனிநிகரற்ற பத்திரிகையாக வரவேண்டும் என உன்வாசகர்களில் ஒருவனான நான் யுத்தம் நடக்கும் நாடாம் வன்னியில் இருந்து உன்னை நான் வாழ்க என வாழ்த்தி என் புதுவருட வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என்.ஊரவன்-கிளிநொச்சி

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: 074–514282
தொலை நகல் (Fax):– 074-513266

# புதிய சமாதான பேச்சு வார்த்தைகள் பற்றி

# புலம்பெயர்ந்த தமிழ்மக்களிடம் பெருகிவரும் ஆதரவு!

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய முயற்சிகள் தொடர்பாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் திருப்திகரமான சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. சர்வதேச ரீதியாக புலம் பெயர்ந்து வாழும் இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்களின் மத்தியில் இந்தச் சமாதான முயற்சிகளுக்கு பலத்த ஆதரவு கிடைத்து வருவதை அவதானிக்க முடிகிறது.

நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடனான சமரச முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு அரசியல் தீர்வு நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டுவது சம்பந்தமாக புலம் பெயர்ந்து வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

சிறீலங்கா அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தக் கூடிய ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்கு முன்வர வேண்டுமெனவும் இதன் மூலம் புலம் பெயர்ந்து வாழ்ந்துவரும் தமிழர்களில் பெரும்பாலானோர் மீளவும் தமது சொந்த இடங்களில் வந்து அமைதியாக வாழக் கூடிய சூழ்நிலை தோன்றுமெனவும் தெரிகிறது.

அவுஸ்திரேலியா, பிரிட்டன், கனடா மற்றும் ஏனைய ஐரோப்பிய-ஸ்கண்டிநேவிய நாடுகளில் இயங்கும் பல்வேறு தமிழ் அமைப்புகளும் புதிய சமரச முயற்சிகளைப் பெரிதும் வரவேற்றுள்ளன.

இதே வேளை, வெகு விரைவில் ஆரம்பச் சுற்றுப் பேச்சுக்களில் அரச மற்றும் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் பங்குபற்றலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஆரம்ப சுற்றுப் பேச்சுக்கள் எங்கே, எப்போது நடைபெறும் என்ற விவரங்கள் இன்னும் ஓரிருவாரங்களில் தெரிந்துவிடுமென்று அவதானிகள் கூறுகின்றனர்.

*தமிழ் மக்கள் பயணம் செய்யும்*

## ரயில்களில் நடைபெறும் திட்டமிட்ட கொள்ளைகள்?

கடந்த 3ம் திகதி சனிக்கிழமை இரவு கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்ட புகையிரதத்தில் இடம் பெற்ற கொள்ளையில் தமிழ் பிரயாணிகளிடமிருந்து பல இலட்சக்கணக்கான ரூபா பணமும், தங்க நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன.

ராகம என்ற நிலையத்தில் ரயிலில் ஏறிய மூவரும், நேகம என்ற தரிப்பிடத்தில் வைத்து ஏறிய மூவரும் இணைந்தே திட்டமிட்டபடி இந்தக் கொள்ளையில் ஈடுபட்டனர் என்பதை பயணிகள் பலர் உறுதியாகக் கூறுகின்றனர்.

இக்கொள்ளையர்கள் கூரான ஆயுதங்களையும் துப்பாக்கிகளையும் காட்டியே பயணிகளிடமிருந்து பணத்தையும், நகைகளையும் கொள்ளையிட்டுள்ளனர்.

இந்த ரயிலில் பாதுகாப்பு அலுவலர்கள் பலர் உரிய சீருடைகளுடன் அவ்வப்போது உலா வந்துள்ளனர். அவ்வாறிருந்தும் இந்தக் கொள்ளை துணிகரமாக இடம் பெற்றிருக்கிறது. இதனைப் பார்க்கும் போது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும், கொள்ளைக் கோஷ்டியினருக்குமிடையில் நெருக்கமான உறவு இருந்து வந்திருக்கிறது என்றே கருத இடமுண்டு.

பொதுவாக தமிழ் மக்கள் பயணம் செய்யும் திருகோணமலை மற்றும் வவுனியா செல்லும் ரயில் வண்டிகளில் அடிக்கடி இத்தகைய கொள்ளைகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றையிட்டு ரயில்வே திணைக்களமோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ உரிய நடவடிக்கை எடுத்து இத்தகைய கொள்ளைகள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ■

## சுதந்திரதினமும் துக்கதினமும்

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. புதிய கட்சியொன்றை ஆரம்பித்து அகிம்சை வழியில் போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள் எனக் கூறப்படும் பல்கலைக் கழக மாணவர்கள் கறுப்புப் பட்டியணிந்து துக்கதினத்தை அனுஷ்டித்ததுடன் சுதந்திரதினத்துக்கு எதிரான சுவரொட்டிகளையும் ஒட்டியிருந்தனர்.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்களிடையே மாவட்டங்களுக்கிடையிலான வேற்றுமை உணர்வுகளும் வளர்ந்து வருகின்றன என்று தெரிகிறது. வன்னியில் இருந்து வந்த மாணவர்களும் ஏனைய மாணவர்கள் சிலரும் பெரும் விவாதங்களில் ஈடுபட்டதாக மாணவர்கள் அளவளாவிக் கொண்டதைக் கேட்கக்கூடியதாக இருந்தது.

## ஊர்காவற்றுறைக்கு மின்சாரம் எப்போது கிடைக்கும்?

(யாழ் நிருபர்)

கடந்த 11 வருட காலமாக ஊர்காவற்றுறைக்கு மின் விநியோகம் வழங்கப்படவில்லை. 1990ம் ஆண்டு ஊர்காவற்றுறையில் இருந்து இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களுக்கும் சென்றனர். இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் பெரும்பாலான மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர். அதே போன்று ஊர்காவற்றுறையிலும் தற்சமயம் பல்லாயிரக்கணக்கானோர் தமது சொந்த வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

யாழ் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களுக்கு மீளவும் மின்சாரத்தை வழங்கியவர்கள் ஊர்காவற்றுறைக்கு ஏன் இன்னும் வழங்கவில்லை? இதனால் பெரும்பாலான மக்கள் விசனம் கொள்ளுகின்றனர். இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்ட போது "மின் இயந்திரம் வந்து விட்டது. ஒரு சில நாட்களில் வேலைகள் தொடங்கப்படும்" என்றார்கள். ஆனால் வருடங்கள் சென்றும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

## சோதனைச் சாவடி பெயர் பதிவு நீக்கம்!

### முரசு செய்தியால் ஏற்பட்ட நன்மை!

யாழ்ப்பாணத்தில் இருந்து தினமும் காலையில் 780,777,776 ஆகிய மூன்று பஸ்களும் புறப்படுகின்றன. இவை பண்ணை, அல்லப்பிட்டி, துறையூர், மடத்துவெளி ஆகிய சோதனைச் சாவடிகளில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுகின்றன.

அத்துடன் புதிதாக முளைத்துள்ள சோதனைச் சாவடியில் அனைவரும் இறக்கப்பட்டு பெயர் விவரங்களும் பதியப்படுகின்றன. இதனால் பாடசாலை சமூகங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றன. 8.00 மணிக்கு தொடங்க வேண்டிய பாடசாலை தினமும் தாமதித்தே தொடங்கி வந்தது. புதிதாக முளைத்துள்ள சோதனைச் சாவடி சோதனையால் 10.00மணிக்கே பாடசாலை ஆரம்பிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

இதனால் தீவுப்பகுதி மாணவர்கள் யாழ் நகருக்குச் சென்று தமது கல்வியைத் தொடர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது. இத்தகைய நிலையை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்துச் செயற்பட்டால் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த உதவும். கடந்த இரண்டு மாதங்களின் முன்பும் ஊர்காவற்றுறை பொலிஸ் சோதனைச்சாவடியால் பெயர்கள் பதியப்பட்டு நேரத்தை வீணாக்கியதை தினமுரசு சுட்டிக்காட்டியதை அடுத்து அந்த நிலை நீக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ■

## பாரதியார் பாடலுடன் படையினர் பிரசுரம்!

முதன் முறையாக அட்டை வடிவில் பிரசுரமொன்றைப் படையினர் வெளியிட்டுள்ளனர். இவை மட்டக்களப்பில் பொது மக்களிடம் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அந்த அட்டையின் ஒரு புறத்தில் புலிகளின் சமாதியில் காணப்படும் இலங்கை வரைபடம், தலைகீழாகக் குத்தப்பட்ட துப்பாக்கி,மாவீரர்களாகச் சித்தரிக்கப்படும் சிறுவர் சிறுமியர் ஆகியோர் காணப்படுகிறார்கள்.

மறுபக்கத்தில் பாரதியாரின் பாடல் வரிகள்; "அடுத்த சந்ததியின் ஆளும் வளரணும், அறிவும் வளரணும் என்று பாடினான் பாரதி... ஆனால், இந்த அழிவின் நாயகர்கள் உங்களைச் சுடு காட்டிற்கல்லவா அழைத்துச் செல்கின்றனர்.

உங்கள் குழந்தைகளுக்குச் சுடுகாடு, பிரபாகரனின் குழந்தைகளுக்கு சுக வாழ்வு

உங்கள் அயலவனோடு கைகோர்த்து எல்.ரீ.ரீ.ஈயினரை எதிர்க்கத் துணியுங்கள்!" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

## புலிகளைத் தடை செய்யக்கோரி 10 இலட்சம் கையொப்பம் திரட்டல்

(நமது நிருபர்)

பிரிட்டன் புலிகளை பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி சர்வதேச ரீதியில் தடை செய்ய வேண்டும் என்ற வெகுஜனப் போராட்டம் நடத்தப்போவதாக சிஹல உறுமய கூறுகிறது.

இலங்கையின் பல பாகங்களிலும் 10 இலட்சம் மக்களின் கையெழுத்துக்களைத் திரட்டி பிரிட்டன் பாராளுமன்றத்திற்கு அனுப்பவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கையெழுத்துப் பெறும் பணி ஏற்கெனவே ஆரம்பமாகி விட்டது.

இது இவ்வாறிருக்க, சர்வதேசப் பயங்கரவாதிகளின் இயக்கப் பட்டியலில் புலிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டாம் என்று பிரிட்டனைக் கேட்டுக்கொள்வதற்காக ஓரிலட்சம் கையொப்பங்களைத் திரட்டும் மாணவர் முன்னணி கிராமம் கிராமமாகச் சென்று கையெழுத்துக்களை திரட்டி பிரிட்டனுக்கு அழுத்தம் கொடுக்கப்போவதாக சுதந்திர மாணவர் முன்னணி கூறியுள்ளது.

இந்த அமைப்பு ஏற்கெனவே கிழக்குப் பல்கலைக் கழகத்தில் அடையாள உண்ணாவிரதத்தையும், சுதந்திர தினத்தைத் துக்க தினமாகவும் அனுஷ்டித்திருந்தது. அதற்காக கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்த அதே வேளை இலங்கையின் தேசியக் கொடி கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தலை கீழாகத் தொங்கவிடப்பட்டிருந்தது.

## அக்கரைப்பற்றில் புலிகளின் சுவரொட்டி?

### ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரிக்கை!

அக்கரைப்பற்று, திருக்கோவில் தமிழ்ப் பகுதிகளில் இரவோடிரவாக ஒட்டப்பட்டிருந்த புலிகளின் சுவரொட்டிகளால் பொது மக்கள் பெரும் பரபரப்புக்குள்ளாகினர்.

இலங்கையின் 53வது சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனக் கோரி ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அக்கரைப்பற்று தமிழ்ப் பகுதிகளெங்கும் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகளில்; கண்டிப்பாக ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

தங்களின் எச்சரிக்கையை மீறி கடைகளைத் திறந்தால் 10 ஆயிரம் ரூபாவும் வாகனங்களைப் பாவனைக்கு எடுப்போர் 25 ஆயிரம் ரூபாவும் செலுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்ததாம்.

இருப்பினும் அக்கரைப்பற்று, திருக்கோவில் தமிழ்ப் பகுதிகளில் மாத்திரம் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. ஊர் வெறிச்சோடிக் கிடந்தது.

அக்கரைப்பற்று முஸ்லிம் பகுதிகளில் வழமையான அலுவல்கள் இடம்பெற்றன.

## 'வர்த்தகமும் கணக்கீடும்' பாடப்புத்தகம் இன்மையால் க.பொ.த.மாணவர்கள் அவதி!

இந்த வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தமிழ் மொழி மூலம் தோற்றவுள்ள மாணவர்கள் வர்த்தகமும் கணக்கீடும் என்ற பாடத்துக்குத் தோற்றவோ-தோற்றினாலும் சித்தி பெறவோ-முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

புதிய பாடத்திட்டத்துக்கமைய முதன் முறையாக இவ்வாண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை நடைபெற உள்ளது. இத்திட்டத்தின் கீழ் கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு பத்தாம் ஆண்டில் (கடந்த ஆண்டில்) கூட-இப்பாடத்துக்குரிய புத்தகம் வழங்கப்படவில்லை. சிங்கள மொழிப் புத்தகத்தை மொழி பெயர்த்து சில ஆசிரியர்கள் படிப்பித்திருந்த போதிலும் பாடத்திட்டம் முழுமை பெற முடியாத நிலையில் தற்போது இம் மாணவர்கள் பதினோராம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளனர்.

இதுவரை புதிய ஆண்டில் பல பாடப் புத்தகங்கள் வழங்கப்படாதிருக்கின்ற போதிலும், அப்புத்தகங்கள் கட்டாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கல்வியைத் தொடரும் மாணவர்கள் வர்த்தகமும் கணக்கீடும் பாடம் சம்பந்தமாக புத்தகங்கள் இம்முறையும் வழங்கப்படப் போவதில்லை எனக் கவலையுடன் காணப்படுகின்றனர்.

இது இவ்வாறிருக்க, யாழ் குடா நாட்டுக்கு எந்தப் பாடப்புத்தகமும் இதுவரை வழங்கப்படவில்லையென்று யாழ்ப்பாணப் பெற்றோர் முரசுக்குக் கவலையுடன் தெரிவிக்கின்றனர். தமிழ் மாணவர்கள் கல்வி விடயத்தில் அரசு கொள்ளும் கவலையீனத்தைச் சற்றுத் திருத்திச் கொண்டால் என்ன? ■

## கண்டியில் கடந்த தேர்தலின்போது இடம்பெற்ற முறைகேடுகள்?

(கண்டி நிருபர்)

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின் போது பொ.ஐ.முன்னணி கண்டி மாவட்டத்தில் ஓரளவு பின்னடைவு ஏற்படக் காரணமாக இருந்த அப்போதைய ஸ்ரீ.ல.சு.கட்சியின் கண்டி மாவட்ட தலைவராக இருந்த அமைச்சர் திரு.டி.எம். ஜயரத்னவின் செயற்பாடுகள் குறித்து உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள விசாரணை இடம் பெற வேண்டுமென கண்டி மாவட்ட ஸ்ரீ.ல.சு.கட்சி அமைப்பு கோரியுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் போது முறைகேடுகள் பல இருந்ததாகவும் இதனைக் கருத்திற் கொண்டு விசேட அதிரடிப்படையினர் கண்டிக்கு அனுப்பப்பட்டதாகவும் இதனால் பொலிஸாரின் தலையீடுகளும் இருந்ததால் பொ.ஐ. முன்னணிக்குக் கிடைக்கவிருந்த ஆதரவு மேலும் பிரஸ்தாப நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கும் கட்சி அமைப்பு, அமைச்சர் ஜயரத்ன தெரிவித்த குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை எனச் சுட்டிக் காட்டுவதற்கு போதிய ஆதாரங்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியும் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவியுமான திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு இந்த சமாசாரம் பற்றி விசாரித்து உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

கண்டி மாவட்ட ஸ்ரீ.ல.சு.கட்சியின் புதிய தலைவரான அமைச்சர் ஜெனரல் அனுறுத்த ரத்வத்தையின் தலைமையில் கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மத்தியில் பிரஸ்தாப வேண்டுகோள் பற்றிய விளக்கம் வழங்கப்பட்டது. அங்கு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் அமைச்சர் ரத்வத்தையும் அதன் செயலாளர் திரு.மகிந்த அபயகோனும் ஒப்பமிட்டுள்ளனர்.

ஹோட்டலில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கண்டி மாவட்ட தேர்தலின் போது பொலிஸார் நடந்து கொண்ட விதம் பற்றியும் விசாரணை. செய்யும் குழு ஒன்றை நியமிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கூட்டத்தின்போது கட்சியின் அமைப்பாளர்களான ஆர்.ஜி சமரநாயக்க, டி.எம் கருணாரத்ன, எம்.ஜி.ஜயரத்ன மகிந்தானந்த-அலுத்கமகே, திலின தென்னகோன், றவூப் ஹாஜியார், வில்ஸன் குறுப்பு ஆரச்சி, மகிந்த அபயகோன் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

இதே வேளையில் இவ்விடயம் தொடர்பாக கண்டி மாவட்ட கட்சி அமைப்பாளர்கள் மத்தியில் சில கருத்து முரண்பாடுகளும் தலைதூக்கி இருப்பதாகவும் பேசப்படுகின்றது. ■

## ஒழுங்கற்ற மலையக பஸ் சேவைகள்? 15 மைல்வரை தினசரி கால்நடை!

நமது நிருபர்

மலையகத் தோட்டப் பகுதிகளில் தினமும் நூற்றுக் கணக்கானோர் கால் நடையாகப் பயணம் செய்து அவஸ்தைப் படுகின்றனர்.

குன்றும் குழியுமான கல் நிறைந்த பாதைகளில் எதுவித வாகன வசதியின்றியும் தோட்டங்களில் 15 மைல்களுக்கு மேல் நடந்து பயணம் செய்ய வேண்டியுள்ளது.

மலையகத் தோட்டப் பகுதிகளிலுள்ள ஆசிரியர்கள் நாளாந்தம் 10-15 மைல்கள் நடந்து பயணம் செய்வதில் சோர்ந்துவிடுகின்றனர்.

பதுளை-லுணுகலை, ஷோலண்ட்ஸ் எஸ்டேட், அடாவத்தை எஸ்டேட் போன்ற வேறு பல மலையகத் தோட்டங்களிலும் ஒழுங்கான பஸ் சேவைகளற்ற நிலை காணப்படுகிறது.

இதேபோன்று தோட்டங்களிலுள்ள தொழிலாள மக்களும், மற்றும் வேறு கடமைகளுக்காக தினமும் தோட்டங்களிலிருந்து நகரத்திற்கும், நகரத்திலிருந்து தோட்டங்களுக்கும் செல்லும் நூற்றுக் கணக்கானோர் இவ்வாறு பயண வசதிகளின்றி அவஸ்தைப் படுகின்றனர்.

மலையக பஸ் கம்பனிகள் குறிப்பாக ஊவா-பதுளை பஸ் டிப்போக்கள் தோட்ட மக்களின் பயண அவஸ்தையைக் கவனத்திலெடுத்து தோட்டப் புறங்களுக்கு பஸ் சேவைகளை நடத்த வேண்டுமெனக் கேட்கின்றனர். பாடசாலை நேரத்திலாவது இந்த பஸ் சேவைகளை ஒழுங்காக நடத்தினால் ஆசிரியர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பேருதவியாக இருக்கும்.

தேர்தல் காலங்களில் மாத்திரம் தோட்டங்களில் அரசியல்வாதிகளைக் காணமுடிகிறது. இலங்கையின் பொருளாதாரத்தில் முதன்மை வகிப்பது பெருந்தோட்டத்துறை. ஆனால் அங்கு ஊழியம் செய்யும் தொழிலாள மக்கள் காலாகாலமாக அடிப்படை வசதிகளின்றி அவஸ்தைப் பட்டு வருகின்றனர். ■

## சுதந்திர தினத்தன்று மட்டக்களப்பில் புலிக்கொடி கட்டப்பட்ட மாயம்?

சுதந்திர தினத்தன்று மட்டக்களப்பு புளியந்தீவு-சென்மைக்கல் கல்லூரிக்கு முன்பாக உள்ள கம்பம் ஒன்றில் புலிக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

காலை ஏழு மணி வரை இக்கொடி பறந்து கொண்டிருந்தது. பின்னர் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து அவர்கள் வந்து புலிக் கொடியை அகற்றினர். மட்டக்களப்பின் இறுக்கமான பாதுகாப்புள்ள பகுதிக்குள் புலிக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது. பெரும் வியப்பாகவே இருந்தது.

பல்கலைக் கழகத்தில் இயங்கும் அமைப்பினர் சுதந்திர தினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு கூறி துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தனர். மட்டக்களப்பின் சில பகுதிகளில் ஆங்காங்கே ஒரு சில கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. எனினும் பின்னர் அவை பாதுகாப்புத் தரப்பினரால் அகற்றப்பட்டன.

புலிகளின் ஆளுகையின் கீழுள்ள பகுதிகளில் சுதந்திர தினத்தன்று புலிக் கொடிகள் பறந்தன. ■

# விளம்பரப் பகுதி

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



### துலக்ஷி 09.02.2001

மானிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் பரமேஸ்வரன்-கலைவாணி தம்பதிகளின் செல்வப் புதல்வி துலக்ஷி தனது முதலாவது பிறந்த நாளை 09.02.2001 இல் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பா குடும்பத்தினர், சித்தப்பா குடும்பத்தினர், தர்மினி சித்தி, மற்றும் மானிப்பாயில் வசிக்கும், பெரியமாமா, பெரியமாமி, மச்சாள்மார்களான, சூட்டி, சுதா, சுபே, மைத்துனன் கோகுலன், கொழும்பில் வசிக்கும் சின்னமாமா, சின்னமாமி மைத்துனன் தர்சன், மைத்துனி தர்ஷிகா, கீர்த்திகா, கொழும்பில் உள்ள சுபா, சுஜி அக்கா, சியாமளா அக்கா, ஜேர்மனியிலுள்ள சோமேஸ் மாமா, லிங்கேஸ் மாமா, கனடாவில் வசிக்கும் தர்மா மாமா, மற்றும் பாட்டி அளவெட்டியில் வசிக்கும் பூட்டி ஆகியோர் துலக்ஷியை மானிப்பாய் மருதடி விநாயகர் அருள் பெற்று பல் கலைகளையும் கற்று சுகத்துடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் பெப்ரவரி 20 முதல் 25 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

**கல்முனையில் மார்ச் 03, 04 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் பெப்ரவரி 10, 11 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## தெய்வீக மருத்துவம்




சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவா "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 06 1934



மறைவு 17 01 2001

### அமரர் திரு சுப்பையா செல்வநாயகம்


முன்னாள் பொலீஸ் உத்தியோகஸ்தர். (பணிப்புலம் பண்டத்தரிப்பு)

வாழ்க்கைப் பாதையை வடிவமைத்து விட்டு
ஐயா நீர் சென்ற தெங்கே!
செல்வா என்று செல்லமுடன்
அனைவரும் அழைத்த போதிலும்
செல்லா மனமுடன் சென்ற தெங்கே!
அன்புடன் நாம் காணும்
அந்த அன்பு முகம் எங்கே!
ஆண்டொன்று சென்ற போதிலும்
ஐயா நீர் போன தெங்கே!
இனி யார் முகத்தில் உங்களை
காண முடியுமோ என
ஏங்கும் உள்ளங்கள்.
மனைவி. பிள்ளைகள். மருமக்கள்.

திதி: 04 02 2001

தொடர்பு: ஜேர்மன்-
004905215601087.
05215601087.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் நிறுஷன் (Nirusan) 10.02.2001

ஈழத்தில் மணற்காட்டை சேர்ந்த திரு.திருமதி.கோலின்-நிஷாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிறுஷன் தனது முதலாவது பிறந்தநாளை 11.02.2001 ஞாயிறு லண்டன் Mordenல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், தங்கை, தொட்டப்பா, தொட்டம்மா மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-விக்கி மாமா-இலண்டன்.

## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

**எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்**



K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind- S.M.P

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள். ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கைவலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

### RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM
### ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்

(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தாயரிக்கப்பட்டது.)



சாலாமிசிரி. பாதாம்பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாசவாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்கவல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப்போக்கும்.... இருமல். மார்பு. இடுப்புவலி. கால்கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும். நீரிழிவு. பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும். சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம். இளைப்பு. இருமல். மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500gram 300/-, 250gram 150/-

விபிபி ஆடர்கள் கவனிக்கப்படும்.

TALENT A & M

வார நாட்களில் காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணிமுதல் பகல் 12 மணிவரை வைத்தியரை சந்திக்கலாம்

**Ayur Dr.K.Sivasubramaniam முருகானந்தா வைத்தியசாலை**

G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி) கொழும்பு -11. Tel : 384645

## உலகப் புகழ்பெற்ற எக்ஸ் ஒயில்

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984

## 6ம் மாத நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 11 08 1975



ஆண்டவன் அடியில் 21 08 2000

### முருகேசு சுதர்ஷன் (ராசன்)

குடுபத்தின் ஒளி விளக்காய், குல விளக்காய் திகழ்ந்தாயே. உதவிகள் பல செய்தாய் தங்களின் முக மலர்வையும்,
புன்சிரிப்பையும், கனிவான பேச்சையும் நாம் எப்படி மறக்கமுடியும்.
இல்லத்தின் ஒளி மறைந்தாலும் உள்ளத்தின் இருளோ இன்றும் மறையவில்லை. மாயமாய் வந்த காலன் ஜாலமாய் அழைத்ததேன்.
களையிழந்த கணவரும், பிள்ளைகளும் துயர் கொண்டு அழுவதற்கா துயில் கொள்ள மறைந்தீர்கள்.

## 31ம் நாள் கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 12 01 1940



ஆண்டவன் அடியில் 13 01 2001

### முருகேசு மனோன்மணி

சிவத்தோடு மாதமொன்று சென்றாலும் ஓயாது எம் துயர்.
தாய் செய்த தவத்தால் நீ மண்ணில் வந்தாய் சேய் செய்த தவந்தான் என்ன நீ விண்ணில் செல்ல! நோய் கொண்டு போனதோ உன்னை எம் கண்ணைவிட்டு.
வாய் விட்டுப் புலம்புகிறோம். மீண்டுமினிக் காண்பதுன்னை எப்போது?
நீயும் விண்ணுலகில் சாந்தியுடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி-சாந்தி-சாந்தி

தகவல்: எம்.சதீஸ், இல.30, கின்றோஸ் அவனியூ, கொழும்பு-04. தொலைபேசி: 01-582626

# சுதந்திரம் இலங்கைக்கா இனவாதத்திற்கா?

நரன்

கடந்த 4ம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் வழமை போல பலத்த பாதுகாப்பு ஏற்பாட்டுக்கு மத்தியில் கொண்டாடப்பட்டது.

இந்தக் கொண்டாட்டத்தில் இலங்கையர் யாவரும் மனமொன்றி நிற்காவிட்டாலும், இங்கு சுதந்திரத்தின் அர்த்தத்தை நாசம் செய்துவரும் கொடிய யுத்தத்துக்கும் அதன் மூல வேரான இனப்பிரச்சனைக்கும் தீர்வு காண முயற்சிக்கும் கதவைத் திறந்து விடுகின்ற ஒரு செய்தி ஜனாதிபதி யின் உரையில் கிடைக்காதா என ஆதங்கத்துடன் எதிர்பார்த்து நின்றனர்.

அந்த ஆதங்கத்துக்கும் ஒரு வலுவான காரணம் இருந்தது.

அதாவது, இலங்கையின் இனப்பிரச்சனையில் பேச்சு வார்த்தைக்கான நடுவராகச் செயற்பட முன்வந்திருந்த நோர்வே அரசாங்கத்தின் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் கடுமையாக இருந்த இரு தரப்புக்குமிடையே சளைக்காது உறவாடி ஒருவாறு பேச்சுவார்த்தைக்கு இணங்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளார்.

இதில் புலிகள் தரப்பில் யுத்த நிறுத்தமென்பது வலியுறுத்தப்பட்டுவர அரசாங்கம் அதனை ஏற்க மறுத்து நின்ற நிலைமை இப் பேச்சுவார்த்தைக்கு ஒரு முட்டுக் கட்டையாக ஆகியிருந்தது.

ஆயினும் இதனைப் பக்குவமாகக் கையாண்டு பொதுவான ஒருசில இணக்கப்பாடுகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலையை அவர் தோற்று வித்துள்ளார்.

இந் நிலையில்தான் சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்போதான ஜனாதிபதியின் உரை முக்கியத்துவத்துடன் எதிர்பார்க்கப்பட்டது.

அவ்வுரையில் அவர் பேச்சுவார்த்தைக்குச் செல்லக்கூடிய சாத்தியக் கூறுகளை வெளிப்படுத்தியிருந்தமை ஒரு முக்கிய திருப்பமாக உணரப்படுகிறது.

எவ்வாறாயினும் யுத்த நிறுத்தமென்பது பேச்சுவார்த்தையின் போக்கைப் பொறுத்தே முடிவு செய்யப்படுமென அவர் தெரிவித்திருந்த போதிலும், அது பேச்சுவார்த்தைக்கான தடைக் கல்லாக நின்றிருந்த நிலைமை மாற்றப்பட்டுவிட்டது.

இந்த முன்னேற்றம் வரவேற்கப் பட வேண்டிய ஒன்றுதான்.

ஆனாலும் தீர்வு என்ற இலக்கை அடைய இன்னும் எவ்வளவோ தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது.

⊙⊕●

சில நாட்களுக்கு முன் கொண்டாடப்பட்ட இலங்கையின் 53வது சுதந்திரதினம் ஒன்றேயொன்றை மட்டும் தான் எடுத்துக் காட்டுகிறது.

அதாவது அந்நியர்கள் நாட்டை எமது கையில் ஒப்படைத்து 53 வருடங்களாகியும் இன்னும் இந் நாட்டில் வாழும் வெவ்வேறு சமூகங்கள் ஒருமித்து வாழும் வழிமுறையை நாம் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்ற நினைவூட்டலைத்தான் சுட்டிக்காட்டுகிறது.

உண்மையில் இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் 'சும்மா கிடைத்த சுதந்திரமே!' இங்கு இது ஒரு பாரிய சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக, இரத்தம் சிந்திப் பெற்ற சுதந்திரமல்ல.

சந்தர்ப்பவசமாகக் கிடைத்த அதிர்ஷ்டவசமான வாய்ப்பே இச் சுதந்திரம்.

அந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தது 2ம் உலக மகா யுத்தமே!

இரண்டாம் உலகமகா யுத்தத்தினால் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் தாய் நாட்டுக்கே ஆபத்து விளைந்து விட்டிருந்த நிலையில், இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் பெரும் மக்கள் போராட்டமாகக் கிளர்ந்துவிட்ட நிலையில், தவிர்க்க முடியாது இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கிய ஆங்கிலேயர் அதன்பின் அதன் அண்டை நாடான இலங்கையைக் கைவசம் வைத்திருப்பதில் அர்த்தமில்லையென்ற காரணத்தால் இலங்கைக்கும் சுதந்திரம் வழங்கி விட்டுச் சென்றனர்.

இவ்வாறு சும்மா கிடைத்த சுதந்திரமாக இது இருந்ததால், சுதந்திரத்தின் அர்த்தத்தை உணராதவர்களாகவே இந் நாட்டின் அன்றைய அரசியல் தலைவர்களும் இருந்தனர்.

போராடிப் பெற்ற ஒரு சுதந்திரமாக இது இல்லாததாலும், அப் போராட்டத்தில் இந் நாட்டின் அனைத்து இன மக்களின் ஒற்றுமை கட்டியெழுப்பப்படாமையாலும் இங்கு ஒரு வலுவான தேசிய உணர்வு மேலோங்கி வரவில்லை.

பதிலாக வெறும் இன உணர்வே பின்னர் தளைத்தெழுந்தது.

இலங்கையர் என்ற உணர்வைவிட சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது.

ஆனால் ஒரு பாரிய சுதந்திரப் போராட்டத்தை நடத்தியதன் விளைவாக நூற்றுக் கணக்கான இனங்களும் மொழிகளும் இருக்கின்ற இந்தியாவில் இந்தியர் என்ற தேசிய உணர்வே இன உணர்வு, மொழியுணர்வு யாவற்றையும் விஞ்சி நிற்கின்றது.

அதனால் இலங்கையில் விளைந்த இன உணர்வு, மிக விரைவிலேயே இனவாதமாக உருக்கொண்டு விட்டது.

அது அரசியல் பலத்தால் பூதாகாரமடைந்து பேரினவாதத்தின் எதேச்சாதிகாரத்தை மடைதிறந்து விட்டது.

அதனால் இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரமானது, இனவாதத்துக்குக் கிடைத்த சுதந்திரமாகவே ஆகிப் போனது.

ஆங்கிலேய ஆட்சி நிலவிய காலத்தில் அதற்கு எதிர்ப்புணர்வாக சிங்கள தேசிய வாதம் வளர்ந்து வந்தது.

அப்போது அது ஏகாதிபத்தியத்துக்கு எதிரான குணாம்சத்தைக் கொண்டிருந்ததால் ஒரு முற்போக்கு உணர்வாகத் தொனித்தது.

ஆனால், அதே சிங்களத் தேசிய வாதம் ஆங்கிலேயர் வெளியேறிய பின்பு தமிழர்களுக்கு எதிராகத் திரும்பியது.

அதனால் அது சிங்களத் தேசிய வாதம் என்ற குணாம்சத்திலிருந்து சிங்கள இனவாதமாகப் பரிணமித்தது.

இந்த சிங்கள இனவாதம் சிறுபான்மையினர்மீது பெரும்பான்மையினர் காட்டும் பேரினவாதமாக இருந்தாலும், அது ஒரு சிற்றினவாதத்துக்குரிய அச்ச உணர்வையும் கொண்டிருந்தது.

அது எவ்வாறெனில், இச் சிங்கள இனவாதம், இந்தியாவை தமிழர்களின் பக்க பலமாக எண்ணி அஞ்சியது.

முன்னைய காலங்களில் நிகழ்ந்த இந்தியப் படையெடுப்புகள் பற்றிய அனுபவங்களும் இதற்கு ஒரு காரணமாக இருந்தன.

பாமர சிங்களக் குடிமகன் இந்தியாவை ஒரு தமிழ் தேசமாகவே உணர்ந்தான்.

அதனால் அவர்கள் தம்மை ஒரு சிறுபான்மையினர்போல் உணர்ந்தனர்.

"இந்த நாடு எம்மிடமிருந்து பறிக்கப் பட்டுவிடப் போகிறது, இதற்கு தமிழர்கள் மூலகாரணமாக இருக்கப் போகிறார்கள்" என்ற அச்ச உணர்வு மிகச் சுலபமாகவே சிங்கள அரசியல்வாதிகளால் தமிழர்கள் மீதான இனவாதமாக மாற்றப்பட்டது.

அதனால் சுதந்திரத்தின் பின் இங்குள்ள அனைத்து இன மக்களுமாகச் சேர்ந்து ஒரு தேச நிர்மாணத்தில் ஈடுபடுவதற்குப் பதிலாக, சிறுபான்மையினரை நசுக்கும் முனைப்பில் பேரினவாதிகள் இறங்கி தேசிய உணர்வை இரு கூறாக்கினர்.

இத் தேசத்தின் உரித்தாளர்களாகப் பெரும்பான்மை இனத்தை மட்டுமே நிலை நிறுத்தி, சிறுபான்மையினரை ஒதுக்க விளைந்தனர்.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த உடனடியாக இலங்கையின் அன்றைய ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் செய்ததும் முதல் அரசியல் நடவடிக்கையே இந்த இன ஒடுக்கு முறையின் பிள்ளையார் சுழியுடனேயே ஆரம்பித்தது. அது சுதந்திரம் கிடைத்த அதே ஆண்டில் - 1948ல் பிரஜா உரிமைச் சட்டத்தை நிறைவேற்றி, முதலாவதாக மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமை, வாக்குரிமைகளைப் பறித்தெடுத்தது.

இதில் வெட்கக்கேடான விடயம் என்ன வென்றால், மலையகத் தமிழ் மக்களின் பிரஜாஉரிமையைப் பறிப்பதற்கு ஒரு தமிழ்த் தலைவரும் ஆதரவளித்துக் கை உயர்த்தியமைதான்.

அவர் வேறுயாருமல்ல, அண்மையில் மறைந்த குமார் பொன்னம்பலத்தின் தந்தையான முன்னாள் அமைச்சர் ஜீ.ஜீ. பொன்னம்பலம்தான்.

அவர் செய்த அந்த நீங்காத பழி தான் மலையகத் தமிழ் மக்களுக்கும் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்குமிடையே ஒரு கசப்பான அரசியல் வீரிசலை ஏற்படுத்தியது.

சிறுபான்மைச் சமூகங்களிடையேயும் ஒன்றையொன்று சந்தேகிக்கின்ற போக்குகளுக்கு அடியெடுத்துக் கொடுத்தது.

இதையடுத்து இனவாத அரசியல் பிரவாகம் பெற்றது.

மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஒன்றுக்கு ஒன்று போட்டியாக தமிழ் பேசும் மக்களை நசுக்கும் நடவடிக்கைகளில் இறங்கின.

தமிழ்பேசும் மக்கள் பாரம்பரிய மாக வாழ்ந்த பிரதேசங்களில் திட்ட மிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் ஒருபுறம் அத் தமிழ்ப் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வந்ததுடன், மறுபுறம் அப் பகுதியில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பறிபோய்க் கொண்டிருந்தது.

கல்வி, வேலைவாய்ப்புகளில் புறக்கணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

இனப் பிரச்சனையைத் தீர்க்க தமிழ்த் தலைவர்கள் பேச்சுவார்த்தை மூலம் கண்ட உடன்படிக்கைகள் கிழித்தெறியப் பட்டன.

1957ல் மேற்கொள்ளப்பட்ட "பண்டாரநாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கை," 1965ல் செய்துகொள்ளப் பட்ட "டட்லி சேனநாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கை" என்பன கிழித் தெறியப்பட்டதன் மூலம் இன்றைய மிக மோசமான நிலைக்கு இவ்வினப் பிரச்சனை வளராது ஆரம்பத்தி லேயே தீர்வு காண்பதற்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பங்கள் உதாசீனம் செய்யப் பட்டன.

இதேவேளை தமிழ் பேசும் மக்களுக் கெதிரான அரசியல் சட்ட மூலங்களும் ஒன்றன்பின் ஒன்றாக இயற்றப் பட்டன.

பண்டாரநாயக்காவால் 'சிங்களம் மட்டும்' என்ற இனவாத மொழிக் கொள்கை திணிக்கப்பட்டு அதன் விளைவாக தமிழ் தலைமைகள் 'ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தை' நடத்தி அது 1958ல் ஒரு பாரிய இனக் கலவரத்தை ஏற்படுத்தியிருந்தது. (வாகனங்களின் இலக்கத் தகடுகளில் சிங்கள எழுத்தான ஸ்ரீயை இடுவதற்கு மறுப்புத் தெரிவித்து தமிழரசுக் கட்சியினர் நடத்திய போராட்டமே ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டமெனக் கூறப்படுகிறது.)

இதையடுத்து பல இனக் கலவரங்கள் அடிக்கடி நிகழ்ந்தேறி தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டு, சொத்துக்கள் சூறையாடப்பட்டு, அவர்கள் மீது ஒரு வன்முறை அச்சுறுத்தல் திணிக்கப்பட்டது.

இவ்வகை இனக் கலவரங்களின் உள் நோக்கத்தில் தமிழர்களை வீழ்த்தி வர்த்தகத்தின் ஆதிக்கத்தை சிங்கள மயப்படுத்திக் கொள்ளும் முனைப்பும் இருந்து வந்தது.

இதேவேளை 1964ல் அன்றைய இலங்கை இந்தியப் பிரதமர்களுக்கிடையிலான 'சிறீமா-சாஸ்திரி' ஒப்பந்தத்தின் மூலம் மலையகத் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரை இந்தியாவுக்கு நாடு கடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆங்கிலேயர் இலங்கையை விட்டுச் செல்லும்போது அமுலிலிருந்த டொனமூர் அரசியல் யாப்பில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாக அமைந்திருந்த சரத்துக்களும் 1972ல் சிறீமாவோ பண்டாரநாயக்காவால் அறிமுகப்படுத்தப் பட்ட குடியரசு அரசியல் யாப்பில் நீக்கப் பட்டது.

அத்தோடு தமிழ் மாணவர்களைப் பெரிதும் பாதித்த தரப்படுத்தல் முறையும் பல்கலைக் கழகத் தெரிவில் அறிமுகம் செய்யப்பட்டது.

இத்தகைய பேரினவாத அடக்கு முறைகளின் முன் சாத்வீக அரசியல் வழி முறைகள் கையாலாகாதவையாக ஆகிப் போன நிலையில் தமிழ் மக்களின் தரப்பிலிருந்து ஆயுதப் போராட்டம் தலையெடுத்தது.

இதன் காரணத்தை உணர்ந்து அடிப்படையிலமைந்திருந்த இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணாமல், மாறாக இவ்வாயுதப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கும் மூர்க்கமான இராணுவ அடக்குமுறையை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது ஏவிவிட்டது.

மிகப் பயங்கரமான அடக்குமுறைச் சட்டங்களாக, பயங்கரவாதத் தடைச் சட்டம், புலிப்படைத் தடைச் சட்டம் போன்றவையும் அவசரகாலச் சட்டமும் விதிக்கப்பட்டதுடன் அவ்வப்போது ஊரடங்குச் சட்டங்களும் போடப்பட்டு இவற்றை அடக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வகை தொகையற்ற எண்ணிக்கையில் மக்கள் கிராமம் கிராமமாகச் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டு தடை முகாம்களில் அடைக்கப்பட்டு, நீண்ட நாட்களாக வழக்கு விசாரணையின்றி தடுத்து வைக்கப் பட்டனர்.

பலர் சித்திரவதை செய்யப்பட்டு கொன்று புதைக்கப்பட்டனர்.

போராளிகளின் தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் விதத்தில் அப் பிரதேசங்கள் தீக்கிரையாக்கப்பட்டு அப்பகுதி மக்கள் சகட்டு மேனிக்குச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவ்வாறான அரச அடக்கு முறைகளின் உச்சக்கட்டமாக 1983 ஜூலைக் கலவரம் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் என்றுமில்லாத அளவு மிக மோசமாக நடந்தது.

அதன்போது வெலிக்கடை சிறைச் சாலையில் அடைத்து வைக்கப்பட்ட, குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் உட்பட 53 தமிழ்ப் போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

தெற்கிலிருந்த தமிழ் மக்கள் கப்பல்கள் மூலம் அகதிகளாக யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனர்.

பெருந்தொகையான தமிழ் மக்கள் இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் அகதிகளாக வெளியேறினர்.

இந்தக் கொடுமைகளுக்கு மத்தியில் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன, 'போரென்றால் போர், சமாதான மென்றால் சமாதான'மென தமிழ் மக்களை நோக்கிச் சவால் விட்டார்.

அத்தோடு சூட்டோடு சூடாக, பிரிவினைக்கு எதிரான சத்தியப் பிரமாணமொன்றை அமுலுக்குக் கொண்டுவந்தார்.

இலங்கையின் பேரினவாதம் இத்தனை மோசமான அளவுக்குச் சென்றுவிட்டதன் எதிர் விளைவாக தமிழ் மக்களின் தரப்பில் ஆயுதப் போராட்டத்தில் பெருந்தொகையான இளைஞர் யுவதிகள் இணையலாயினர்.

இதன் விளைவாக யுத்தம் இந் நாட்டை ஓர் அழிவுகரப் பெருநோயாகப் பீடித்துக் கொண்டது.

யுத்தம் இந் நாட்டின் இனவாதம் பெற்றெடுத்த குழந்தை.

அதுவே இங்கு இப்போது மிக முக்கிய மான பிரச்சனையாக முதன்மை பெற்று விட்டது.







ஆனால் யுத்தம் இனப்பிரச்சனையின் ஒரு வெளிப்பாடேதவிர அதுவே தான் பிரச்சனையின் மூலமல்ல.

அதனால் யுத்தத்துக்குத் தீர்வு காணுவதென்பதுமட்டும் பிரச்சனைக்குத் தீர்வாக அமையாது.

மாறாக இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணுவதன் மூலமே யுத்தத்துக்கும் நிரந்தர முடிவு கட்ட முடியும்.

காலில் புண் வருகிறது. புண் பெருத்ததால் காய்ச்சல் வருகிறது. காய்ச்சல் அதி கரித்துவிட்டால் காய்ச்சலை மாற்ற மருந்து கொடுப்பது அவசியம் தான். ஆனால் காய்ச்சலை மட்டுமே நோக்கி அதற்கு மருந்து கொடுத்தால் அதன் ஆபத்து நிலையைச் சற்று தணிய வைக்கலாமேயன்றி புண் இருக்கும்வரை காய்ச்சல் மாறப் போவதில்லை. அதனால் காய்ச்சலைக் கவனிக்கும் அதேவேளை பிரதானமாகப் புண்ணை மாற்ற முனைய வேண்டும். இல்லையேல் காய்ச்சலும் மாறாது புண்ணும் ஆறாது.

இனப் பிரச்சனையால் தோன்றியது யுத்தம். யுத்தத்தை மட்டும் நிறுத்த முனைவது புண் இருக்க காய்ச்சலை மட்டும் நிறுத்த முனைவதைப்போல.

அதனால் இனப்பிரச்சனைக்கான தீர்வே பிரதானமானதேயன்றி யுத்தமல்ல. ஏனெனில் இனப்பிரச்சனை தீராத வரை யுத்தம் நீடித்துக்கொண்டே செல்லும்.

சிங்கள இனவாதமும் தமிழ் இனவாதமும் ஒன்றை ஒன்று மோதிக் கொள்ளுவதன் மூலம் உண்மையில் ஒன்றை ஒன்று வளர்த்து வருகின்ற அதேவேளை இரண்டு மாகச் சேர்ந்து இனப்பிரச்சனையில் தீர்வு ஏற்படாது தடுத்து நிற்கின்றன.

இனப்பிரச்சனையில் தீர்வு ஏற்பட்டால் அது இவ்விரு இனவாதத்தின் இருப்புக்கும் ஆபத்தாகிவிடும் என்பதைத் தெளிவாக அவை உணர்ந்திருக்கின்றன.

அதனால் என்று இலங்கை இனவாதத்திலிருந்து சுதந்திரம் பெறுகிறதோ அன்று தான் அது உண்மையான சுதந்திரத்தைப் பெறும். ▫

# அண்டை மண்டலத்தில்....

# பூகம்பத்தின் பேரழிவு!

**வெ**டிபடு
மண்டத்திடிபல
தாளம் போட-வெறும்
வெளியி லிரத்தக் களியொடு
பூதம் பாட...
பாழாம் வெளியும் பதறிப்
போய்மெய் குலைய...
ஊழாம் பேய்தான் ஓஹோஹோ
வென்றலைய-வெறித்
துறுமித் திரிவாய்...

மகாகவி பாரதி காளியின் ஊழிக் கூத்தினைத்தான் அப்படி அற்புதமாக வர்ணிக்கிறார். அவரது இறவா வரிகளைப் படிக்கின்றபோது நமக்கே மெய் சிலிர்க்கிறது. உலக நாயகி ருத்திர தாண்டவம் ஆடும்போது அண்டசராசரமும் பேரழிவைச் சந்திக்கின்றன என்பது பலரது நம்பிக்கை.

கடந்த ஜனவரி 26ஆம் நாள் குஜராத் மாநிலத்தை உலுக்கிய பூகம்பம் மாகாளியின் ஊழிக்கூத்தின் ஒரு பரிமாணம்தானோ என்று வாய்ப்புதைத்து நிற்கின்றனர் மக்கள். கடந்த 50 ஆண்டுகளில் இந்தியா சந்தித்த பூகம்பங்களில் மிக மிக மோசமானது குடியரசு தின நிகழ்வு என்பதே பொதுவான கணிப்பு.

இறந்தவர்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்தை எட்டிவிட்டது என்று பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னான்டஸ் கூறுகிறார். இல்லை, இல்லை அவ்வளவு இருக்காது, இன்னும் எண்ணிக்கொண்டிருக்கிறோம், 20,000 அல்லது 30,000 என்ற அளவிலேயே உயிரிழப்புக்கள் இருக்கும் என்கிறார் பிரதமர் வாஜ்பேயி. உண்மையென்னவென்பது எவருக்கும் தெரியவில்லை.

ஒட்டுமொத்தமாக நகரங்களும் கிராமங்களும் அழிந்திருக்கின்றன. பல லட்சக் கணக்கான மக்கள் வசித்த பூஜ் நகரம்- ஏன் கச் மாவட்டமே இன்று சுடுகாடாகி விட்டது. சிதிலமாகிப் போன கட்டிடங்கள், இடிபாடுகளில் சிக்கி கொஞ்சங் கொஞ்சமாக மரித்துக் கொண்டிருப்போர், அவர்களில் ஒரு சிலரையாவது காப்பாற்ற முயன்று களைத்துப் போய்விட்ட பன்னாட்டு வல்லுநர்கள், இன்னொரு புறம் எரியும் பிணங்கள், இவற்றையெல்லாம் விட்டு பாதுகாப்பு தேடி ஓடிக் கொண்டிருக்கும் மக்கள், அடிப்படை வசதிகள் அனைத்தும் அடியோடு உருக்குலைந்திருக்கும் நிலை, இப்படிப்பட்ட அவலமானதொரு சூழலில் எப்படி இறந்தோரின் எண்ணிக்கையினை துல்லியமாகக் கணக்கிடுவது?

இன்னுஞ் சொல்லப்போனால், இடிபாடுகளில் சிக்கி இறந்தோரின் உடல்கள் இன்னமும் முழுமையாக மீட்கப்படவில்லை. அந்தப் பணி முடியவே பல நாட்களாகும் போலிருக்கிறது. உதாரணமாக அஞ்சார் என்ற நகரத்தில் குடியரசு தின கொண்டாட்டத்திற்காக சென்று கொண்டிருந்த முந்நூறுக்கும் மேற்பட்ட பள்ளிச் சிறுமியர் அனைவருமே கட்டிடக் குவியல்களில் புதையுண்டு போனதாகத் தான் நம்பப்படுகிறது. ஆனால் மீட்கப்பட்ட உடல்களின் எண்ணிக்கையோ நூற்று சொச்சம்தான்.

பல்வேறு சாலைகளையும் சந்துகளையும் அணுகவே முடியாதபடி கான்கிரீட் குவியல்கள்.

ஆனால் இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டோரில் பலர் அங்கஹீனர்களாகத்தான் வெளியே வந்தார்கள். கையை, காலை வெட்டித்தான் அவர்களை மீட்க முடிந்தது.

அப்படிப்பட்டவர்களின் எதிர்காலம்தான் என்ன? அதுவும் கை, காலிழந்து, எப்படியோ உயிர்பிழைத்தோர், அனாதைகளாகவும் இருக்கிறார்கள். அவர்களது ஒட்டு மொத்த குடும்பமுமே அழிந்திருக்கிறது. அவர்களை யார் காப்பாற்றப் போகிறார்கள்? ஒரு குடும்பத்தில் அக்கா மட்டும் பிழைத்திருக்கிறார். இரண்டு நாட்கள் கழித்து அவரது தம்பி காப்பாற்றப்படுகிறான், கை, காலில்லாமல் தான். அக்கா ஒரு டி.வி.பேட்டியில் நல்ல ஆங்கிலத்தில் கூறுகிறார்-"எங்கள் குடும்பம் வசதியானது. ஆனால் நாங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம், நடுத்தெரு தான். என் தம்பி பிழைத்தது எனக்கு மகிழ்ச்சிதான். ஆறுதல்தான். ஆனால் நான் அவனைப் பராமரிக்கப் போகிறேன் என்றே எனக்கு விளங்கவில்லை."



கானகன்

பூகபம் ஏற்பட்டபோது கட்டிடங்களில் மாட்டிக் கொள்ளாமல், திறந்த வெளிக்கு ஓடித் தப்பியவர்கள்தான் உடல் ரீதியாக எந்தவித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை. ஆனால் அவர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. தங்கள் உடைமைகளனைத்தையும் இழந்து அவர்கள் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் கண்முன்னே தாங்கள் வாழ்ந்த வீடுகள் மடமடவென இடிந்து நொறுங்குவதையும், தங்கள் சொந்தங்கள் இடிபாடுகளில் சிக்கி மடிவதையும் பார்த்து இரத்தக் கண்ணீர் வடித்த இவர்கள், தங்குவதற்கு இடமில்லாமல் திறந்த வெளியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மேல்தட்டு வர்க்கத்தினரும் இதற்கெல்லாம் விதிவிலக்கில்லை.

உதவி அளிக்கும் நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றடைய இரண்டு மூன்று நாட்களாயின. அதுவரை வீடிழந்தவர்களெல்லாம் சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லாமல், கையில் கிடைத்ததை உண்டு, கால் பட்டினி அரை பட்டினி வாழ்க்கை நடத்தியிருக்கிறார்கள். அதுவும் இப்போது குஜராத் பகுதியில் கடுங்குளிர், இரவு நேரங்களில் தவித்துப் போய் விட்டார்கள். கம்பளி போன்றவை இல்லாமல், பெரிய நிறுவனங்களில் உயரதிகாரிகளாக வேலை பார்ப்பவர்கள்கூட இப்படியொரு அகதி வாழ்க்கை வாழ்வதாக செய்திகள். பலர் கார்களுக்குள்ளும் வேன்களுக்குள்ளும் இரவுகளைக் கழிக்கிறார்கள். இடிந்து நொறுங்கியவையில் மருத்துவமனைகளும் அடங்கும். எனவே காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதுகூட பிரம்மப் பிரயத்தனமாகிவிட்டது. உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்த மருத்துவர்கள் மைதானங்களில் தான் சிகிச்சை அளிக்க வேண்டியதாயிற்று.

ஒரு சில சம்பவங்களைத் தவிர பொதுவாக குஜராத் மக்கள் அமைதியான முறையிலேயே தங்களுக்கு நேர்ந்த இழப்புக்களை சகித்துக் கொண்டார்கள். இப்படிப்பட்ட விபத்துக்கள் நேரும்போது, ஏழை பணக்காரர், ஜாதி மத வேறுபாடுகளெல்லாம் அடிபட்டுப் போகின்றன என்பதை உணர்ந்தவர்கள் போல் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து மிகவும் அனுசரணையாக இருக்கிறார்கள்.

"எல்லாம் நம் தலைவிதி" என்று தங்களையே நொந்து கொண்டு, எதிர்ப்பைக் காட்ட திராணியில்லாமல், எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் இந்தியர்களின் :.பாடலிஸம், ஸ்டாயிசிஸம் அவலமானது என்றெல்லாம் மேலை நாட்டோர் எரிச்சல் படுவர்.

சரியோ, தவறோ, கடுமையான சோகங்கள், அரசு இயந்திரத்தின் மெத்தனம் இவற்றுக்கிடையே மக்கள் அமைதியாகவே தத்தம் வாழ்க்கையினை நடத்துவது, நிச்சயமாக இந்திய சமூக அமைப்பிற்கு, வாழ்க்கை முறைக்கு, ஒரு குறிப்பிடத் தகுந்த வெற்றியே. வைரத்திலிருந்து பெட்ரேலியம் வரை பல்வேறு துறைகளில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ள மாநிலம் குஜராத். பூகம்பம் இவற்றையெல்லாம் கடுமையாக பாதித்திருக்கிறது. பெட்ரேலிய தொழிற்சாலைகளோ, அணு உலைகளோ சேதமடையவில்லை. ஆயினும் வேறு பல வழிகளில் தொழில் மற்றும் வர்த்தகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக கண்ட்லா துறைமுகம் ஸ்தம்பித்துவிட்டது.

அஹமதாபாத், ராஜ்கோட் போன்ற நகரங்களில் வைரக்கற்கள் ஏற்றுமதி நின்றுவிட்டது. தொடர்ந்து அதிர்வுகள் நீடிப்பதால் உயிருக்கு அஞ்சி, தொழிலாளர்கள் தங்கள் சொந்த கிராமங்களுக்குச் சென்றுவிட்டனர்.

அழிந்து போன கிராமங்களை நகரங்களை மீண்டும் உருவாக்க பல கோடி ரூபாய்கள் தேவைப்படும். எவ்வளவோ அன்னிய உதவிகள் வந்து குவிந்தாலும் அவையெல்லாம் போதாது. மக்கள்மீது வரிச்சுமை ஏறும். தவிர்க்க இயலாது. கடந்த ஓரிரு ஆண்டுகளாக பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கியிருக்கும் இந்திய பொருளாதாரம் பூகம்பத்தின் விளைவாக மேலும் பின்னடைவுகளை எதிர்நோக்கும் என்று சிலர் கருதுகின்றனர். அதே நேரம் குஜராத்தில் புனர் நிர்மாணத்திற்காக பல கோடி ரூபாய்கள் செலவிடப்படும்போது, அதன் விளைவாக கட்டிடம், சாலை அமைப்பு மற்றும் தொலைத் தொடர்புத்துறை ஆகியவற்றில் உற்பத்தி அதிகரிக்கும், பொருளாதாரம் முன்னேற்றமடையும் என்றும் சிலர் வாதிடுகிறார்கள்.

இதிலே கவனிக்க வேண்டிய இன்னொரு அம்சமும் இருக்கிறது. ஒரிசா கூட கடந்த ஆண்டு புயல் காரணமாக பேரழிவுகளை சந்தித்தது. அங்கும் உதவிகள் குவிந்ததாக சொல்லப்பட்டது. ஆயினும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வு மேம்பட்டதாகத் தெரியவில்லை. மத்திய, மாநில அரசுகளோ, தொழில் முனைவோர்களோ, பெரிய நிறுவனங்களோ, ஒரிசா மீது தனி கவனம் எதும் செலுத்தவில்லை. மிகப் பின் தங்கிய மாநிலம் பின் தங்கியே இருக்கிறது. புயலைத் தொடர்ந்து இப்போது வறட்சியும், பஞ்சமும் ஒரிசா மக்களை வாட்டுகிறது. நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டபோது பதறிய அரசியல் தலைவர்களும் பத்திகைக்காரர்களும் தடாகைதிகள் தொடர்ந்து சிறையில் வாடுகின்றனரே என்றுகவலைப்படுகிறார்கள்.

தற்போது வீடிழந்தோர் எண்ணிக்கையும் அதிகம்; இடிபாடுகளும் மிகமிக அதிகம். எனவே கச் பகுதி மீண்டும் உயிர் பெற்று, வாழ்க்கை அங்கே மாமூலாக இன்னும் அதிக காலமாகும். அதுவரை லட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக, பிழைக்க வழியில்லாமல், தொண்டு நிறுவனங்களை நம்பி வாழப்போகிறார்கள்.

பூகம்பத்தால் ஒரு நல்ல விளைவும் ஏற்பட்டிருக்கிறது. சோதனையான காலகட்டத்தில் எப்படி மக்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாயிருக்கின்றனர் என்று மேலே குறிப்பிட்டிருக்கிறோம். அதைவிடவும் முக்கியம், மத மாச்சரியங்கள் மறக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான். குஜராத் ஹிந்து தீவிரவாத அமைப்பான ராஜ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்) கோட்டை. பாரதீய ஜனதா அங்கு ஆளும் கட்சிக் அடிக்கடி இந்து முஸ்லிம் கலவரங்கள் அடிக்கடி நடைபெறும். உதவிப்பணியில் அதிகம் ஈடுபடும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் தொடர்ந்து இஸ்லாமியர்கள்மீது துவேஷப் பிரச்சாரம் செய்வர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் எல்லாவற்றையும் மீறி இந்துக்களுக் கும் முஸ்லிம்களுக்குமிடையே நல்லுறவு இப்போது முகிழ்த்திருக்கிறது.

பூகம்பத்தில் காயமுற்று சிகிச்சைக்கு வரும் இந்துக்களுக்கு ரத்தம் கொடுப்பதற்காக பல இடங்களிலிருந்து நூறு முதுஸ்லிம் இளைஞர்கள் அஹமதாபாத்தில் குழுமியிருக்கிறார்கள். பல இந்துக்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர். வேறு பல உதவிகளையும் அந்த இளைஞர்கள் செய்து வருகிறார்கள்.

அவர்களின் அந்தப் பணியினைக் கண்டு, மனம் உருகிப்போனார்கள் இந்துக்கள். இதுவரை முஸ்லிம்கள் நுழைந்து தொழ முடியாமல் இருந்த ஒரு மசூதியைத் தாங்களாகவே சுத்தம் செய்து, முஸ்லிம்களை அழைத்து, அங்கே தொழவைத்திருக்கிறார்கள் அவர்கள். எந்தவித அச்சமுமின்றி நாள்தோறும் ஐந்து வேளையும் அந்த குறிப்பிட்ட மசூதியில் முஸ்லிம்கள் தொழுகை நடத்துவதாக செய்திகள் கூறுகின்றன.

கோர தாண்டவமாடிய காளியின் அருளில் புதுவாழ்வு பிறக்குமென்றான் பாரதி.

**தானம் வேள்ளி தவங் கல்வியாவும்**
**தரணி மீதில் நிலைபெறச் செய்வேன்,**
**வானம் மூன்று மழைதரச் செய்வேன்,**
**மாறிலாத வளங்கள் கொடுப்பேன்...**
**ஞானமோங்கி வளர்ந்திடச்செய்வேன்**
**நான் விரும்பிய காளி தருவாள்.** ●

# பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

**ஆ**ச்சி மதவாச்சிக்கு கோச்சியில பேத்திக்கொரு பால் போச்சி வாங்கப் போய் அதுக்குள்ள இருந்த பூச்சியிற்ர கடிவாங்கின மாதிரித்தான் இவையள் எடுத்த நில அவையனையே திருப்பி கடிச்சுப் போட்டுது.

அரசை யுத்த நிறுத்தத்திற்கு தூண்டும்படி தூதரகங்களை நோக்கி ஓடித் திரியிறவைகளைத்தான் குறிப்பிடுகின்றேன்.

யானைக்கு வெட்டிய குழியில் வெட்டியவனே சறுக்கி விழுந்தமாதிரிப் போச்சு புலிகளின்ர வாலைப் பிடிக்கப் போன இவையளின்ர நிலை.

அரசு விட்ட அறிக்கை இவர்களை ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்கு மாற்றி விட்டது.

வரிஞ்சு கட்டிக் கொண்டு வெளி வீதி சுத்தி மேளம் அடிச்சவ இப்ப உள் வீதிக்குள்ள போக மட்டும் ஃபுல் பிரேக் போட்டிட்டினம்.

கூட்டுச் சேர்ந்ததாக கூறி கூக்குரல் போடும் சோ கோல்ட் தமிழ் கட்சிகள், அரசை யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேசுமாறு உலக நாடுகளைத் தூண்ட தூதரகங்களை நோக்கி ஓடித்திரிய அரசு பிளேட்டைத் திருப்பி போட்டு, "கூறுங்கள் புலிகளிடம் பேச்சுவார்த்தைக்கு வரும்படி; கேளுங்கள் அவர்களிடம் தமிழ் ஈழத்திற்கு மாற்றாக எதை ஏற்பார்கள்?" என்று கேட்கும்படி கூற பிள்ளையார் பிடிக்கப் போன இவர்கள் இப்போதும் மரம் ஏறும் நிலையில்.

புலிகள் ஏதோ ஏசுநாதர் போல; கேளுங்கள் தரப்படும்; தட்டுக்கள் திறக்கப்படும், எண்ட நிலையிலா இருக்கின்றார்கள், இவர்களை வன்னிக்கு வரவேற்க? அரசு விட்ட அறிக்கையால் இவர்கள் ஆடித்தான் போட்டினம்.

ஏனெண்டால் புலிகள் பற்றிப் பேசலாம்; புலிக்காகப் பேசலாம், ஆனால் புத்திமதி சொல்லப் போனாலோ அல்லது அவர்களது தாகத்திற்கு தண்ணி காட்டப் போனாலோ, போறவைக்கு பொட்டு இல்லாட்டி பூ வைச்சுப் போடுவான்கள் எண்டு டுமீல்.... டுமீல்.. சத்தத்திற்கு, கலங்கிப் போய் காதுக்கும் நெத்திக்கும் 'காக்கக் காக்க கனகவேல் காக்க' எண்டு கந்த சஷ்டி கவசமெல்லே சொல்லவேணும். 'ஆகாயத்தில போற சனியை ஏணி வைச்சு இறக்கிறது' எண்டுறது உதைத்தான். ஏதோ நாங்களும் அரசியல் கடை விரிச்சுவைச்சிருக்கிறம். அப்பப்ப கொஞ்சம் கத்தினாத்தான் ஏதோ செய்யிறம் எண்டு சனத்திற்கு விளங்கும். அப்பதான் அடுத்த எலக்சனில "நாங்கள் அரசுடன் முன் கதவால் மோதினோம்" (பின் கதவால் என்ன வாங்கினோம் எண்டு பேசமாட்டினம்) "தூதரகங்களை நோக்கி தூதுபோனோம்" (விசா வாங்கி வித்த கதை வெளியில வராது) "திட்ட வட்டமாக, சுடச்சுட பத்திரிகை, T.Vக்கு அறிக்கைவிட்டோம்" எண்டு தங்கட வீரப் பிரதாபங்களை கூறி பெரும் பேறான பாராளுமன்ற கதிரையை காந்தமெனக் கைப்பற்ற முதல்வர் முயல, அவரோட சேர்ந்து உள்ளுக்குள்ள "உவன் பெரியாளா பாக்கிறான்" எண்டபடி இழுபட்டுத் திரியிற மற்றவையளும் கலங்கின குட்டையில மீன் பிடிக்க வலையோட அலைய, அரசு விட்ட அறிக்கை அடி வயிற்றை நல்லா கலக்கித்தான் போட்டுது.

~குத்தியன்~

காந்தியின்ர குரங்குகள் செய்த வேலையை இவையள் மாத்தி செய்யப் போய் மாட்டுப்பட்டிட்டனம்.

1. தீயனவற்றை பாராதே என்றால் புலிகள் செய்வதைப் பாராதே.

2. தீயனவற்றை பேசாதே என்றால் புலிகளைப் பற்றி பிழையாக பேசாதே.

3. தீயனவற்றை கேட்காதே என்றால் புலிகளிடம் கேள்வி கேட்காதே.

மாறி முடிவெடுத்தா மண்டையில தான். "சனம் நம்பட்டும் எண்டுதான் சும்மா புலி மியூசிக்போட்டு ஆடினனாங்கள். எடுத்திருக்கிற ஸ்டெப் மாறினா எங்கட டப்பாடான்ஸ் ஆடிப்போகுமெண்டு தெரியாம அரசு விட்ட அறிக்கையால குஜராத் பூகம்பம் மாதிரிப் போச்சு எங்கட நிலை" எண்டு புலம்புகினம்.

உவங்களோட மாரடிக்கேலாது எண்டுதானே கொழும்பில இருந்து கொண்டு அந்தப் பக்கமும் இல்லாம இந்தப் பக்கமும் இல்லாம ஓடும் புளியம் பழம் மாதிரி ஏதோ 'பொலிடிக்ஸ்' (POLITRICKS) செய்து பிழைப்பு நடத்திற எங்களை பொறுப்புள்ள ஒரு அரசு போட்டுத் தள்ளுறவன்களோட பேசச் சொல்லுறதும் அவங்களை தூண்டச் சொல்லுறதும் வெரி வெரி பாட் அப்றோச் (VERY VERY BAD APPROACH) எண்டு வெந்து வெதும்பிப் போச்சினம். ■

# அலசுவது - இராஜதந்திரி

# நம்பிக்கை நட்சத்திரங்களை பேரினவாத

## கருமுகில்கள் மறைக்கலாகாது!

இலங்கையின் 53வது சுதந்திர தினம் கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர பாராளுமன்ற முன்றலில் கொண்டாடப்பட்டிருந்தது.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இராஜதந்திரிகள், படை அதிகாரிகள், மற்றும் உயர் அரச அதிகாரிகள் ஆகியோர் மட்டுமே விருந்தாளிகளாக அழைக்கப்பட்ட நிலையில் மிகுந்த பாதுகாப்புக்கு மத்தியிலேயே சுதந்திர தின வைபவம் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

ஏனைய நாடுகளின் சுதந்திர தினங்கள் மக்கள் வெள்ளத்தினால் களை கட்டியதாக இருக்கும். ஆனால் இலங்கையின் சுதந்திரதின வைபவம் நடத்தப்பட்ட விதத்தை நோக்கும்போது பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் சுதந்திரப் பொன்விழாவைக் கோலாகலமாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

புத்த பகவானின் புனிதச் சின்னத்தைக் கொண்டிருக்கும் ஸ்ரீ தலதா மாளிகை அமைந்துள்ள கண்டி மாநகரத்தையே ஆட்சியாளர்கள் பொன்விழாக் கொண்டாட்ட மையமாகவும் தேர்ந்தெடுத்திருந்தனர்.

இலங்கையின் பொன்விழாவை ஒரு வெற்றி விழாவாகவும் கொண்டாட சந்திரிக்கா அரசு எண்ணியிருந்தது.

வன்னியில் அச்சமயம் 'வெற்றி நிச்சயம்' என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருந்தது. 1995ம் ஆண்டு சூரியக்கதிர் எனப் பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த ஆயுதப்படையினர், தொடர்ந்து முன்னேறி வன்னிப் பெரு நிலப்பரப்பினூடாக வடக்கிற்கும் தெற்கிற்குமிடையேயான தரை வழிப்பாதையைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர எத்தனித்தனர்.

எனவே யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி, மற்றும் வவுனியாப் பிரதேசங்களூடாகத் தென்னிலங்கைக்குச் செல்லும் 'கண்டி வீதி' என்றழைக்கப்படும் நெடுஞ்சாலையை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்பதே 'வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது.

கண்டி மாநகரில் பிரமாண்டமான முறையில் ஏற்பாடாகியிருந்த சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டத்தின் போது, வெற்றி நிச்சயம் படை நகர்வை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து வன்னிப் பகுதியூடாகச் செல்லும் நெடுஞ்சாலை வழியாக விசேட இராணுவ அணியொன்றை வெற்றி முழக்கத்தோடு யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நகர்நோக்கிக் கொண்டுவரவும் அரசு திட்டமிட்டிருந்தது.

ஆனால் ஐம்பதாவது சுதந்திர தினத்துக்கு ஒரு சில தினங்கள் முன்பதாக தற்கொலைக் குண்டு தாரிகளினால் செலுத்தப்பட்ட லொறி வண்டியொன்று கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் வாசற்புறத்தை மோதித் தகர்த்துவிட்டிருந்தது.

இச்சம்பவம் பொன்விழாக் கொண்டாட்ட ஏற்பாடுகளைக் கண்டியில் சிதறடித்துவிட்டிருந்தது. கூடவே யாழ்ப்பாணத்திலிருந்து வன்னியூடாக கண்டிக்கு வர ஏற்பாடாகியிருந்த இராணுவத்தினரின் வெற்றிப் பயணத் திட்டத்தையும் தவிடு பொடியாக்கிவிட்டிருந்தது.

இதனையடுத்து கண்டி மாநகரிலிருந்தும் சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்ட வைபவம் கொழும்பு கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுரவுக்கு இடம்மாறியிருந்தது.

இதேவேளை வன்னியில் இடம் பெற்றுக் கொண்டிருந்த 'வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கைகூட, கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 'ஓயாத அலைகள்' தாக்குதலையடுத்து முழு அளவில் மூன்று வருடங்களுக்கு முன்னர் தோல்வி கண்டிருந்தது.

இந்நிலையில் ஐம்பதாவது சுதந்திர பொன்விழாக் கால கட்டத்தின்போது ஏற்பட்ட அனுபவத்தைக் கருத்திற்கொண்டே அரச தரப்பு மிகுந்த எச்சரிக்கையோடு கடந்த ஒரிருவருடங்களாக சுதந்திரதின வைபவங்களை மட்டுமல்ல, எந்தவொரு முக்கிய அரச வைபவத்தையும் மிகவும் பாதுகாப்புடன் நடத்தி வருவதையே காண முடிகின்றது.

இத்தடவை இடம்பெற்ற ஐம்பத்தி மூன்றாவது சுதந்திர தின வைபவம் பல்வேறு விதத்திலும் முக்கியத்துவம் மிக்கதாகவே விளங்கியிருந்தது.

ஏனெனில் நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமரச முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளதையடுத்து அரச தரப்பையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வைப்பதில் பகீரதப் பிரயத்தனங்கள் இடம் பெற்று வருகின்றன.

நோர்வேயின் இலங்கை விவகாரத்துக்கான விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இத்தடவை சுதந்திர தினத்துக்கு முன்பதாகக்கூட ஜனாதிபதி சந்திரிக்கா, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், வெளிவிவாகார அமைச்சர் ஆகியோரை தமது நடவடிக்கைகள் தொடர்பாகச் சந்தித்திருந்தார்.

இதனையடுத்து தாயகம் திரும்பும் முன்னர் திரு.சொல்ஹெய்ம் கருத்து வெளியிடுகையில் சமரச நடவடிக்கைகள் குறித்த ஆரம்ப முயற்சியின் இறுதிக் கட்டத்தில் இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

திரு.எரிக் சொல்ஹெய்ம் கடந்த ஆண்டில் தமது சமரச முயற்சிகளை ஆரம்பித்திருந்தார். கண்டனச் சொல் வீச்சுக்கள், நோர்வே தூதரகம்மீது குண்டு வீச்சு, கல்வீச்சு போன்ற அசம்பாவிதங்களுக்கும் அவர் முகங்கொடுத்திருந்தார்.

ஆயினும் தமது முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதிலேயே அவர் தீவிரமாக இயங்கி வருகின்றார்.

ஜனாதிபதி சந்திரிகா உட்பட ஆளுங்கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள், மற்றும் எதிர்க் கட்சித் தலைவர், ஆகியோரையும் திரு.சொல்ஹெய்ம் அடிக்கடி சந்தித்து தமது செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்து வருகின்றார்.

இது தவிர தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனையும் வன்னியில் சென்று சந்தித்ததோடு லண்டன் மாநகரில் இருந்து வருகின்ற எல்.ரி.ரி.ஈ அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தையும் திரு.சொல்ஹெய்ம் சந்தித்து வருபவராக இருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கடந்த ஜனவரி மாதம் 24ந் திகதி இரண்டாவது தடவையாகவும் ஒரு தலைபட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தது.

இந்த யுத்த நிறுத்த அறிவிப்போடு அரசியல் தீர்வுப் பேச்சுக்களுக்கான ஆரம்பக்கட்ட முயற்சிகளையும் துரிதப்படுத்த வேண்டுமென்பதே நோர்வே விசேட பிரதிநிதியின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இந்நிலையில் இத்தடவை சுதந்திர தின வைபவத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக தமது உரையில் குறிப்பிட்ட விடயங்கள் வரவேற்கத் தக்கவையாகவே இருக்கின்றன.

எவ்விதத்திலும் உணர்ச்சிவசப்பட்டோ அல்லது போர் முரசம் கொட்டும் பாங்கிலோ ஜனாதிபதி சந்திரிக்கா தமது இவ்வருட சுதந்திரதின உரையை நிகழ்த்தவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தமது அரசாங்கம் தயாராகவே இருப்பதாகவும் இனப்பிரச்சனை விரைவாகத் தீர்த்து வைக்கப்பட்டு நாட்டில் சமாதான சகவாழ்வு மலருவதையே தாம் பெரிதும் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை தனது 53 வது சுதந்திர தினத்தைப் பூர்த்தி செய்துள்ள இவ்வேளையில் குறுகிய இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பாற்பட்ட வகையிலேயே பிரச்சனைகளைக் கையாள வேண்டியதாக இருக்கின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த கால கட்டத்தில் இருந்த சிங்கள அரசியல் தலைவர்களிடையே எதிர்காலச் சந்ததியைப் பற்றித் தகுந்த விதத்தில் சிந்திக்கும் தீர்க்கதரிசனம் காணப்பட்டிருக்கவில்லை.

இந்நாட்டில் பெரும்பான்மையினராக இருக்கும் சிங்கள மக்கள் பற்றியும், அவர்களது மதமான பௌத்தம் பற்றியுமே அன்றைய சிங்களத் தலைவர்கள் சிந்தித்துச் செயலாற்றினார்களே தவிர, இலங்கையில் இருக்கும் ஏனைய இனங்கள், அவர்களின் மொழி, மதம், பிரதேசப் பரம்பல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றி அத்தலைவர்கள் ஆக்கபூர்வமாகச் சிந்திக்கத் தவறியிருந்தனர்.

இதன் வெளிப்பாடாகவே சுதந்திரமடைந்து 53 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள போதிலும் அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக இலங்கை எவ்வித ஈடேற்றத்தையும் காண முடியாதிருக்கின்றது.

கடந்த 25 வருடகாலத்தில் இனத் தகராற்றையே மையமாகக் கொண்ட இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனை மிகமோசமான கட்டத்தை எட்டியதாக இருக்கின்றது.

ஜனாதிபதி முதற்கொண்டு இலங்கையின் அனைத்து மக்களுமே இனப்பிரச்சனையின் தாக்கத்தை அனுபவித்தவர்களாக இருக்கின்றனர்.

ஓர் அரசியல் பிரச்சனையாகவே இருந்த இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழர் பிரச்சனை, இன்று இலங்கையில் பாரிய சமூக, பொருளாதார, மற்றும் இராணுவரீதியான நெருக்கடிகளையும் ஏற்படுத்தி விட்டதாகவே இருக்கின்றது.

கடந்த பதினேழு வருடகாலமாகத் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற வடக்கு-கிழக்கு யுத்தம் நாளுக்கு நாள் பூதாகரமான தாக்கங்களையே நாட்டில் ஏற்படுத்தி வருகின்றது.

எனவே யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்ற அரசதரப்பும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தம்மிடையேயான மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலமே ஆரோக்கியமான அரசியல் பேச்சுக்களுக்கு அத்திபாரமிட முடியும்.

ஜனாதிபதி சந்திரிக்கா தமது சுதந்திர தின உரையில் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுக்களை நடத்தத் தாம் தயாராக இருப்பதாகக் கூறியிருந்தார்.

இருந்தபோதிலும் ஜனாதிபதி தமக்குள்ள விருப்பத்தை பேரினவாத சக்திகளின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் வெற்றிகரமாக நிறைவேற்றுவாரா? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

கொழும்பு கோட்டே ஸ்ரீ ஜவர்த்தனபுரவில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் சுதந்திர தின வைபவம் கொண்டாடப்பட்ட சமயத்தில், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாத யாத்திரையொன்றைக் கண்டியில் ஆரம்பித்திருந்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சீரழிவு, நிர்வாகச் சீர்கேடு, அரசியல் குளறுபடிகள் என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்திலேயே கண்டியில் இருந்து பாதயாத்திரை மேற்கொள்ளத் தாம் முன்வந்ததாக திரு.ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

ஐ.தே.க. தலைவர் ரணில், சந்திரிகா அரசுக்கு எதிராக மேற்கொண்ட இக்கண்டியாத்திரையை நோக்கும் போது சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவின் உறவினரும் மறைந்த ஜனாதிபதியுமான ஜே. ஆர்.ஜயவர்த்தன நடத்தியிருந்த கண்டி யாத்திரையே நினைவுக்கு வந்திருந்தது.

காலஞ்சென்ற ஜே. ஆர்.ஜயவர்த்தன அன்று நடத்திய கண்டியாத்திரையே இலங்கையில் இனப்பிரச்சனை தொடர்பாக ஏற்படக்கூடிய முதலாவது தீர்வு முயற்சிக்கு வேட்டுவைப்பதாக அமைந்திருந்தது.

ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தையாரான மறைந்த பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா, காலஞ்சென்ற தமிழ் அரசியல் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் செய்து கொண்டிருந்த பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியச் செய்யும் விதத்திலேயே ஜே. ஆர்.ஜயவர்த்தனாவின் அன்றைய கண்டியாத்திரை அமைந்திருந்தது.

அந்த யாத்திரையையடுத்து பண்டா-செல்வா ஒப்பந்தம் மட்டும் கிழித்தெறியப்பட்டிருக்கவில்லை. இலங்கையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சமத்துவமாக அரசியல் உரிமைகளைப் பெற்று வாழலாம் என்ற நம்பிக்கையும் சிதறடிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் இன்றைய பிரச்சனை மிக மோசமான கட்டத்தை எட்டி இராணுவ ரீதியான கெடுபிடிகளுக்குள்ளாகியதாகவே உருமாற்றம் பெற்றுள்ளது.

அரசியல் ரீதியாக இருந்து வந்த இலங்கையின் இனப்பிரச்சனை இராணுவ ரீதியான போராட்டமாக முறுக்கேறியமைக்கு அன்று கண்டியாத்திரையை நடத்திய அந்நாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்த்தனவே மூலகாரணமாக இருந்தார்.

நிறைவேற்று அதிகாரத்தோடு பத்து வருடகாலத்துக்கும் மேலாக ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர்.ஜயவர்த்தன முயன்றிருந்தால் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ஒரு நேர்த்தியான தீர்வைக்கண்டிருக்க முடியும்.



ஆனால் ஜே.ஆரின் ஆட்சியில் இடம்பெற்ற வடக்கு-கிழக்கு மக்கள் மீதான இராணுவரீதியான அணுகுமுறைகளே இனப்பிச்சனையைப் பெரிதும் சிக்கலாக்கிவிட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரச் சீரழிவுக்கெதிராக தமது கட்சியின ரோடு கண்டியிலிருந்து பாதயாத்திரையை நடத்தியிருந்தார்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருடகால ஆட்சியில் கையாளப்பட்ட தவறான அரசியல் நடவடிக்கைகளின் தாக்கமே இன்றைய ஆட்சியிலும் பிரதிபலித்து வருவதைக் காண முடிகின்றது.

இந்நிலையில் சர்வதேச சமூகத்தின் ஒத்தாசைகளுக்கு மத்தியில் இனப் பிரச்சனைத் தீர்வு குறித்த நம்பிக்கை நட்சத்திரங்கள் வானில் தோன்ற ஆரம்பித்துள்ள தருணத்தில் பேரினவாதம் என்ற கருமுகில் கூட்டங்கள் அந்த நட்சத்திரங்களை மறைத்து விடாதிருப்பதையே ஜனாதிபதி சந்திரிகா உறுதி செய்யவேண்டியவராகின்றார்.

---

# அதிரடி அய்யாத்துரை



**ஜனநாயகக் கட்சிச்** செயலாளர் நாயகத்தின் யாழ்ப்பாண விஜயம் சில வட்டாரங்களில் கடும் புகைச்சலைக் கிளப்பியுள்ளதாம். அமைச்சராக இருந்தும் அவரால் யாழ்ப்பாணத்தில் வந்து நின்று மக்களைச் சந்திக்க முடிகிற போது வெறும் எம்.பியாக இருக்கின்றவர்கள் சனங்களைச் சந்திக்கப் பயப்படுவது புரியாத புதிர். தேர்தலில் வாக்குகளைப் பெற்றுவிட்டால் பின்னர் தத்தம் அலுவல்களைக் கவனிப்பதற்கு பதிலாக மீண்டும் மீண்டும் அங்கு போய் நிற்கிறதால சனம் எங்களை விடுகுதில்லை. இந்த விநாயகப் புலம்பலுக்கு விளக்கம் என்னவோ?

**கண்ணாடி வீட்டுக்குள்ளிருந்து** கல்லெறியக்கூடாது என்று போதனை செய்பவர்கள் கண்ணாடி மாளிகையில் அம்மணமாக வாசம் செய்யலாமோ? என்கிறார் ஸ்ரீமான் பொதுசனம்.

**ஒன்று பட்டால் உண்டு நன்மையே** என்று உணர்ந்து விட்டதாக கூறி கை கோர்த்த தமிழ்க் கட்சிகள் மத்தியில் கசப்புக்கள் அதிகமாகி இடைவெளி கூடி வருகிறதாம். கப்பம், வரி வாங்கல், போன்றவற்றில் ஈடுபட்டிருப்பவர்கள் அதைக் கை விட வேண்டும்.. இவ்வாறு ஆனந்தமான சங்கதியர் ரி.பி.சிக்கு (T.B.C) பேட்டி கொடுத்துள்ளார். இந்தப் பேட்டியின் பின்னுதைப்பு பலமாக இருக்கிறதாம்.

**ஆயுதக் குழுக்களுடன்** கை கோர்த்தால் சனம் காறித் துப்பும் என்று முழங்கிக்கொண்டு திருகோணமலையில் தனி வழி போனதால் இருந்ததையும் இழந்தாச்சு, இப்பவாவது ஞானம் வந்ததே எண்டு சந்தோஷப்பட்டதெல்லாம் வெறும் நீர்க்குமிழி...

**மூத்த தமிழ்** அலுவலகமொன்றின் தலைமை அலுவலகம் விரைவில் மூடப்பட இருக்கிறதாகப் பேச்சடிபடுகிறது. பணம் தட்டுப்பாடாம். தொண்டர்களுக்கு சிரமம், சங்கடம்.. ஆனால் அனைத்து செலவுக்கும் இயக்கப் பணத்தை தண்ணியாகக் கரைக்கும் சாந்தமானவர் வழக்கு வருமானத்தை மட்டும் சுளையாக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கிறாராம்.

**சர்வதேச ரீதியாக** தேடப்படுபவர் பட்டியலில் புலித்தலைவர்களின் பெயர் சேர்க்கப்பட்டதில் அயலகத்தவர்களின் பங்கும் அதிகமாம். அப்படியிருக்க அவை தான் ஏகப் பிரதிநிதிகள் என்று கூப்பாடு போடுபவர்களுக்கு அள்ளி வழங்கப்பட்டதாக சரி நிகராகச் சொல்லப்படுகிறது. உண்மை என்னவோ? மறுப்பறிக்கை எதுவும் வராத மர்மம் என்னவோ?

**"இது** உங்களை அழிக்கவே நடந்த மிக பயங்கரமான பூஜை என்று நினைக்கிறேன்," என்றான் யோகேஷ்.

"என்னைத்தான் என்று எப்படி அவ்வளவு உறுதியாக சொல்றீங்க?"

"புரிய வைக்கிறேன், மறுபடியும் கேசட்டை 'ரீவைன்டு' பண்ணி ஆரம்பத்திலிருந்தே போடுகிறேன். ரத்னாவோட முக மாறுதலை டீப்பாக கவனியுங்க."

சொன்ன யோகேஷ், கேசட்டை முதலிலிருந்து ஓட விட்டான்.

ரத்னா, நனைந்து மொட்டவிழ்ந்த மலர் போல் சிரித்தாள். மைக் கண்களில் போதை ஏற்றி பாடலுக்கேற்ப வாயசைத்து ஆடிப் பாடி கொண்டே, வந்து கதாநாயகன் சிவப்பிரகாஷை கட்டிப் பிடித்தாள். புல் தரையில் உருண்டபோது, திடீரென்று முகம் மாறினாள்.

அந்த இடத்தில் தான் மண்டை ஒடு!

## திகில் தொடர்

அரும்பி வெளுத்து போன அவருடைய முகத்தையே பார்த்தான்.

"இப்போது சொல்லுங்க... உங்களோட எதிரி யார்?"

"எனக்கா? எதிரியா? அப்படி யாரும் கிடையாது." படஅதிபர் திட்டவட்டமாக சொன்னார்.

"கண்ணுக்குத் தெரியாத பயங்கரமான எதிரி வந்து விட்டான். மங்கள விலாஸ் என்ற உங்கள் மாளிகையே பேய்கள் உறையும் பேய் மாளிகையாக இருக்கிறது. பிரமாண்டமான ஓவியத்தில் தெரிந்து கொண்டல் ராஜா கண்களை உருட்டி பார்த்ததை நானே கண் டேன்."

யோகேஷ் சொன்னதை பயத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார் பட அதிபர்.

"உங்க வாட்ச்மேன் பேரென்ன?" யோகேஷ் கேட்டான்.

பயம் காரணமாக பட அதிபருக்கு பேச்சே வரவிலலை.

சமாளித்து மேலும் வியர்த்து. "ச.. சம்பூர்ண்..."

தன்னை ஏரியிலிருந்தும், தற்கொலையிலிருந்தும் காப்பாற்றியவன் என்ற காரணத்தால் உரிய மதிப்பும் கொண்டிருந்தாள்.

பட அதிபரின் வெள்ளை நிற ஏர்கண்டிஷன் சொகுசுக்காரான டயோட்டாவை டிரைவர் குருசாமி ஓட்டிவந்து காட்டேஜ் முன்னால் நிறுத்தினான்.

ரத்னாவை, யோகேஷ் அழைத்து வர பட அதிபரும், டைரக்டரும் எதிர்ப்பட்டனர்.

தன் மகளை யோகேஷுடன் தன்னுடைய துணையின்றி அனுப்ப சவுந்திரவல்லியின் மனம் ஒப்பவில்லை.

"புரொடியூசர் சாரே... தப்புத் தண்டா... ஏதும்..." சவுந்திரவல்லி சந்தேகக் குணம் காட்ட, பட அதிபர் கேலியாக கனைத்தார்.

"டோண்ட் ஒர்ரி. மம்மியம்மா! நான் கியாரண்டி தரேன். அவர்கள் போய் லொகேஷன் பார்த்துவிட்டு வரட்டும். அடுத்து ஷூட் பண்ண வேண்டிய இடங்களை அவங்கதான் தேர்வு செய்யணும். படம் நன்றாக வர வேண்டாமா? பெரிய மார்க்கெட் வர வேண்டாமா?"

"வரணும்... வரணும்..."





வெட்டி பலியிடப்பட்ட கருப்புப் பூனை துண்டங்கள்!

"சார் நோட் பண்ணுங்க... இந்த இடத்தில் தான் ரத்னாவை ஈவிள் ஸ்பிரிட் எதுவோ தாக்கியிருக்கிறது. நளினமான முகக்களையுடன் நடித்து கொண்டிருந்த அவள் கொடூரமானவளாக மாறியிருக்கிறாள். நான் சொல்வது சரியா?"

வீடியோ காட்சிகளை கண்கள் இமைக்காமல் ஒரு வித பீதியுடன் பார்த்துக் கொண்டிருந்த பட அதிபர், ரத்னா காட்சிக்கு சம்பந்தமே இல்லாமல் சிவப்பிரகாஷை இழுத்துக் கொண்டு போய் ஏரியில் மூழ்கியதைக் கண்டார். சிவப்பிரகாஷை தப்பவிடாதபடி தண்ணீருக்குள் அழுத்திப் பிடிப்பதையும் கண்டு திடுக்கிட்டார்.

ரத்னாதான் அவனுடைய மரணத்துக்கு காரணம் என்பதும், ஏதோ ஒரு தீயசக்தியின் தூண்டுதலின் பேரில்தான் இந்த பயங்கரம் நடந்திருக்கிறது என்பதும் தெரிந்தது.

ரத்னா இயல்பான மனநிலையில் இதை செய்யவில்லை. ஏவல்-பில்லி-சூனியமே அவளை ஆட்டுவித்து கதாநாயகன் உயிரை குடித்திருக்கிறது.

"இப்போது என்ன சொல்றீங்க சார்?" என்று கேட்டான் யோகேஷ்.

"என்னை நாசமாக்கவே தான் இப்படியொரு பயங்கரமான ஏவல் நடந்திருக்கு."

பட அதிபரின் கம்பீர குரலில் ஏகப்பட்ட பலவீனம். தனக்கு அழிவுக்காலம் நெருங்கிவிட்டதோ என்ற அச்சம். கேசட்டை முழுமையாக ஒடவிட்டு, நிறுத்திய பின்பு யோகேஷ் வியர்வை துளிகள் என்றார்.

"சம்பூர்ண் கிழவனுக்கு எல்லாமே தெரிஞ்சிருக்கு. இப்போது நீங்க செய்ய வேண்டியது என்ன தெரியுமா? உடனே ஷூட்டிங்கை கேன்சல் செய்யுங்க..."

"ஏகப்பட்ட நஷ்டம் வந்து விடுமே..."

"உங்க உயிருக்கு நஷ்டம் வராம இருக்கணும் தானே?"

"வே.. வேண்டாம்.. உங்க சொல்படியே படப்பிடிப்பை ரத்து செய்றேன்.

### திகில் கதை மன்னன்
### பி.டி.சாமி

சூனியம் செய்தவனை கண்டுபிடிச்சு அழியுங்க."

கெஞ்சினார் பட அதிபர்.

**சூ**னியக்காரர்களிடம் நேருக்கு நேராக மோதுவது பயங்கரமான ஆபத்தைத் தரும் என்று யோகேஷ் அறிந்திருந்தான்.

அதற்கு முன்னுதாரணமான எச்சரிக்கை, கதாநாயகன் சிவப்பிரகாஷ் எதிர்பாராமல் இறந்தது.

அது காலை நேரம்.

இளம் சூரிய ஒளி இதமாக பரவி புதிய உத்வேகத்தை தோற்றுவித்த வண்ணம் இருந்தது.

அன்று படப்பிடிப்பில்லாத போதிலும், கதாநாயகனாக நடிக்கப் போகும் யோகேஷுடன், ரத்னா சென்று தாராளமாக பழகிக் கூச்சத்தை போக்க வேண்டும் என்று பட அதிபர் கேட்டுக் கொண்டிருந்ததால், அதற்கு இணங்கியிருந்தாள் ரத்னா.

"அப்படியின்னா எந்த கவலையும் இல்லாமல் ரூமில போய் ரெஸ்ட் எடுங்க."

"சரிங்க சாரே."

கார் புறப்பட்டது.

பின் இருக்கையில் ரத்னாவும், யோகேஷும் உட்கார்ந்திருக்க, காரோட்டி குருசாமி மிதமான வேகத்தில் காரை செலுத்த ஆரம்பித்தான்.

காரோட்டிக்கு வெள்ளை சீருடை இருந்தது.

ரத்னா, வாடாமல்லி நிறத்தில் சுடிதார் அணிந்திருந்தாள்.

யோகேஷ் கோடுகள் போட்ட முழுக்கைச் சட்டையும், காப்பி பொடி நிற பான்ட்டும் அணிந்திருந்தான்.

அவன் எப்போதும் தயார் நிலையிலேயே இருந்தான்.

செய்வினை செய்தவனை கண்டு பிடித்து அழிக்க வேண்டும் என்பது பட அதிபருடன் கலந்து ரகசியமாக வகுக்கப்பட்ட திட்டம்.

அதற்கு அழகி ரத்னாவை கருவியாக பயன்படுத்த வேண்டும்.

யோகேஷ் எல்லாவற்றுக்கும் துணிந்து அதிரடி முடிவில் இறங்க தயாராகி கொண்டிருந்தான்.

ஏவல் செய்தவர்களை கண்டிபிடித்து நசுக்க வேண்டும்.

கார் நகர எல்லையை தாண்டி அம்பராம் பாளையம் செல்லும் சாலையில் பிரிந்து சென்றது.

வளம் கொழிக்கும் செழிப்பான பிரதேசம். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல்.

யோகேஷ் மெதுவாக அவள் மீது பார்வையை திருப்பினான்.

(திகில் தொடரும்)

## நடுக்கடலில் தத்தளித்த 7 மாதக் குழந்தை

**ந**டுக்கடலில் பச்சிளம் குழந்தையைத் தோளில் சுமந்தபடி தத்தளித்தார் ஒருவர். வேடிக்கை பார்த்த பலர் உதவி செய்யச் செல்லவில்லை. பொலிசுக்குத் தகவல் பறந்தது.

நீச்சலடிக்கும் பொலிஸ் வந்தது. கடலில் அவர்கள் இறங்கப் போக குழந்தையைக் கடலில் மூழ்க வைத்துச் சித்திரவதை செய்தான் அவன்.

இப்படியொரு குரூர சம்பவம் அவுஸ்திரேலியாவில் அடிலெய்ட் கடற்கரையில் நடந்தது. இந்தச் சம்பவத்திற்குக் காரணம் என்ன தெரியுமா? மனைவியுடனான சண்டை.

இந்த மனிதரின் பெயர் டொனால்ட். இவர் மனைவியுடன் ஏற்பட்ட சண்டை காரணமாக தமது குழந்தையைத் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு,

"என்னிடமா வேலை காட்டுகிறாய்? உன் குழந்தையை என்ன பண்ணுகிறேன் பார்!" என்று மிரட்டியபடி காரைச் சர்ரென்று கிளப்பிச் சென்று விட்டார்.


எப்போதும் குடித்து விட்டு மனைவியுடன் சண்டைபோடுவது டொனால்டின் வழக்கம்.

சண்டை பெரிதாகும் போதெல்லாம், "பார், ஒருநாள் உன் குழந்தையைத் தூக்கிப் போய் கடலில் போட்டு விடுகிறேன்!" என்று டொனால்ட் மிரட்டுவார்.

இப்படித்தான் ஒருநாள் சண்டை பெரிதானபோது குழந்தையைத் தூக்கிக் காரில் போட்டுக்கொண்டு போனார் டொனால்ட். 5 மணித்தியாலம் வரை எந்தத் தகவலும் இல்லை.

பொலிஸில் கொடுத்த புகாருக்குப் பலன் இல்லை. அந்தநேரத்தில்தான் பொலிசுக்கு அந்தத் தகவல் வந்தது.

கடலில் ஒருவர் கையில் பச்சிளம் குழந்தையை வைத்துக் கொண்டு தத்தளிக்கிறார் என்று.உடனே விரைந்தது பொலிஸ் படை. கடலில் சற்று ஆழமான பகுதிக்குக் குழந்தையைத் தூக்கிச் சென்ற டொனால்டை பொலிஸ் எவ்வளவோ



சமாதானப்படுத்த முயன்றும் முடியாமல் போனார்கள்.

இந்த நிலையில் அவருக்குத் தெரியாமல் வேறொரு படகில் மீனவர்கள் போல் போய் அவரைச் சூழ்ந்தது பொலிஸ்படை. கிட்டத்தட்ட ஒரு மணி நேர போராட்டத்தின் பின் குழந்தை, டொனால்டிடமிருந்து மீட்கப்பட்டது.

குழந்தையைப் பொலிஸாரிடம் கொடுத்து விட்டு, வேகமாக நீந்தித் தப்பிக்க முயன்ற டொனால்ட் பொலிஸாரால் மடக்கப்பட்டார்.

டொனால்டிடமிருந்து காப்பாற்றப்பட்ட அவரது 7 மாதத் குழந்தை பத்திரமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர், தாயிடம் ஒப்படைக்கப்பட்டது.

டொனால்ட் மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்.

## பெண்கள் எதைத் திருடுகிறார்கள்?

**அ**வுஸ்திரேலியா நாட்டில் சமீபத்தில் ஒரு வித்தியாசமான ஆராய்ச்சி நடத்தினார்கள். ஹொட்டலில் தங்க வரும் ஆண்களும் பெண்களும் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று வெளியிடப்பட்ட ஒரு சுவாரசியமான ஆராய்ச்சியே அது.



ஹொட்டலில் தங்கும் பெண்கள் முக்கியமாகத் திருடிச் செல்வது ஹொட்டல் அறைகளுக்கு வழங்கப்படும் துவாய்களை. ஆண்களில் அநேகம் பேர் திருடுவது போத்தல் மூடிகளைத் திறக்கும் ஒப்பனர்களை.

ஆண்கள் நிறையக்குடிப்பது பியர். பெண்கள் அதிகம் குடிப்பது வைன். 69 சதவீதமான பெண்கள் கார்களைக் கொண்டு சென்று ஹொட்டல் வளாக வாகன நிறுத்துமிடங்களில் விடும்போது விபத்துக்களை ஏற்படுத்துகிறார்கள்.

ஆண்கள் தூங்குமுஞ்சிகளாக இருக்கிறார்கள். அதே போல் குளித்துவிட்டு, பாத்ரூம் கதவு என்று நினைத்துக் கொண்டு அறைக்கதவைத் திறந்து வெளியே வந்து விடுகிறார்கள்.

கடந்த வருடம் வரை ஆண்கள்தான் 100 சதவீதம் ஜாலியாக இருக்க பெண்களை அழைத்துக் கொண்டு வந்தார்கள். ஆனால் இப்போது இது தலைகீழ்.

ஆண்களைப் பொறுத்தவரை அவர்கள் உற்சாகமாகச் சத்தம் போட்டுக் கத்துவதெல்லாம் தொலைக்காட்சியில் உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்க்கும் போதுதானாம்.

இப்படி இன்னும் பல 'எழுத' முடியாத சுவாரஷ்யமான, வித்தியாசமான அனுபவபூர்வமான இந்த ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. இந்த ஆராய்ச்சிகள் அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து நாடுகளில் உள்ள 27 ஹொட்டல்களில் இருந்து மேற்கொண்டார்கள்.

## உழைப்பால் உயர்ந்த பலகோடிகளுக்குச் சொந்தக்காரர்

**சு**மார் 40 வருடங்களுக்கு முன் கையில் ஒரு சதம்கூட இல்லாத நாடோடித் தம்பதியின் தத்துப்பிள்ளையான ஒருவர் இன்று ஆயிரம் கோடி ரூபாய்க்கு அதிபதியாகி இருக்கிறார்.

உழைப்பால் உயர்ந்த இவரால் ஒரு வார்த்தை கூட எழுதப்படிக்க முடியாது. இன்று ஏழ்மை நிலையிலுள்ள பலரை மேலே தூக்கிவிடும் ஓர் ஏணியாக இருந்து வருகிறார் இவர்.

பிரிட்டனைச் சேர்ந்தவர் டோனி பிட்க்லே. இவருக்கு வயது 52. அநாதையான இவர் தேம்ஸ் நதிக்கரையில் உள்ள நடைபாதையோரத்தில் வாழ்ந்து வந்தார். இவரை ஒரு நாடோடித் தம்பதியினர் எடுத்து வளர்த்தனர்.



பில்ஸ் மற்றும் ப்ளோரன்ஸ் என்ற அந்தத் தம்பதிகளுடன் 1975ம் ஆண்டு வரை வாழ்ந்தார் பிட்க்லே. பில்ஸ் முதலில் ஒரு லொறியில் கிளீனராக வேலை பார்த்து வந்தார். பிட்க்லேயைத் தத்து எடுத்த பின் அவர்கள் வாழ்க்கையில் வசந்தம் வீச ஆரம்பித்தது.

சொந்தமாக லொறி ஒன்றை வாங்கினார் பில்ஸ். படிப்பு சரியாக வராத பிட்க்லே வளர்ப்புத் தந்தையுடன் வேலைசெய்ய ஆரம்பித்தார். முதலில் லொறியில் கிளீனராக வேலை பார்த்த பிட்க்லே பின்னர் கட்டட வேலை பார்த்தார்.

அதுதான் அவர் வாழ்க்கையில் மிகப்பெரும் திருப்பமாக அமைந்தது. சின்னச் சின்ன வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்ய ஆரம்பித்த பிட்க்லே பின்னர் பெரிய கட்டடங்களை ஒப்பந்த அடிப்படையில் கட்ட ஆரம்பித்தார்.

ஜிம் பெர்ரர் என்ற தொழிலதிபர் பிட்க்லேயைத் தனது பங்காளராகச் சேர்ந்துக் கொண்டு 'பெர்க்லி' என்ற கட்டடம் கட்டும் நிறுவனம் ஒன்றைத் தொடங்கினார்.

பிட்க்லேயில் அயராத உழைப்பில் பயனாக 'பெர்க்லி' நிறுவனத்தின் பெயர் பிரிட்டனில் பிரபலமாக, கோடி கோடியாகப் பணம் குவிந்தது.

இப்போது பிட்க்லே கட்டிய பல அடுக்குமாடிகள் பிரிட்டனில் காட்சியளிக்கின்றன. பிட்டனில் உள்ள பெரும் பணக்காரர்கள் வரிசையில் சேர்ந்துள்ள பிட்க்லே, தனது மகனை 'பெர்க்லி' கம்பனியில் நிர்வாகியாக்கிவிட்டார்.



## கார்ப் பந்தயத் தடம்

← 'படத்தைப் பார்த்தால் வாகனங்கள் செல்லும் பாதை போல் தெரிகிறது. ஆனால் சுற்றிச் சுற்றித் திரும்பவும் ஒரே இடத்திற்கு வருவது போல் தோன்றுகிறதே' என்றுதானே எண்ணுகிறீர்கள்.

நீங்கள் நினைத்தது சரிதான். வானில் நின்று (ஹெலிக்கொப்டர்) எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படம் வாகனங்கள் செல்லும் தடம் தான். ஆனால் இந்தத் தடத்தில் கார்ப்பந்தயம்தான் நடைபெறும்.

அதனால்தான் ஆரம்பிக்கும் இடத்திற்கே திரும்பவும் வந்து சேரும்படி உள்ளது போல் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கார்ப்பந்தயத் தடம் மலேசியத் தலைநகர் கோலாலம்பூருக்கு அருகில் உள்ள செபாங்கில் உள்ளது. ■


## சாதனை படைத்த டொல்ஃபின்

↓ செந்தோசாவில் உள்ள நீச்சல் குளத்தில் துள்ளிக்குதிக்கும் இந்த இளஞ்சிகப்பு நிற டொல்ஃபின் சத்தமில்லாமல் ஒரு சாதனை படைத்திருக்கிறது.

உலகிலேயே மனிதர்கள் பராமரிக்கும் போது கர்ப்பமான முதல் டொல்ஃபின் என்ற சாதனையே அது.

ஆனால் 5 மாத கர்ப்பமாக இருந்தபோது இதன் கரு கலைந்துவிட்டது. ■





## சேகரிப்பும் மூழ்கடிப்பும்

↑ ஃபியோரென்ஸோ பிரிண்டெல்லி என்பவர் உலகிலேயே அதிகமான கைக்கடிகாரங்களைச் சேர்த்து வைத்திருப்பதாக கின்னஸ் சாதனைப் பதிவுப் புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறார். அவர் மொத்தம் 3,524 கைக்கடிகாரங்களைச் சேர்த்து வைத்திருக்கிறார். தான் சேர்த்து வைத்துள்ள கைக்கடிகாரங்களில் தன்னை மூழ்கடித்தவாறு இங்கு காட்சி தருகிறார்.

பிரிண்டெல்லியிடமிருந்த அத்தனை கடிகாரங்களும் வெவ்வேறு ரகமானவை. இத்தனை ரகங்களையும் அவர் தேடிப் பிடித்தமை உண்மையில் ஒரு சாதனைதான். ■

## பிறந்தார்கள் பிரிந்தார்கள்.

↓ அமெரிக்காவில் மியாமியில் உள்ள மருத்துவமனையில் அன்னை-தந்தை அரவணைப்பில் தனித் தனியாகத் தவழும் குழந்தைகள் இருவரும் இரட்டையர்கள். அதுவும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள்.

முதுகெலும்பில் ஒட்டிப் பிறந்து சிறுநீரக உறுப்புக்கள், குடல் ஆகியவற்றைப் பகிர்ந்து கொண்டு பிறந்த இரட்டையர்கள் இப்போது பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

20 மருத்துவர்களில் 13 மணிநேர அறுவைச் சிகிச்சைக்குப் பின் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்ட இவர்கள் இப்போது நலமுடன் இருக்கிறார்கள்.

50 வருட மருத்துவ வரலாற்றில் இதுபோன்ற அறுவை சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் முறை. ■

## தகவல் பெட்டி





## பிரமிக்க வைக்கும் சாகசம்

↑ ஒரு பெண்ணின் தலைக்குமேல், இன்னொரு பெண் தனது தலையை வைத்துக் கொண்டு அந்தரத்தில் நிற்கிறாள்.

தலையின் மேல் இன்னொரு தலையை அந்தரத்தில் தாங்கிக் கொண்டு கீழே நிற்கும் பெண் ஒன்றும் சும்மா நிற்கவில்லை. நடனமாடியபடி கைகளில் வளையத் தடிகளைப் பிடித்துச் சுற்றுகிறாள்.

சரியானதொரு பயிற்சியும், சமநிலைப்படுத்தும் திறமையும் இல்லாவிடில் இதைச் செய்யவே முடியாது. பார்ப்போரைப் பிரமிக்க வைக்கும் இந்த நடனம் புரிபவர்கள் 'ஸ்கை மிரேஜ்' என்ற சீனச் சாகசப் பெண்கள்.

சுமார் 15 பெண்களைக் கொண்ட இந்தக் குழு தனது சாகச வித்தைகளைக் காட்ட ஹொங்கொங் சென்றது. அங்கு மக்களுக்கு முன் தமது சாகசங்களைக் காண்பிக்க முன்னர், பத்திரிகையாளர்களுக்காக பிரத்தியேக நிகழ்ச்சி ஒன்றை நடத்திக் காட்டியது.

பத்திரிகையாளர்கள் பார்த்துப் பிரமித்த சாகசக் காட்சிதான் இது. ●

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# முரண்டு பிடித்த பாடகரும் இரண்டாவது கணவரின் தொடர்பும்

பழைய ஜமீன்தார்களைக் குறிக்கும் வகையில் பெயர் கொண்ட படமொன்று தயாராகி வருகிறது. இதில் 'கொழு கொழு' வாரிசு நடிகர் கதா நாயகனாக நடித்து வருகிறார்.

இப்படத்தில் கௌரவ வேடத்தில் 'அரிவாள்' நடிகர் 'மலரும் நினைவுகள்' (அதுதாங்க ஃபிளாஷ் பக்) காட்சிகளில் நடிக்கிறார். இவர் அறிமுகமாகும் போது, இவரைப் புகழ்ந்து பாடுவது போன்று ஒரு பாட்டு வருகிறது.

உச்சஸ்தாயியில் பாடவேண்டிய இப்பாடலைப் பாடும்படி, தானியங்களைச் சேமித்து வைக்கும் இடத்தின் பெயர் கொண்ட படத்தின் இயக்குநர், 'மின்னல்' சாதனைப் பாடகரை அணுகினார்.

உச்சஸ்தாயியில் பாடவேண்டிய இருப்பதால் தன்னால் உடனடியாகப் பாட முடியாது, என்றும் இன்னொரு மலையாளப் பாடகரின் பெயரைச் சொல்லி அப்பாடலை அவரைக் கொண்டு பாடும்படி சொல்லியிருக்கிறார் அவர்.

'மணவாசனை' நடிகையின் கணவரின் பெயரின் பின்பாதியைத் தனது பெயரின் பின்பாதியாகக் கொண்ட அந்த மலையாளப் பாடகரிடம் விஷயத்தைக்கூறி முற்பணமும் கொடுத்தார் இயக்குநர்.

முதலில் ஒன்றும் பேசாது முற்பணத்தை வாங்கிய அந்தப் பாடகர் பாடல் பதிவாகும் சமயத்தில், தன்னால் எந்த நடிகரையும் புகழ்ந்து பாட முடியாது, என்று கூறி முரண்டு பிடித்தார்.

இதைக் கேட்டுக் கோபமடைந்த பட இயக்குநர் உடனே, இரண்டெழுத்துப் பெயருடைய பாடகரை அழைத்து வந்து பாட வைத்தார்.

## நீறு பூத்த நெருப்பாகவுள்ள பிரச்சனை

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான அந்த நடிகை, வளர்ந்து குமரியாகிய பிறகும், தனது பெயருக்கு முன்னால் அந்த வார்த்தையை வைத்துக் கொண்டு சின்னத்திரையில் தொடர்களைத் தயாரித்து வருகிறார்.

தாலி கட்டிய கணவருடன் தகராறு ஏற்பட்டு, அவரைப் பிரிந்து வாழ்ந்த அவர், இரண்டாவது திருமணம் செய்து கொண்டார்.

இரண்டாவது கணவர் வட இந்தியாவைச் சேர்ந்தவர். இவர்கள் இருவருக்கும் ஒரு பெண் குழந்தை உள்ளது. இந்தக் 'குட்டி'யும் சின்னத் திரையில் மின்னி வருகிறது. பெண்கள் விஷயத்தில் சற்றுப் 'பலவீனமான' நடிகையின் கணவருக்கும் நடிகைக்கும் பலமுறை தகராறு ஏற்பட்டுள்ளது.

நடிகை தற்போது தயாரிக்கும் தொலைக்காட்சித் தொடர்களை நடிகையின் கணவர்தான் இயக்கி வருகிறார். இந்தத் தொடர்களில் நடிக்கும் இரண்டெழுத்து நடிகை ஒருவருக்கும் அந்த நடிகையின் கணவருக்கும் இடையே 'தொடர்பு' ஏற்பட்டது. இந்தத் 'தொடர்பு' நாளடைவில் பிரிக்க முடியாத அளவுக்கு நெருக்கமாகி விட்டது.

விஷயம் அறிந்த நடிகை, நேராகப் படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்குச் சென்றார். அங்கு கணவரின் கழுத்தைப் பிடிக்காத குறையாக அவரை வெளியே அனுப்பிவிட்டு, இணை இயக்குநர் ஒருவரைக் கொண்டு அந்தத் தொடரை இயக்கி வருகிறார்.

இந்தப் பிரச்சனை இப்போது நீறுபூத்த நெருப்பாகப் புகைந்து கொண்டிருக்கிறது. ■


# காதோடு சொல்லுகிறோம்

'தூக்குலங்கள்' என்று பொருள்படும் பெயரில் தயாரான படத்தில் நாயகியாக நடித்த 'ஸ்ரீ' நடிகை படப்பிடிப்பில் கலந்து கொள்ளும்போது அவரை அரசியல் கட்சித் தலைவர் ஒருவரின் ஆட்கள் கண்காணித்து வருகிறார்களாம். அந்த அரசியல் கட்சித் தலைவரின் அபிமானத்துக்குரியவராகிவிட்ட நடிகையிடம் யாரும் அத்துமீறி நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் அவரது ஆட்களின் கண்காணிப்பாம்.

'அலைபாயும்' நாயகனின் அண்மைய படத்தில் நடித்த 'நட்பான' நடிகை, அப்படத் தோல்வியால் துவண்டுபோய் இருக்கிறாராம். அதுமட்டுமின்றி அப்படத்தோல்வி தன்னை ராசியில்லாத நடிகை என்று முத்திரை குத்தி விடுமோ என்றும் கலங்கிப் போயிருக்கிறாராம். அதனால் 'காதல் இளவரசனு'டன் இணைந்து நடிக்கும் 'விரும்பும்' படத்திற்கு ஒத்துழைப்பை வாரி வழங்குகிறாராம்.

புரட்சிக்கவிஞரின் சுருக்கப் பெயரை தன் பெயரின் பின்பாதியாகக் கொண்ட இளம் பாடலாசிரியர், பெரிய அளவில் வருவார் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டார். ஆனால் அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைத்ததால் பின்தங்கி விட்டார். மறுபடியும் எப்படியாவது பிரபலமாகிவிட வேண்டுமென்று சாமியார் ஒருவரிடம் தஞ்சமடைந்துள்ளாராம் அந்தப் பாடலாசிரியர்.

இரண்டெழுத்து அம்மா நடிகை ஒருவர் சென்னையில் இருக்கும் மிகப் பெரிய நட்சத்திர ஹொட்டல் ஒன்றில் அடிக்கடி தென்படுகிறாராம். அதுவும் ஹொட்டல் அதிபரின் பிரத்தியேக அறையில். இருவரது 'நட்பு'ம் நாளுக்கு நாள் இறுக்கமாகிக் கொண்டே போகிறதாம்.



இஷாக்-அபிதா
படம்: பூவே பெண் பூவே




சத்யராஜ்-ரோஜா-வடிவேலு
படம்: லூட்டி

## மொழிமாறும் மும்தாஜ் காட்சிகள்

கரேஷ்-மும்தாஜ் தெலுங்கில் நடித்த 'அம்மா ஒக்கட தனி' என்ற வெற்றிப் படம் தமிழில் 'அம்மா ரீ திகதி' என்ற பெயரில் தயாராகிறது. இப்போது மும்தாஜிற்குத் தமிழில் நல்ல வரவேற்பு இருப்பதால் கரேஷ்-மும்தாஜ் நடித்த காட்சிகளை மட்டும் அப்படியே மொழிமாற்றித் தமிழில் சேர்க்கத் திட்டமிட்டிருக்கிறார் படத்தின் தயாரிப்பாளரான கே.ராஜன்.

கரேஷ்-மும்தாஜுடன் இப்படத்தில் பிரபு காந்த், ரித்திகா, கனகா, பானுப்பிரியா, பாபு கணேஷ் உட்பட பலர் நடித்து வருகின்றனர்.



கரே...
படம்: அம்மா ...

## டி.ராமநாயுடு தயாரிக்கும் 'வாம்மா மகராசி'

'வசந்தமாளிகை' உட்பட நூற்றுக்கணக்கான படங்களைத் தயாரித்தவர் டி.ராமநாயுடு. தெலுங்குதேச பாராளுமன்ற உறுப்பினரான இவர், பிரபல தெலுங்கு நடிகர் வெங்கடேஷின் தந்தை.

இதுவரை 114 படங்களைத் தயாரித்த ராமநாயுடு அடுத்துத் தயாரிக்கும் 115வது படத்தை தமிழில் தயாரிக்கவுள்ளார். இப்படத்திற்கு 'வாம்மா மகராசி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

ராம்கி-பாண்டியராஜன்-லிவிங்ஸ்டன் மூவரும் இணைந்து நடிக்கும் இப்படத்தில் விவேக், வடிவேலு, மனோரமா, அலெக்ஸ், மன்சூரலிகான், கோவை சரளா உட்பட பலர் நடிக்கின்றனர்.

கதாநாயகிகள் தேர்வு நடைபெற்று வருகிறது.

இப்படத்தை நூற்றுக்கும் மேற்பட்ட படங்களை இயக்கிய வி.சி.குகநாதன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார்.

சந்திரபோஸ் இசையமைக்கிறார்.

## விஜய சாந்தி நடிக்கும் 'லேடி கப்டன்'

தெலுங்கில் விஜயசாந்தி நடிக்கும் படங்களைத் தமிழில் மொழிமாற்றி வெளியிடும் 'அன்னை மேரி மூவிஸ்' படநிறுவனம் தற்போது தயாரிக்கும் படம் 'லேடி கப்டன்'.

இது விஜயசாந்தி நடித்த 'அடவி சுக்கா' என்ற தெலுங்குப் படத்தின் தமிழ் மொழிமாற்றமாகும்.

இதில் விஜயசாந்தி அதிரடிக் கதாநாயகியாக நடிக்க, பிரகாஷ்ராஜ், சரண்ராஜ், கமன், ராமிரெட்டி, சங்கீதா ஆகியோரும் நடித்துள்ளனர்.

தன் ஆயுளை நீடிக்க, ஜோசியம் ஒருவரின் ஆலோசனைப்படி கிராமத்து அப்பாவி இளம்பெண்ணை மணந்து, பின் அவளைக் கொலை செய்கிறான் ஒருவன்.

இதை நேரில் பார்த்த அந்தப் பெண்ணின் சகோதரி அவர்களை எப்படி எல்லாம் திட்டம் போட்டுப் பழிவாங்குகிறாள் என்பதுதான் படத்தின் கதை.

நூற்றுக்கும் மேற்பட்ட படங்களை இயக்கியிருக்கும் தாசரி நாராயணராவ் இயக்கியிருக்கும் இப்படத்திற்கு மருதபரணி வசனம் எழுதியுள்ளார்.

கவிஞர் வாலியின் பாடல்களுக்கு, 'வந்தே மாதரம்' ஸ்ரீனிவாஸ் இசையமைத்திருக்கிறார்.

## வின்சென்ட் செல்வா இயக்கத்தில் பிரசாந்த் நடிக்கிறார்

விஜய் வில்லனிக் ஹீரோவாக நடித்த 'பிரியமுடன்' படத்தை இயக்கிய வின்சென்ட் செல்வா அடுத்து பிரசாந்த் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இப் படத்தை சிவசக்தி பாண்டியன் தயாரிக்கிறார்.

ஏற்கனவே சிவசக்தி பாண்டியன் தயாரித்த 'கண்ணெதிரே தோன்றினாள்' படத்தில் பிரசாந்த் கதாநாயகனாக நடித்துள்ளார்.

படத்தின் கதாநாயகி மற்றும் ஏனைய நடிக, நடிகைகள் தேர்வு நடந்து வருகிறது.

ஒளிப்பதிவு-தங்கர்பச்சான் இசை-தேவா.

வித்தியாசமான கதையமைப்புடன் மிகப் பிரமாண்டமான முறையில் விரைவில் தயாராகவுள்ளது இப்படம்.

## கனமான வேடத்தில் சூர்யா

'ப்ரண்ட்ஸ்' படத்தில் சிறப்பாக நடித்திருக்கும் சூர்யா அடுத்து நடிக்கும் 'நந்தா' படத்திற்காக மிகுந்த சிரமமெடுத்து நடிக்கிறார். காரணம் படத்தில் இவர் ஏற்றிருப்பது கனமான வேடம்.

இதற்காக ஒட்ட வெட்டிய முடியுடன் தாடி வளர்த்துக் கொண்டு நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக லைலா நடிக்கிறார்.

நடிகர் திலகம் நடிப்பதாக இருந்த வேடம் மாறு மாற்றப்பட்டு அதில் ராஜ்கிரண் நடிக்கிறார். இவரும் வித்தியாச ஒப்பனையுடன் தோன்றுகிறார்.

'சேது' படத்தை இயக்கிய பாலா 'நந்தா'வை இயக்கி வருவதால் இதற்குப் பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக்கிறது. 'நந்தா' படம் மே மாதத்தில் வெளியிடும் திட்டத்தில் தயாராகி வருகிறது.

## ஷாலினி தொடங்கும் சானல்

கல்யாணத்திற்குப் பின் நடிப்புக்கு முழுக்குப் போட்ட ஷாலினி (பிரியாத வரம் வேண்டும் படம் தவிர) சின்னத்திரை சானல் ஒன்றைத் தொடங்க இருக்கிறார்.

வீட்டில் வேலையில்லாமல் போரடிக்குமே அதனால் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றைத் தொடங்குமாறு ஷாலினிக்கு பத்திரிகை மற்றும் தொலைக்காட்சித் துறைகளில் உள்ள அவரது நண்பர்கள் ஆலோசனை கூறியிருந்தனர்.

ஷாலினிக்கு அது சரியெனப்பட்டிருக்கிறது போலும். காதல் கணவரான அஜித்குமாரிடம் ஓ.கே.வாங்கிக்கொண்டு, தொலைக்காட்சி அலைவரிசைக்கான பூர்வாங்க வேலைகளில் இறங்கியுள்ளார்.



ராம்கி-திவ்யா உன்னி
படம்: பாளையத்து அம்மன்

## டைரக்ஷனுக்கு மூட்டை

சமீபத்தில் திரைக்கு வந்து வெற்றிகரமாக டிக்கொண்டிருக்கும் 'ப்ரண்ட்ஸ்' படத்தில் ஜய்-சூர்யாவுடன் கிட்டத்தட்ட மூன்றாவது ாயகனாக நகைச்சுவைக் காட்சியகளில் ஜொலித்து வாங்கியிருந்தார் ரமேஷ் கண்ணா. தேபோல் 'நாகேஸ்வரி' படத்திலும் கோவை ரளாவுடன் இணைந்து கலக்கியிருந்தார்.

இதைத் தொடர்ந்து, கே.எஸ்.ரவிக்குமார்-த்குமார் இணையும் படம், விக்ரமன்-விஜய் ணையும் படம் என்று 7 படங்களில் நகைச்சுவை டங்களில் நடிக்கவுள்ளார் இவர்.

'தொடரும்' படத்தை இயக்கிய ரமேஷ் ண்ணா அடுத்து கார்த்திக் நடிக்கும் படத்தை யக்குவதாக இருந்தது. முதலில் நகைச்சுவை டிப்பு. அதன் பின் தான் இயக்கம். அதனால் ப்போதைக்கு டைரக்ஷன் ஆசையை மூட்டை டி வைத்துள்ளார்.


## வடிவேலுவால் பாதிக்கப்பட்ட நடிகை

'நேசம் புதுசு' படத்தில் அறிமுகமான வைஷாலிக்குக் கதாநாயகிக்கான கவர்ச்சி அம்சங்கள் இருந்தாலும், இவருக்கு கதாநாயகி யோகம் கை கூடவில்லை.

பொறுத்துப் பார்த்தவர், நகைச்சுவை வேடத்தில் நடிக்கமுடிவெடுத்தார். அதன்படி பாரதிராஜாவின் 'கடல் பூக்கள்' படத்தில் வடிவேலு ஜோடியாக நடித்தார்.

துரதிஷ்டவசமாக பாரதிராஜாவுக்கும் வடிவேலுவுக்கும் ஏற்பட்ட 'லடாய்' காரணமாக 'கடல் பூக்கள்' படத்தில் வடிவேலு நடித்த அத்தனை காட்சிகளும் வெட்டப்பட்டு விட்டன.

இதனால் வடிவேலுவுக்கு ஜோடியாக வைஷாலி நடித்திருந்த காட்சிகளும் வெட்டப் பட்டுவிட்டன.




உதயா-விந்தியா
படம்: பூங்குயிலே

## சபாஷ் வாங்கும் ஷாருக் வாரிசு

தமிழக நட்சத்திரங்கள் தமது ஓய்வுக்குப் பின் தான் தமது வாரிசுகளைக் களமிறக்குவார்கள். ஆனால் இந்த விஷயத்தில் இந்தி நடிகர் ஷாருக்கான் வித்தியாசமாகத் தனது நான்கு வயது வாரிசான அரியான் கானை இப்போதே களமிறக்கி விட்டார்.

ஷாருக் நாயகனாக நடிக்கும் 'கபிகுஷி கபிகம்' என்ற இந்திப் படத்தில் இளவயது ஷாருக்காக அவரது மகன் அரியான் நடித்து வருகிறார்.

படப்பிடிப்பின்போது, இயக்குநர் சொல்வதைக் கேட்டு அப்படியே நடித்து சபாஷ் வாங்கி வருகிறானாம் அந்தக் குட்டிப்பையன்.

## அடுத்த படத்திலும் அபிதா

ராமராஜன் இயக்கி நடித்திருக்கும் 'சீறிவரும் காளை' படத்தின் படப்பிடிப்புக்கள் யாவும் முடிந்து விட்டன. இப்படம் வெளியீட்டிற்குத் தயாராக இருக்கும் போதே அடுத்தபட வேலைகளில் இறங்கி விட்டார் ராமராஜன்.

'தாயில்லாமல் பிள்ளை' என்று அடுத்த படத்திற்கு தலைப்பு வைக்கத் திட்டமிட்டிருக்கும் ராமராஜன் 'சீறிவரும் காளை'யில் நடித்த அபிதாவையே இப்படத்தில் நாயகியாக்கியுள்ளார்.

இப்படத்தையும் ராமராஜனே தயாரித்து இயக்கவுள்ளார்.

## கஷ்மீற்கு கிஸ்ஸா?

ஷங்கரின் 'முதல்வன்' படத்தில் 'ஷக்கலக்க பேபியாக' ஒரு பாடல் காட்சியில் ஆட்டம் போட்ட கஷ்மீரா சென், ஷங்கரின் அடுத்த படமான 'ரோபோ'வின் நாயகி எனப் பேச்சு அடிபடுகிறது.

'ரோபோ'வாக நடிப்பவர் கமல் என்பது அறிந்ததே. கமல் படங்களில் இடம்பெறும் கிஸ் இம்முறை கஷ்மீற்கா?

## முகப்பில்

பிரசாந்த்-ஷாலினி

படம்: பிரியாத வரம் வேண்டும்



...ரேஷ்-மும்தாஜ்
...ஒக்கட தனி (தெலுங்கு)

## பங்களாவும் நடிக்கிறது

விஜயகுமார்-மஞ்சுளா நட்சத்திரத் தம்பதியின் வாரிசுகள் மட்டுமன்றி, விஜயகுமாரின் முதல் மனைவியின் பிள்ளைகள் மற்றும் விஜயகுமாரின் தம்பி பரணிகுமார் என்று பலரும் சினிமாவில் நடித்துள்ளனர்.

இப்போது விஜயகுமாரின் சொகுசு பங்களாவும் நடிக்கப்போகிறது. ஆம், அரண்மனை போன்று விஜயகுமார் கட்டியிருக்கும் ஆடம்பர பங்களாவை படப்பிடிப்புக்காக வாடகைக்கு விடப்போகிறார்.

முதலில் இந்த பங்களாவில் படமாகும் படம் பிரசாந்த்-அமீஷா பட்டேல் நடிக்கும் 'என்ன விலை அழகே'.

## ரம்பாவின் மாற்றம்

ரம்பா என்றால் அவரது கவர்ச்சி நடிப்புத்தான் முதலில் நினைவுக்கு வரும். இப்போது அவரது கவர்ச்சி நடிப்புக்கு மவுசு குறைந்து விட்டது போல் தெரிகிறது. காரணம் அவர் கையில் ஓரிரு படங்கள்தான் உள்ளன.

இனிமேல் கவர்ச்சி நடிப்புக்குக் குட்பை சொல்லி விட்டு குடும்பப் பாங்கான வேடங்களில் நடிக்கப் போவதாகக் கூறுகிறார் ரம்பா. 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்', 'ஆனந்தம்' இரண்டிலும் குடும்பப் பாங்கான வேடங்கள் ரம்பாவுக்கு.

## முதல் பாட்டு

'காதல் மன்னன்', 'அமர்க்களம்', 'பார்த்தேன் ரசித்தேன்' போன்ற படங்களுக்கு இசையமைத்தவர் பரத்வாஜ். இவரது இசையமைப்பில் ஷாலினி, பிரசாந்த் போன்ற நட்சத்திரங்களும் பாடகர்களாக அறிமுகமானார்கள்.

இப்போது முதல் முறையாகப் பாடல் ஒன்றைப் பாடப் போகிறார் பரத்வாஜ். இவர் பாடப் போகும் முதல் பாடலுக்கு இசையமைப்பவர் உதயா என்பவர்.

உதயா இசை, இயக்கத்தில் உருவாகும் 'மனசுக்குள் மழை' என்ற இசை அல்பத்தில் தான் பரத்வாஜ் பாடும் பாடல் இடம்பெறுகிறது.

## காதலரா? காவலரா?

'சங்கமம்' படத்தில் அறிமுகமான விந்தியா இப்போது 'பூங்குயிலே', 'கற்றது காதல் அளவு' போன்ற படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

இவர் படப்பிடிப்பிற்கு வரும்போது மணிமோகன் என்பவரும் கூட வருகிறார். படப்பிடிப்புத் தளங்களுக்கு விந்தியாவின் காவலர் போல் வரும் இவர் விந்தியாவின் காதலர் என்று கிசுகிசுக்கிறது கோடம்பாக்கம் வட்டாரம். மணிமோகன் சிங்கப்பூரைச் சேர்ந்தவர். விந்தியா சிங்கப்பூருக்குக் கலைச்சேவை செய்யச் சென்றபோது இவருக்கும் நட்பு ஏற்பட்டதாம்.

## பானுப்பிரியாவின் கதை

சொத்துத் தகராறில் தாய்-சகோதரனால் வீட்டை விட்டு வெளியே துரத்தப்பட்ட பானுப்பிரியா தற் போது ஏ.வி.எம். ஸ்டூடியோவில் உள்ள வீடொன்றில் வசித்து வருகிறார்.

இவருடைய இந்தச் சோகக் கதையைக் கருவாக வைத்துப் படமொன்று தயாராகி வருகிறது. இதில் பானுப்பிரியாவே கதாநாயகியாக நடிக்கிறார்.

## மினி சினி

★ நாகார்ஜுன்-ஷில்பா ஷெட்டி-சௌந்தர்யா நடித்த 'ஆசாத்' என்ற தெலுங்குப் படம் தமிழில் 'குருசேத்ரம்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இப்படத்தை 'நரசிம்மா' படத்தை இயக்கும் திருப்பதிசாமி இயக்கியுள்ளார்.

★ பிரபுதேவா-உபேந்திரா நடிக்கும் பெயரிடப்படாத படத்தில் அறிமுகமாகும் பிரியங்கா திரிவேதி, எபி குஞ்சுமோன் கதாநாயகனாக நடிக்கும் 'சுவாசம்' படத்தில் இவருக்கு ஜோடியாக நடிக்கிறார்.

★ ஆர்.சுந்தர்ராஜன், மணிவண்ணன், பி.வாசு வரிசையில் அகத்தியனும் நடிகர் அவதாரம் எடுக்கிறார். 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படத்தில் இயக்குநர் அகத்தியனாக நடித்து வருகிறார் இவர்.

★ இந்தியில் வெற்றிப்பட நாயகியாக வலம் வரும் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய், இந்தியில் சொந்தப் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். இதில் 'அலைபாயுதே' மாதவன் நாயகன்.

★ விஜய் நடிக்கும் 'பத்ரி' படத்திற்கு ரமணகோகுலா என்ற புதிய இசையமைப்பாளர் இசையமைக்கிறார். இவர் 'பத்ரி'யின் ஒரிஜினலான 'தம்முடு' தெலுங்குப் படத்திற்கு இசையமைத்தவர்.

★ பிரபு-கௌசல்யா-சங்கவி நடிக்கும் 'தாலி காத்த அம்மன்' படத்தில் அம்மன் வேடத்தில் நடிக்கும் பானுப்பிரியா, படத்தில் இடம்பெறும் பாடல் காட்சி ஒன்றில் ஆக்ரோஷமான நடனமாடியுள்ளார்.

★ இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் இயக்கும் 100வது படமான 'பார்த்தாலே பரவசம்' படத்தில் பாலச்சந்தரின் சிஷ்யரும் இயக்குநருமான 'தலைவாசல்' செல்வா இணை இயக்குநராகப் பணியாற்றுகிறார்.

★ பிரபல மலையாள இயக்குநர் திஎன்.விஜயன் இயக்கத்தில் சுரேஷ் கோபி-தபு நடித்த 'கவர்ஸ்டோரி' என்ற மலையாளப்படம் விரைவில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வெளியாகவுள்ளது.

# கலக்கும் 'காமெடி பாய்ஸ்'



தமிழகத்தின் மதுரையில் 'காமெடி பாய்ஸ்' என்ற பெயரில் இளைஞர்கள் சிலர் கலக்கல் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள், விளம்பரங்கள் என்று எல்லாவற்றையும் கிண்டல் செய்து தமாஷ் நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்.

இந்த இளைஞர்களில் சிலர் வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளர்களாகவும் கல்லூரி ஆசிரியர்களாகவும் மற்றும் சிலர் இதையே முழு நேரப் பணியாகவும் கொண்டுள்ளனர்.

இந்த 'காமெடி பாய்ஸ்' குழுவினரின் அசத்தல் நிகழ்ச்சிகளில் ஆபாசமோ விரசமோ துளிகூட இல்லை என்பதுதான் சிறப்பம்சம்.

'காமெடி பாய்ஸ்'களில் ஒருவரான தண்டபாணி என்பவர் பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர்கள் இசைமைத்த பாடல்கள் எங்கிருந்து, எப்படி சுட்டார்கள் என்று அண்மையில் தமிழக வார இதழ் ஒன்றிற்கு விளக்கியிருந்தார்.

இதோ அந்த 'சுடல்'களில் சில..

✦ 'ரிஷிமூலம்' படத்தில் எம்.எஸ். விஸ்வநாதன் இசையமைத்த 'நேரமிது... நேரமிது...' என்ற பாடலை ஏ. ஆர்.ரஹ்மான் 'அலைபாயுதே' சிநேகிதனே... சினேகிதனே...' என்று சுட்டுக் கொண்டார்.

✦ 'எங்கள் தங்கம்' படத்தில் எம். எஸ்.விஸ்வநாதன் இசையமைத்த 'தங்கப் பதக்கத்தின் மேலே...' பாடலை 'காதலர் தினம்' படத்தில் ஏ. ஆர்.ரஹ்மான், 'என்ன விலை அழகே...' பாடலுக்கு எடுத்துக் கொண்டார்.

✦ 'பராசக்தி' படத்தில் வரும் 'ஓ...ரசிக்கும் சீமானே...' பாடலை தேவா, 'குஷி' படத்தில், 'ஒரு பொண்ணு ஒண்ணு...' என்று போட்டு விட்டார்.

✦ சொல்லாமலே யார் பார்த்தது...' பாடல் 'கண்ணாளனே எனது கண்ணை..' என மாற்றப்பட்டது.

இப்படிப் பல உதாரணங்களைக் கொடுத்திருக்கிறார் அவர்.

# பெப்ரவரி 04

எந்நாளும் சோகத்தை
இசைத்த-எம்
சொந்தங்களுக்கு
தேசிய கீதமிசைக்க-ஒரு
நல்ல வாய்ப்பு!
***
எந்நேரமும்
'ஷெல்' பயத்தால்
ஆகாயத்தை
அளவெடுக்கும்
எம்மவர் கண்களுக்கு,
அசையும் தேசிய கொடி
காண ஒரு வாய்ப்பு!
***
வரலாறு கற்காமல்
வந்தவர்களுக்கு
நாற்பத்தியெட்டுக்கு முன்
நடந்தவையறிய-ஒரு
நல்ல நேரம்!
***
தேசியம் மறந்த
தேசிய கீதம் மறந்தவரெல்லாம்
தேசம் பற்றி பேச
ஒரு வாய்ப்பு!
***
சுத்தமாய் மடிக்கப்பட்டு
சுகமாய் இருந்த
கொடிக்ளெல்லாம்
வெளியே எடுக்கப்பட்டு
விடுதலை பெற ஒரு
சந்தர்ப்பம்!
***
ஆம்!
சுதந்திரங்களின்
அடையாளங்களான
உங்களுக்கே தான்
வருடத்திற்கொரு முறை தான்
சுதந்திரம்!
***
'எங்களுக்கு எங்கே?
சுதந்திரம்' என்று எழுதி
'தமிழில்' வாசிப்பதற்கே இல்லை
எமக்கு சுதந்திரம்!
***
சரி நேரம்
நெருங்கிவிட்டது;
தேசியக் கொடி ஏற்ற
என் கை விலங்கை
கழற்ற எவராவது
முன் வருவீர்களா?

சி.சிவகுமாரன்-
வட்டகொடை.

# தர்மங்கள் எங்கே?

குளக்கரையடியில்,
குடியிருந்த பொன்னமாக்கா,
குடிசை சுற்றி,
கும்பலாய் கூட்டம்!
***
மக்கள் முண்டிக்கட்டி,
புதினம் பார்த்தனர்;
யானும் சென்று
யாதென்று பார்த்தேன்!
***
பொன்னம்மா மகள்,
செவ்வந்தி இருந்தாள்,
செவ்வந்தி செவ்வந்திதான்,
செஞ் சாந்து வான் போல்...!
***
இன்றுதான் வந்திருந்தாள்,
விடுதலையாகி சிறையிலிருந்து,
கண்டதும் என் கண்கள்,
கொண்டது கண்ணீர்.
***
என்ன துடிதுடிப்பு,
குறுகுறுத்த கண்கள்,
எல்லாம் இன்று,
நீரில் பட்ட தணலாய்!
***
வந்திருந்தாள் அவள்
பிள்ளையுடன்; ஊரார்
வாயைப் பிளந்து
வந்தபடி பேசினர்!
***
"என்னடி இந்தப் பெண்,
இப்படி குழந்தையுடன்,
ஒழுக்கம் கெட்டவளே!" என்றனர்
நரம்பில்ல நாக்கில்.
***
"வாடி அம்மா போவம்
பார்த்தாலே பாவம்
நம்மளுக்கும்," ஒரு கிழவி
போசியபடி போனாள்
***
முறைத்தன என் கண்கள்,
அவளைப் பார்த்து,
பாவம் அப் பெண்,
என்னென்ன கொடுமையோ,
***
எத்தனை தமிழ் பெண்கள்,
தன்மானம் இழந்து,
தலைகுனிந்து வாழ்வது,
தர்மங்கள் செத்து விட்டதோ?

ஜெ.ஏ.ஈழவாணி-வவுனியா.

# தாய்(பாசம்) அறியாதவள்

தாய்ப்பால் குடிக்காது
புட்டிப்பால் குடித்தேன்!
தாலாட்டுக் கேட்காது
திரைப்பாடல் கேட்டேன்!
தாய்மடியில் (தவழாது) தூங்காது
தொட்டிலில் தூங்கினேன்!
தாயின் கைபிடிக்காது
தள்ளுவண்டியில் நடந்தேன்!
ஏனெனில்....
நான் தான்
புலம் பெயர்ந்து வாழும்
தமிழ்க் குழந்தையாச்சே!.....

எஸ்.றோஜனா-யாழ்.அரியாலை.

# அகதிகள்

இழப்பதற்கு
இன்னும்
என்ன உண்டு
இவர்களிடம்?
***
தொற்று நோய் போல்
பரவி வரும்
ஓர் இனம்!
***
உயிர் விளையாட்டில்
ஊசலாடும்
ஊசல் கம்பிகள் போல்
இவர்கள் வாழ்க்கை!
***
உறவுகள்
துண்டாடப்பட்ட
பாசப் பறவைகள்!
***
சொந்தங்களை
சரிசெய்ய முடியாத
பாவப்பட்ட
ஜீவராசிகள்!
***
இவர்களது
உடன் பிறப்புக்கள்
உயிருடன்
எரிக்கப்பட்டார்களா...
இல்லை-
புதை குழிகளிலா...?
***
கடைசியில் இவர்கள்
இனம் தான்
இன்று
சனத்தொகைப் பெருக்கத்தில்!

மல்லிகை. வீ.ஸ்ரீதரன்-
மூதூர்.



# தேன்கிண்ணம்

## நாளைய உலகு

நாளைய உலகில்
சுதந்திரக் கதவுகள்
எங்கும் மூடப்படும்!
விடுதலைக்காக
கை விலங்குகள் உடையும்!
பூமித்தாயில்
புரட்சிகள் வெடிக்கும்!
சமாதானம் தேடி
சகலரும் அலைய,
தரையில் நடக்க
மக்கள் தயங்குவர்!
கண்ணீர் கடலில்
அநேகர் மூழ்க,
ஆயுதக் கொடுமை
தலை விரித்தாடும்!
அமைதிச் சூரியன்
அழிந்து போக,
அகதி முகாம்கள்
அதிகரித்துச் செல்லும்!
அடையாளம் தெரியாப்
பிணங்கள் ஆங்காங்கே
கிடக்க!
அழுகைக் குரல்கள்
அமைதியைக் கெடுக்கும்!
எலும்புக் கூடுகள் எங்கும்
பரவ,
நாய்களும், நரிகளும்
ஊளையிட்டு,
மகிழ்ந்து ஆரவாரிக்கும்!
அடைக்கலம் தேடி
அனைவரும் அலைவர்!
மதங்கொண்ட யானையாய்
மக்கள் அலைய
மாண்ட சந்ததி
மாண்டு கொண்டே
இருக்கும்!

ஹுசைன் முஹம்மட்
தஸ்லிம்-மருதமுனை.

# நிகவனி முன்னேறு



இறைவன் நம்மை பயந்த சுபாவம் உடையவர்களாக படைக்கவில்லை. துணிவுடனும், தைரியத்துடனும் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் மற்ற உயிரினங்களை விட ஓர் அறிவு அதிகமாக வைத்து ஆறறிவுடன் மனிதனாக உருவாக்கினார்.

அன்றைய நாட்களில் இருந்து இன்றைய நாள் வரை பயத்தை உண்டாக்கிக் கொண்டது நாம் தான். மேன்மையான அறிவை கற்பனைக்கு பயன்படுத்தும் படி நாமே ஏற்படுத்திக் கொண்டது தான். பயம் என்பது நினைவுகளின் சுருள். அது நாம் எப்படி எண்ணிக் கொண்டு இருக்கிறோமோ அதற்கு ஏற்றபடி சுருள் சுருளாக சுற்றி அமைத்து கொள்ளும். இதற்கு வடிவமும், உருவமும் இல்லை.

## பயம் இன்றேல் ஜெயம்

ஒன்றுமே இல்லாத ஒன்றை நாமே ஒரு கற்பனைச் செய்து அதற்கு உருவம் கொடுத்துப் பயப்பட்டுக் கொண்டிருப்பது எந்த விதத்தில் நியாயமாக இருக்க முடியும்.

உலகிலுள்ள எல்லாவற்றிற்கும் ஒரு வடிவமும், அமைப்பும் உண்டு. ஆனால் இதற்கு மட்டும் தான் ஒன்றுமே இல்லை. வெற்றிடமாக இருக்கும் ஒன்றில் நம்முடைய கற்பனையைக் கொடுத்து வடிவமாக்கி விடுகிறோம்.

இது எந்த வடிவமாக மாறுகிறதோ, அதுவே பயமாகக் காட்சி அளிக்கும். எந்த வித உயர்வும் இல்லாத ஒன்று நாமே தேடிக் கொண்டு அதனை வளர்த்து விட்ட பிறகு அப்புறம் எப்படி நம்மை விட்டுப் போகும்? இதனை நிதானித்துச் சிந்தித்தால், பயம் என்பது நமக்குத் தேவை இல்லாதது என்று திட்டவட்டமாக அறிந்து கொள்ள முடியும். குப்பையைப் பெருக்கி வெளியே தான் கொட்ட வேண்டுமே தவிர மீண்டும் அதனை வீட்டில் சேகரித்து வைக்க முடியாது அல்லவா!

அதேபோல பயம் என்ற குப்பையை நெஞ்சம் என்ற வீட்டிலிருந்து வெளியேற்றி விட வேண்டும். இது நம்மால் முடியும். காரணம் நாம் தான் அதனைச் சேகரித்தோம். நாமே அதனை வெளியில் கொட்டி விட இயலும்.

ஆறறிவு இருப்பதினால், இதனை உள்ளே வர அனுமதி தராமலும் இருக்கலாம். வெளியே அனுப்பவும் செய்யலாம். எல்லாமே நம்மிடம் தான் இருக்கிறது. இதனை ஏன் அனுமதி தரக் கூடாது என்றால், அது நம்மை உயிரோடு அழித்து விடும். அணையில் ஏற்படும் சிறு ஓட்டை நாளடைவில் அதனையே உடைத்து விடும் சக்தி இருப்பதைப் போலவே பயமும் முதலில் சிறியதாக நுழைந்தாலும், காலப் போக்கில் வாழ்க்கையையே முழுவதும் ஆக்கிரமித்து விடும்.

பயத்தினால் சரிந்த சாம் ராஜ்ஜியங்கள், வீழ்ந்த மாட மாளிகைகள், காய்ந்து போன அரசாட்சிகள், மாண்ட மன்னவர்கள், எழுந்து நடக்க முடியாத அறிஞர்கள், தாழ்ந்த குடும்பங்கள், முன்னேற முடியாமல் முடக்கிப் போனவர்கள் ஏராளம், ஏராளம்!

இதன் காரணமாக தான் பயத்தை நம் இதயத்திற்குள் புகுத்த வேண்டியதில்லை என்று உணர்ந்துக் கொள்ள வேண்டும். பயம் என்னும் மாயவலையில் நாம் மாட்டிக் கொள்ளாமல் இருந்தால் தான் நம்முடைய வாழ்க்கையை பயனுடையதாக ஆக்கிக் கொள்ள முடியும்.

# பேனா நண்பர்கள்



பெயர்: எம்.நபார்
வயது: 22
முகவரி: 66,
தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை.



பெயர்: ஜே. நஸ்மியா
வயது: 18
முகவரி: 568/5,
எம்.எம்.எம். வீதி
அக்கரைப்பற்று-06.
பொழுது போக்கு:
வழமையானவை.

# இந்தவாரம் உங்கள் பலன்

11.02.2001 முதல் 17.02.2001வரை

ஜோதிடர் 'கர்னா'

**மேடம்:**
புதிய தொழில் நன்மை தரும். ஜீவனோபாயம் சிறப்பாக அமையும். கடல் கடந்த வாழ்க்கையிலுள்ளோர்கள் பிரயாண நலன்களைப் பெறுவார்கள். பரணி நட்சத்திரகாரருக்கு பல பிரச்சனைகள் வந்து போகும். கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: இளபம்ச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 11, 14.

**இடபம்:**
தொழிலில் முன்னேற்றம் காட்டும். கடன் பிரச்சனைகள் குறையும். உறவினர்க்ளின் வருகை உண்டு. கார்த்திகை நட்சத்திரக்காரர்களுக்கு பல வெற்றிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 14, 15.

**மிதுனம்:**
தொழில் வளர்ச்சி பெறும். கவலைகள் நிவர்த்தியடையும். தூர தேச தொடர்புகள் நன்மையளிக்கும். சிக்கல்கள் மறையும். தூர இடத்திலுள்ளோர் வசதி வாய்ப்புக்களைப் பெறுவர். நீண்ட நாள் மனக்கவலை நிவர்த்தி பெறும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 12, 14.

**கடகம்:**
இழுபறி நிலை மறையும். தூர இடத்து உறவினர் வெற்றிகளைப் பெறுவர். கல்வி பரீட்சையமைப்பு வெற்றி தரும். விருத்தினர்கள் வரவு என்பன நன்றாக அமையும். இரும்பு, ஆபரணத் தொழில் செய்வோர் நன்மைகளைப் பெறுவர். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 12, 16.

**சிம்மம்:**
புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். பொருள் வசதி பெருகும். பணம் வருவதுடன் முக்கிய கருமங்கள் ஈடேறும். மக நட்சத்திரக்காரர் தொழிலில் நல்ல யோகங்களைப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள்: புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: இளம்பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 14, 15.

**கன்னி:**
பொறுப்புக்கள் கூடும். கடன்பட்டோர் தொழிலில் சிக்கலுள்ளோர் நல்ல முடிவுகளைப் பெறுவர். தூர இடத்திலுள்ள உறவினர்களின் நற்செய்திகிட்டும். அத்த நட்சத்திரகாரக்ருக்கு அலைச்சல் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 11, 12.

**துலாம்:**
மனதில் மகிழ்ச்சி பொங்கும். கூடி இருந்தோர் பிரிவார்கள். வெளி உதவிகள் கிட்டும். எதிர்பார்த்த தொழில் முயற்சிகள் கைகூடும். குடும்பத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். நல்ல மாற்றங்கள் சீராக அமையும்.
அதிஷ்ட நாட்கள்:வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள்: 11, 15.

**விருட்சிகம்:**
வாகனச் சேர்க்கைக்கு இடமுண்டு. எதிர்பார்த்த முக்கிய தொழில், பண விடயங்கள் நன்மை தரும். தடைகள் விலகுவதுடன் குடும்பத்திலுள்ள கஷ்ட நிலமைகள் குறையும். பிரயாண வாய்ப்புக்கள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 15, 16.

**தனுசு:**
காரிய சித்தியுடன் முக்கிய கரும வெற்றி கிட்டும். நோய் குறையும். எடுத்த கருமங்களில் வெளியோரின் உதவி கிட்டும். மூல உத்திராடப் பெண்களிற்கு சுப கரும வாய்ப்புக்கள் அமையும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம்: இளநீலம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள்: 14, 12.

**மகரம்:**
பிள்ளைகளின் சந்தோஷச் செய்தி கிடைக்கும். எதிரிகளின் கை ஓங்காது. கல்வி, புகழைக் கொடுப்பதுடன் இரும்பு வாகனத் துறையில் தொழில் செய்வோர் இலாபமடைவர். குடும்பத்தில் புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 14, 15.

**கும்பம்:**
கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகள் குறைவடையும். எதிர்ப்புக்கள் நீங்குவதுடன் மனதிலுள்ள மாற்றம் நல்ல முடிவுகளைக் கொடுக்கும். மருத்துவச் செலவுக்கு இடமுண்டு. சதயக்காரர் நன்மைகளைப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள் :வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் :நீலம்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 16, 17.

**மீனம்:**
நல்ல முடிவான நிலை தென்படும். குடும்பக் கஷ்டங்கள் நீக்கும். தூர இடத்திலுள்ளோர் இலாப நிலையைப் பெறுவார்கள். திருமணம் தடங்கலாக உள்ளோருக்கு சுப கரும வாய்ப்புக்கள் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 15, 16.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கண் பராமரிப்பு டிப்ஸ்

கண்பார்வை இழந்து விட்டால் வாழ்க்கையே இருண்டுவிடும். இப்படிப்பட்ட கண்களை எப்படிப் பராமரித்து வருகின்றீர்கள். இதோ சில கண் பராமரிப்பு டிப்ஸ்கள்:

✤ புத்தகங்களை 20 நிமிடங்களுக்கு மேல் தொடர்ச்சியாகப் படிக்கக் கூடாது. 20 நிமிடத்திற்கு ஒரு முறை கண்களுக்கு 2 நிமிடம் ஓய்வு கொடுக்க வேண்டும்.

✤ கண்ணுக்கு ஓய்வு கொடுக்க கண்களை மூடிக்கொள்ளலாம். அல்லது பார்வையை நீண்ட தூரத்துக்குச் செலுத்தலாம். இப்படிச் செய்து வந்தால் கண்கள் உடனடியாகப் புத்துணர்ச்சி பெறுகின்றன.

✤ புத்தகம் படிக்கும் போதும், தொலைக்காட்சி பார்க்கும் போதும் அவைகள் கண் அருகில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். கண்ணுக்கும் தொலைக்காட்சிக்குமிடையே குறிப்பிட்ட இடைவெளி இருப்பது அவசியம்.

✤ வீட்டில் இரவு நேரங்களில் புத்தகம் படித்தால் போதுமான ஒளி அறையில் இருக்க வேண்டும். இருட்டான அறையில் இருந்து புத்தகம் படிக்கக் கூடாது.

⋆ கம்பியூட்டரில் வேலை செய்பவர்கள் அதிக 'பிரைட்' வைத்துக் கொண்டு வேலை செய்தாலும், கண் பாதிக்க வாய்ப்புண்டு.



'மல்டிகலர்' படத்தையும் அடிக்கடி திரையில் பார்ப்பதும் நல்லதல்ல.

✤ 'பவர்' இல்லாத கண்ணாடியைப் பயன்படுத்தும்போது கூட மருத்துவர்களின் ஆலோசனை பெறுவது நல்லது.

✤ தலைவலி தொடர்கதையானால், உடனே கண் மருத்துவரைச் சந்திப்பது அவசியம். காலம் கடந்தால் கூடுதல் செலவாகும். ■

## இறைச்சியை மட்டும் சாப்பிட்டால்

பெண்கள் தங்களது உணவில் அதிகமாக இறைச்சியை மட்டுமே சேர்த்துக் கொண்டால், அவர்களுடைய எலும்பு பலமற்றதாகிவிடும். இதனால் அவர்களுக்கு அடிக்கடி எலும்பு முறிவுகள் ஏற்படக்கூடும் என கலிஃபோர்னிய பல்கலைக் கழகத்தில் நடத்திய ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

அந்த ஆய்வில் இறைச்சி வகைகளால் கிடைக்கும் புரதச் சத்தைவிட, காய்கறி, பயறு வகைகளால் கிடைக்கும் புரதச் சத்துத்தான் சிறந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறைச்சியையே தொடர்ந்து சாப்பிட்டால், உடலில் அமிலத்தன்மை மிகும். இந்த அமிலத் தன்மையைச் சமன் செய்ய உப்பு மற்றும் தாதுச் சத்துக்கள் தேவை. இவை எலும்புகளில் தான் உள்ளன.

இதனால் எலும்புகளில் இருந்து இந்தத் தாதுச் சத்துக்கள் எடுக்கப்பட்டு, உடலின் அமிலத்தன்மை சீர் செய்யப் பயன்படுவதால், எலும்பு தேய்மானம் அடைகிறது. ■

## குழந்தைகளைக் கவனியுங்கள்



குழந்தைகள் எழுந்து நடக்கும் பருவத்தில் கையில் கிடைப்பதை எல்லாம் வாய்க்குக் கொண்டு செல்வார்கள். சட்டைப் பொத்தான்கள், கற்கள், காசு போன்றவைகளை விழுங்கவும் கூடும்.

குழந்தைகள் எதையாவது விழுங்கி விட்டால் என்ன செய்யலாம்?

☆ குழந்தைகள் பொருட்களை விழுங்கிச் சுவாசத்தடை ஏற்பட்டால், குழந்தையைத் தலை கீழாகக் காலைப் பிடித்துத் தூக்க வேண்டும். அப்படியே தூக்கியபடி முதுகில் தட்ட வேண் டும். விரலைத் தொண்டைக்குள் செருகி, பொருட்களை எடுக்க நினைப்பது விபரீதத்தை ஏற்படுத்தி விடும். சுவாச நாளங்களுக்குள் பொருள் இறங்கிப் போய் விடக்கூடும்.

☆ சாப்பிடக்கூடாத மருந்துகளைக் குழந்தைகள் குடித்து விட்டால் விரலைத் தொண்டைக்குள் விட்டு, வாந்தி எடுக்க வைக்க வேண்டும். சுடுநீரில் சிறிது உப்பைப் போட்டுக் கரைத்துக் குடிக்க வைத்தாலும் வாந்தி வரும்.

☆ மண்ணெண்ணெய், சுண்ணாம்பு போன்றவைகளைக் குழந்தைகள் பயன்படுத்தி விட்டால், வாந்தி எடுக்க வைக்கக்கூடாது. அவை எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். வயிற்றைச் சுத்தப்படுத்தும் அளவுக்குரிய மருத்துவ உதவிகளைத் தேட வேண்டும்.

☆ குழந்தை எதையாவது விழுங்கி விட்டால் முதலுதவி செய்தவுடன் எவ்வளவு விரைவாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முடியுமோ அந்த அளவுக்கு உயிருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும். ■


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

⋆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

⋆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

⋆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** JB

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 17-02-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது 74 புவனா

அமெரிக்கா, ஐரோப்பியநாடுகள் ஆகிய மேற்குலகில் பாலியல் தொடர்பான அம்சங்கள் எதுவும் இள மட்டங்களுக்கு தவிர்க்கப்பட்டவையல்ல. அங்குள்ள வாழ்க்கை முறை சிறுவர்களுக்குக்கூட எல்லாமே தெரிந்து விடக்கூடியனவாகவே-எல்லாம் திறந்த புத்தகங்களாகவே விளங்குகின்றன.

அந்தரங்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டியவை என்று எதுவுமே கிடையாது. ஒரு சிறுவனுக்கோ சிறுமிக்கோ பத்து வயதானதும் பாலியல் தொடர்பான சகல அறிவும் அத்துப்படியாகி விடுகிறது. இத் துறையில் தங்கள் பிள்ளைகளைக் கட்டுப் பாட்டுடன் வளர்க்கவேண்டும் என்ற எண்ணம் இல்லை.

தமிழ்நாட்டின் தலை சிறந்த தமிழ் நாவலாசிரியராக விளங்கிய 'லட்சுமி' என்ற புனைபெயரில் எழுதியவர் டாக்டர் திரிபுர சுந்தரியை அமெரிக்கா அழைத்து, அங்கு அவரைப் பல மாநிலங்களுக்கும் அனுப்பி, அமெரிக்க வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள வாய்ப்பளித்திருந்தது. தனது அமெரிக்கப் பயணம் பற்றி ஒரு சஞ்சிகையில் எழுதிய கட்டுரையில் ஒரு கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். அதில் தான் ஒரு மாதம் வரை தங்கியிருந்த ஓர் அமெரிக்கக் குடும்பத்தில் நிகழ்ந்த சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

## கென்னத் ஸ்டாரின் கைங்கரியம்



அந்த வீட்டுப் பெண்ணுக்கு 13 வயது. அவள் சில நண்பர்களுடன் உல்லாசப் பயணம் ஒன்று சென்றிருந்தாள். தான் சென்றிருந்த இடத்துக்கு போய்ச் சேர்ந்து விட்டதாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாயாருக்குத் தகவல் சொல்லும்போது, டாக்டர் திரிபுரசுந்தரியும் அந்தத் தாயாரின் அருகில் இருந்தார். அப்போது அந்தத் தாயார் தனது மகளிடம், "நீ புறப்படும்போது உனக்குரிய 'பில்'லை போதுமான அளவு எடுத்துக் கொண்டாயா?" என்று கேட்டுள்ளார். டாக்டர் திரிபுரசுந்தரி, 'பில்' என்பது ஏதோ தலைவலிக்கோ தடுமலுக்கோ பயன்படுத்தும் மாத்திரை என்றுதான் எண்ணியிருந்தார். மருத்துவரல்லவா? "என்ன பில்?" என்று வினவியிருக்கிறார்.

"அந்தத் தாயார் எதுவித தயக்கமுமில்லாமல், கருத்தடை மாத்திரைதான்" என்று கூறியதும் திகைப்புற்றார். 13 வயதேயான தன் மகள் கருத்தடை பாவிக்க வேண்டும் என்பதில் ஒரு தாயார் கவனம் செலுத்துகிறார் 'என் றால், அங்குள்ள வாழ்க்கை முறையை மேலும் விளக்க வேண்டிய அவசியமில்லை.

'லட்சுமி' எழுதிய கட்டுரையை நான் ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்னர் படித்ததாக ஞாபகம். அன்றே அவ்வாறானால் ஏறத்தாழ கால் நூற்றாண்டு காலம் கடந்த பின்னர் இன்று நிலமை எவ்வாறிருக்கும் என்பதை ஊகித்தறிந்து கொள்ளலாம்.

இத்தகைய நவீன நாகரிகத்தால் பெரிதும் முன்னேற்றம் கண்ட அமெரிக்காவில் மோனிக்கா-கிளின்ரன் காதல் விவகாரம் ஏன் இத்தனை தூரம் பாரதூரமானதாக-பூதாகரமானதாக வெடிக்க வேண்டும் என்பது சற்றுச் சிந்திக்க வேண்டிய ஒருவிடயம்தான்.

இந்த இடத்தில்தான் கென்னத் ஸ்டாரின் பிரவேசம் பல சம்பவங்களை உலகறியச் செய்யத் தொடங்குகிறது.

முன்னாள் நீதிபதியும், அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனை இப்போது கூண்டில் ஏற்றி உலகம் முழுவதும் அவர் செல்வாக்கை வீழ்ச்சியடையச் செய்தவருமான கென்னத் ஸ்டார் ஒரே நாளில் இதைச் செய்துவிடவில்லை. கிளின்ரனை வீழ்த்துவதற்கு அவர் வகுத்த வியூகங்கள் ஏராளம். 'கிளின்ரன் ஒரு பெண் பித்தர்' என்பதை நிரூபிக்க, அவர் தனது சொந்த உளவுப் படைமூலம் ஆதாரங்களை தேடிச் சேகரித்துக் கொண்டிருந்தார். அப்போது கென்னத் ஸ்டாருக்கு துருப்புச் சீட்டு போல கிடைத்த அழகிதான் மோனிக்கா.

ஆரம்பத்தில் ஒன்றும் தெரியாத பாப்பா போல, 'தனக்கு எதுவுமே தெரியாது' என்று சாதித்து விட்டார் மோனிக்கா.

மனம் தளரவில்லை வக்கீல் கென்னத், தனது இரகசியப் படையை அனுப்பி விசாரணையை தீவிரப்படுத்தியபோது, அவருக்கு மோனிக்காவின் தோழி லிண்டாவின் அறிமுகம் கிடைத்தது.

கிளிண்டனை பதவி இறக்கம் செய்ய வேண்டும் என்று துடிப்பவர்களில் லிண்டாவும் ஒருவர். வெள்ளை மாளிகையின் முன்னாள் பெண் ஊழியர் இவர்.

கிளிண்ரனின் உல்லாச வாழ்க்கையை வெளிப்படுத்துவது என்ற லட்சியத்தை உருவாக்கிக் கொண்ட லிண்டா, இதற்கான விவரங்களை சேகரிக்கத் தொடங்கிய போது லிண்டாவுக்கு புதையல் போல கிடைத்தார், மோனிக்கா.

மற்றவர்கள் இரகசியங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்ட லிண்டாவும் தனது உள்ளத்தில் புதைந்து கிடக்கும் இரகசியங்களை யாரிடமாவது கொட்டித் தீர்க்க வேண்டும் என்று நினைத்த மோனிக்காவும் தோழிகள் ஆனவுடன் கேட்க வேண்டுமா?

லிண்டாவை உற்ற தோழி போல கருதிய மோனிக்கா, தனக்கும் கிளின்ரனுக்கும் இடையே நடந்த செக்ஸ் உறவுகள் பற்றிய இரகசியங்களை விலாவாரியாகக்கூற அதிர்ச்சிகரமாக இருந்தன, அந்தரங்க தகவல்கள்.

மோனிக்கா கூறும் இரகசியங்களை டேப்பில் பதிவு செய்து கொண்டால், எப்போதாவது உதவும் என்று திட்டம் தீட்டிய லிண்டா, அதன் பிறகு தன்னுடன் மோனிக்கா பேசியதை எல்லாம் இரகசியமாக ஒலிப் பதிவு செய்து வந்தார்.

வெள்ளை மாளிகையில் இருந்த போது, கிளின்ரன் தன்னுடன் முறையற்ற உறவு கொண்டு இருந்ததாக மோனிக்கா லிண்டாவிடம் அனைத்தையும் கூறி வைத்தாள்.

கிளின்ரன் டெலிஃபோனில் 'செக்ஸ்' பேச்சை கேட்டு இரசிப்பதில் அலாதி பிரியம் உடையவர் என்பதால், வெள்ளை மாளிகைக்கு செல்ல முடியாத நேரங்களில் டெலிஃபோனில் கிளின்ரனுடன் செக்ஸ் வார்த்தைகள் பேசி மகிழ்ந்ததாகவும் மோனிக்கா கூறினாள். கடந்த நவம்பர் மாதம் ஒருநாள் வார்ட்டர்கேட் பகுதியில் உள்ள மோனிக்காவின் வீட்டுக்குச் சென்று தங்கி இருந்ததாக கூறும் லிண்டா, நள்ளிரவு 2 மணிக்கு மோனிக்காவை கிளின்ரன் அழைத்துப் பேசுவதைக் கண்டு அசந்து விட்டார்.

மோனிக்காவுக்கு கிளின்ரன் கொடுத்த பல பரிசுப் பொருட்கள் மோனிக்காவின் வீட்டில் இருப்பதையும் அவர் நேரிலே பார்த்தார்.

ஒருநாள், கிளின்ரன் அலுவலகத்திலிருந்து கேதலீன் வில்லி என்ற இளம் பெண் ஊழியர் கலைந்த கேசத்துடனும், லிப்ஸ்டிக் அழிந்து அவசரத்தில் சரியாக மாட்டப்படாத மேல் சட்டையுடனும் வந்ததை லிண்டா பார்த்து திகைத்தாராம்.

இப்படி கிளின்ரனை பற்றி ஏராளமான தகவல்களை சேகரித்து வைத்த லிண்டாவை கென்னத் ஸ்டார் சும்மா விட்டு விடுவாரா? உடும்பு பிடியாக மடக்கி விட்டார்.

"மோனிக்காவை கண்காணித்து அவர் பேசுவதை எல்லாம் டேப்பில் பதிவு செய்து தரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அந்த டேப் உரையாடலில் மோனிக்கா, தனக்கும் கிளின்ரனுக்கும் இருக்கும் உறவுகளை ஒளிவு மறைவு இன்றி கூறி இருந்தார்.

லிண்டாவிடம் மோனிக்கா பேசிய உரையாடல்களின்போது மோனிக்கா என்ன சொன்னார் என்ற விவரம் இரகசியமாக பாதுகாக்கப்பட்டு இருந்தபோதிலும் அந்த 'இரசியம்' அனைத்து அமெரிக்க பத்திரிகைகளிலும் எப்படியோ இரகசியமாக வெளியாகி விட்டது.

அந்த உரையாடலில் மோனிக்கா பேசி இருக்கும் சில பகுதிகள்:

"வெள்ளை மாளிகையில் உயர்ந்த பதவியில் இருக்கும் ஒருவருக்கும் எனக்கும் மிக நெருக்கமான தொடர்பு இருக்கிறது. நீங்கள் வற்புறுத்திக் கேட்பதால் சொல்கிறேன். கிளின்ரன்தான் அந்த ஆள்...

கிளின்ரன் தனது காம இச்சையை தணித்துக் கொள்ள என்னை பயன்படுத்தும் விதமே வித்தியாசமானது. அவர் முன் அடிக்கடி மண்டியிட்டதால், எனது காலுறையில் முழங்கால் பகுதி தேய்ந்து கிழிந்து விட்டது.

தேவைப்படும்போது எல்லாம் கிளின்ரன் என்னை அழைத்து சுகம் தேடுவார் இதற்கு நேரம் காலமே கிடையாது...

*(வருவாள்)*

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**யாழ்ப்பாணம் வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் | த. திலகவதி, 'அலுக்கை', அளவெட்டி, யாழ்ப்பாணம். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பாப்பா முரசு சிறுகதை

# சந்தேகப் பேர்வழி

மூன்னொரு காலத்தில் கொட்டாம்பட்டி என்ற கிராமத்தில் சாந்தப்பன் என்பவன் வாழ்ந்து வந்தான். இவன் மிகவும் இனிமையாகப் பாடுவான். மனதை மயக்கும் இவனது இசையில் மயங்காதவர்களே கிடையாது. அத்தனை இனிய குரல்வளம் உடைய சாந்தப்பன், சரியான சந்தேகப் பேர்வழி. யாரையும் நம்ப மாட்டேன்.

காரணம் இவனுக்கு இரண்டு கண்களும் தெரியாது. அதனால் எங்கே நம்மை ஏமாற்றி விடுவார்களோ என்ற சந்தேகம் இவனுக்குள் இருந்து கொண்டே இருந்தது.

இவனுக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன்தான் சாந்தப்பனை கூட்டிச் சென்று நகரவீதியில் அமர்த்தி விட்டு வேலைக்குச் செல்வான். அங்கே பாட்டுப்பாடி கிடைக்கும் பணத்தைக் கொண்டு சாந்தப்பனும், கூலி வேலை செய்து கிடைக்கும் பணத்தைக் கொண்டு அவனது நண்பன் நம்பிராசாவும் வாழ்ந்தனர்.

நம்பிராசா மிகவும் நல்லவன். தன் நண்பனுக்கு உண்மையிலேயே ஒரு கண் போல இருந்தான். ஆனால், சாந்தப்பனோ அவ்வப்போது நண்பன், தன்னை ஏமாற்றி தன்னுடைய காசுகளை அபகரித்துக் கொள்வதாக நினைத்துக் கொண்டு, அநாவசியமாகச் சண்டை போடுவான். எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வான் நம்பிராசா.

ஒருநாள் அந்த ஊரில் பிழைப்பு சரியில்லாததால் பக்கத்து நாட்டுக்குச் சென்று பிழைத்துக் கொள்ளலாம் என்று முடிவுக்கு வந்தனர்.

குறிப்பிட்ட ஒரு நாளில் இருவரும் தாங்கள் கஷ்டப்பட்டு சேமித்து வைத்திருந்த பணத்தில் வாங்கிய கிழ குதிரையில் பயணம் செய்தனர்.

'மாலை நேரம் வந்தது. இருவரும் ஒரு பெரிய ஆல மரத்தடியில் ஓய்வெடுத்தனர். நம்பிராசா, "நான் பக்கத்தில் உள்ள ஆற்றில் முகம், கை, கால் கழுவிவிட்டு உனக்கு குடிக்கத் தண்ணீர் கொண்டு வருகிறேன்." என்று சொல்லிச் சென்றான்.

சிறிது நேரத்தில் சாந்தப்பனின் கையில் வழவழப்பான பொருள் ஒன்று தட்டுப்பட்டது. அதைக்கையில் எடுத்தான்.

'ஆஹா... அருமையான குதிரை சவுக்கு. இதை நண்பனுக்கு கொடுக்கக்கூடாது. நாமே வைத்திருந்து, யாரிடமாவது விற்று காசாக்கிக் கொள்ளலாம்,' என்று நினைத்தான்.

அப்போது தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்த நம்பிராசா திடுக்கிட்டான்.

"நண்பா! நீ கையில் வைத்திருப்பது பாம்பு. தூர எறி," என்று கத்தினான்.

"ஏன் என்னை ஏமாற்றிவிட்டு நீ எடுத்துக்கலாம் என்று பார்க்கிறாயா? அந்தப் பேச்சே வேண்டாம். புது நாட்டுக்குள் சென்றதும், இந்த குதிரைச் சவுக்கை நான் நல்ல விலைக்கு விற்பேன்," என்றான்.

"நண்பா! என்னை நம்பு. அது விஷப் பாம்பு தூக்கி எறி," என்றான் மீண்டும்.


"சும்மா வளவளன்னு பேசாதே. எனக்குத் தெரியும் யாரை நம்புவது; யாரை நம்பக் கூடாதுன்னு. இந்த வழவழப்பான அழகிய சாட்டை மீது உனக்கு இத்தனை ஆசை கூடாது," என்று சொல்லிவிட்டு ஓர் உதறு உதறினான்.

ஆத்திரம் கொண்ட பாம்பு அவனைக் கடித்தது. சிறிது நேரத்தில் நுரை தள்ளி கீழே இறந்து விழுந்தான் சாந்தப்பன்.


கதறி அழுதான் நம்பிராசா.

எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுவது ஒரு கொடிய நோய் போன்றது. இந்த நோயை கிட்டவே சேர்த்துக் கொள்ளாதீர்கள். இல்லாவிடில் உங்கள் மன நிம்மதியே பறிபோய்விடும்.





மூன்று குழாய்கள் உள்ளன. எந்தக் குழாயைப் பொருத்தினால் நீர் வரும் என்று தெரியாமல் திண்டாடும் இவருக்கு நீங்கள் கண்டுபிடித்துச் சொல்லுங்கள்.




## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **17.02.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **382**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 379

பரிசுக்குரியவர்:
சி. தேவப்பிரியன்,
விபுலாநந்த மத்திய கல்லூரி, காரைதீவு-02.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| இ. பிரியங்கா, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | சு. சத்தியதர்ஷன், சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. |
| க. டினோஷன், இக்கோல் ஆங்கிலப் பாடசாலை, திகன. | கே. சபீர்த்தனி, பாக்கியம் தேசியபாடசாலை, மாத்தளை. |
| எம். அப்துல் ஹகீம், பறகஹதெனிய, வேவுட. | எல். மயூரி, தம்பேதென்ன த.வி., அப்புத்தளை. |
| வே. யோகபவாணி, தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை. | ஜெ. பிரஷாஞ்சலி, சரஸ்வதி த.ம.வி, லிந்துல. |
| பாத்திமா ஹசன் ஸ.ீ.பீ, விகாரமகாதேவி பாலிகா மகா வித்தியாலயம், கண்டி. | எஸ். எம். சஹிதா, மண்டலகுடா, கல்பிட்டிய. |

# அடக்கம்

பண்டைக்கால மக்கள் மரணச்சடங்கை மிகவும் வினோதமான முறையில் நடத்தி வந்திருக்கிறார்கள். கி.மு. 550ம்ஆண்டு வாக்கில் வாழ்ந்த சைத்தானிய மன்னர் வம்சத்தைச் சேர்ந்தவர்களின் பழக்கம் இது: மன்னர் டேரியஸ் இறந்தபோது, அவரது மனைவிகள் பயன்படுத்திய குதிரைகள் எல்லாவற்றையும் சேர்த்துப் புதைத்து விட்டார்கள்.



○○



பண்டைய கிரேக்கர்கள் இறந்தவர்களுடன் நாணயத்தையும் சேர்த்துப் புதைத்தார்கள். இப்படிச் செய்தால் இறந்தவர்கள் ஸ்டைக்ஸ் என்னும் நதியைக் கடந்து விட்டால் சொர்க்கலோகம் நிச்சயம் என்ற நம்பிக்கை இருந்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

○○

பண்டைய சீனர்கள் சொத்து சுகங்களை விட்டுச் செல்ல விரும்பாதவர்கள். இதனால் தமது சொத்துக்களை காகிதங்களில் செய்து, இறந்தவர்களுடன் சேர்த்து எரித்து விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.



○○



ஸ்கண்டிநேவியாவைச் சேர்ந்த வைக்கிங் மன்னர் வம்சத்தினர் தங்களது சிறந்த போர்வீரர்கள் மரணமடையும்போது, அவர்களின் உடல்களுடன் சேர்த்து அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்களையும் புதைத்தனர். சொர்க்கத்தில் ஏதாவது சண்டை நடந்தால் இந்த ஆயுதம் அவர்களுக்குப் பயன்படும் என்ற நம்பிக்கை.

○○



# மர்மத் தொடர்

11

# மேனகாவின் மோகம்

"தெரியாது ஸார்..."

அதுவரைக்கும் ஒன்றுமே பேசாமல் மௌனமாய் இருந்த ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதா குறுக்கிட்டாள்.

"ஸார்... டெலிஃபோன் எக்ஸ்சேஞ்சை காண்டாக்ட் பண்ணி இன்பர்மேஷன்ல கேட்டா பெங்களூர் பட்டேல் ஹாஸ்பிடல் ஃபோன் நம்பர் கிடைக்கும்."

"நீயே ட்ரை பண்ணு நிவேதிதா!" பராந்தகன் சொல்லவும்; நிவேதிதா ரிசப்ஷனிஸ்டின் அனுமதியைப் பெற்று, டெலிஃபோனை உபயோகித்து, எக்ஸ்சேஞ்சை தொடர்பு கொண்டு ஸ்பெஷல் இன்ஃபர்மேஷனில் பெங்களூர் பட்டேல் ஹாஸ்பிடலின் டெலிஃபோன் நம்பரை வாங்கினாள். பராந்தகன் எஸ்.டி.டி. மூலம் ஹாஸ்பிடலின் சீஃப் டாக்டரை தொடர்பு கொண்டார். ஆங்கிலத்தில் பேசினார்.

"டாக்டர்...! நாங்கள் மெட்ராஸ். போலீஸ். இங்கே நடந்த ஒரு கொலை சம்பந்தமாக ஒரு தகவல் வேண்டும்."

"கேளுங்கள்..."

"மேனகா என்கிற பெயரில் உங்கள் ஹாஸ்பிடலில் ஒரு நர்ஸ் பணிபுரிந்து கொண்டிருக்கிறாள். அந்தப் பெண்ணிடம் நாங்கள் பேச வேண்டியுள்ளது...."

"பெயர் என்ன சொன்னீர்கள்..."

"மேனகா..."

"நீங்கள் சொன்ன அந்தப் பெயரில் இந்த ஹாஸ்பிடலில் யாரும் பணிபுரியவில்லையே....?"

"டாக்டர் அந்த மேனகா உங்கள் ஹாஸ்பிடலில்' வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதகாலம் தான் ஆகியுள்ளது. மார்ச் முப்பத்தி ஒண்ணாம் தேதி மட்ராஸில் இருக்கிற மது நேர்ஸிங்ஹோமிலிருந்து ரிலீவாகி ஏப்ரல் முதல் தேதி உங்கள் ஹாஸ்பிடலில் பணிக்குச் சேர்ந்து இருக்கிறாள்."

"வெரி ஸாரி டு ஸே... திஸ்...! கடந்த ஆறு மாத காலத்தில் எந்த ஒரு புது நர்ஸையும் நாங்கள் அப்பாய்ண்ட் செய்யவில்லை. உங்களுக்கு யாரோ தப்பான தகவலைக் கொடுத்து இருக்கிறார்கள்..."

"டாக்டர்.. ஆர்.. யூ... ஷ்யூர்...?"

"சர்ட்டன்லி. எங்கள் ஹாஸ்பிடலில் இப்போது எழுபத்தியிரண்டு நர்ஸ் பணியாளர்கள் மூன்று ஷிஃப்ட்களில் மாறி மாறி பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த எழுபத்தியிரண்டு பேர்களில் மேனகா என்ற பெயரில் யாரும் இல்லை."

"மன்னிக்க வேண்டும் டாக்டர். இன்னும் ஒரு பதினைந்து நிமிஷம் கழித்து மறுபடியும் உங்களுக்கு டெலிஃபோன் செய்கிறேன். வெரிஃபை செய்து வைத்துக் கொள்ளுங்கள்." பராந்தகன் ரிஸீவரை வைத்துவிட்டு நர்ஸ் ஆரோக்கியமேரியிடம் திரும்பினார்.

"நீங்க சொன்ன ஹாஸ்பிடலில் மேனகா நர்ஸ் வேலை பார்க்கலையாமே...?".

"அதைப்பத்தி எனக்கு எதுவும் தெரியாது ஸார். மேனகா கையில் பட்டேல் ஹாஸ்பிட்டலோட அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர் இருந்ததை நான் பார்த்தேன்..."

பராந்தகனுக்கு பி.பி. இல்லாமலேயே தலையைச் சுற்றியது.

★★★

ஜீவரத்னத்தின் முகம் முழுவதும் முள்கரண்டியால் குத்தப்பட்ட மாதிரி ரத்தக் களறியாய் தெரிய கட்டிலின் தலைமாட்டில் சின்னதாய் ஒரு ரத்தக்குளம் தேங்கி உறைந்து போயிருந்தது.

எம்.எல்.ஏ.நவரத்னம் அழுது நனைந்த விழிகளோடு நாற்காலிக்கு தளர்வாய் உடம்பைக் கொடுத்து, போலீஸ் சம்பிரதாயங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டர் குணசேகர் கெஸ்ட் ஹவுஸ் வேலையாள் லிங்கப்பாவை கேள்விகளால் பதம் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன நடந்தது... உண்மையைச் சொல்லிடு. உனக்குத் தெரியாமே இந்த பங்களாவுக்குள்ளே யாரும் வந்து இருக்க முடியாது..."

வேலையாள் லிங்கப்பா அழுகை வெடிக்கும் குரலோடு மண்டியிட்டான்.

"அய்யா... எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்கய்யா. ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி கூட அய்யா மாடியிலிருந்து குரல் கொடுத்தார் போனேன். தலைவலியா இருக்கு, மாத்திரையும் காப்பியும் கொண்டு வான்னு சொன்னார். கொண்டு போனேன். சாப்பிட்டு படுத்துக்கிட்டார். அதுக்கப்புறம் நீங்க வந்த பின்னதான் மாடிக்குப் போனேன்..."

"அதுக்கப்புறம் யாராவது ஜீவரத்னத்தைப் பார்க்க வந்தாங்களா...?"

"யாரும் வரல்லீங்கய்யா..."

"நீ இதே பங்களாவில்தான் இருந்தியா இல்ல வெளியே போயிருந்தியா....?"

"நான் எதுக்குங்கய்யா வெளியே போறேன்...! இருபத்திநாலுமணி நேரமும் இங்கேயேதான் விழுந்து கிடப்பேன்."

"யாரும் வரலைன்னு சொல்றே... சரி...! போன்ல யாராவது கூப்பிட்டாங்களா...?"

லிங்கப்பா யோசித்துவிட்டு தலையாட்டினான். "ஆமாங்கய்யா...! சின்னய்யா தலைவலி மாத்திரையும் காப்பியும் சாப்பிட்டு படுத்த உடனேயே ரெண்டு பேர் போன் பண்ணியிருந்தாங்க..."

"யார் அவங்க...?"

"இருங்கய்யா...! நோட்புக்ல பேர் எழுதி வெச்சிருக்கேன்."

லிங்கய்யா கீழே இறங்கிப் போய் ஒரு நோட்புக்கோடு வந்தான். குணசேகரிடம் நீட்ட அதை அவர் வாங்கிப் பிரித்தார்.

தேதி வாரியாக ஃபோன் செய்தவர்களின் பெயர்கள் பால்பாயிண்ட் பேனாவால் கொட்டைக் கொட்டையாய் எழுதப்பட்டிருந்தது.

தேதிவாரியாய் பெயர்கள்.

மே மாத முதல் தேதிக்கு பார்வையைக் கொண்டு போனார்.

ஃபோன் செய்த இரண்டு பேர்களின் பெயர்களும் தெரிந்தன.

1.மல்லிகை மன்னன்

2.மேனகா.

இன்ஸ்பெக்டர் குணசேகர் நோட்புக்கில் எழுதியிருந்த அந்தப் பெயர்களை வாய் விட்டுப் படித்தார்.

"மல்லிகை மன்னன், மேனகா!" திரும்பி எம்.எல்.ஏ.நவரத்னத்திடம் கேட்டார்.

"ஸார்...! இவங்க யார்ன்னு உங்களுக்குத் தெரியுமா...?"

நவரத்னம் தலையை அசைத்தார். "மல்லிகை மன்னனைத் தெரியும்.. அவர் ஒரு மேடைப் பேச்சாளர். ஜீவரத்னத்தைப் பார்க்க 'அடிக்கடி வந்ததுண்டு."

"இந்த மேனகா..?"


"இது யார்ன்னு தெரியலை."

குணசேகர், வேலையாள் லிங்கய்யாவிடம் திரும்பினார். "இவங்க ரெண்டு பேரும் ஃபோன்ல என்ன சொன்னாங்க...?"

"ஜீவரத்னம் ஐயாகிட்ட பேசணும்னு சொன்னாங்க... அவர்படுத்து தூங்கிட்டிருக்கார்னு சொன்னதுமே ரிஸீவரை வெச்சுட்டாங்க."

"வேற எதுவுமே பேசலையா...?"

"அந்தப் பொண்ணு கொஞ்சம் யோசிச்சு 'வீட்ல யாரெல்லாம் இருக்காங்கன்னு' கேட்டிச்சு. அய்யா வெளியூர் போவா'ரான்னு கேட்டு, நான் இல்லேன்னு சொன்னதும் ரிஸீவரை வெச்சுடுச்சு..."



"அந்தப் பொண்ணு மேனகா எந்த ஃபோன் நெம்பரிலிருந்து பேசிட்டிருக்கான்னு நீ கேட்கலியா?"

"இல்லீங்கய்யா"

"ஏன்...?"

"ஃபோன்ல பேசறவங்ககிட்ட அது மாதிரி கேள்வியெல்லாம் கேட்டா அய்யாவுக்கு பிடிக்காதுங்கய்யா..."

"இந்த மேனகா இதுக்கு முந்தி எப்பவாவது ஃபோன் பண்ணியிருக்காளா?"

"இல்லீங்கய்யா"

இன்ஸ்பெக்டர் குணசேகர் தலையில் இருந்த தொப்பியைக் கழற்றி விட்டு நெற்றியை அவஸ்தையாய் கீறிக்கொண்டார்..

'யார் இந்த மேனகா...?'

குழப்ப விநாடிகளில் அவர் தத்தளித்துக்கொண்டிருக்க, டெலிஃபோன் 'விருட் விருட்'டென்று கதற ஆரம்பித்தது. எம்.எல்.ஏ.நவரத்னம் ரிஸீவரை எடுப்பதற்காக நக்ர முயல குணசேகர் குறுக்கிட்டார்.

"ஒரு நிமிஷம் ஸார்..."

அவர் நின்றார்.

"என்ன இன்ஸ்பெக்டர்...?"

"இப்ப ஃபோன் பண்றது யார்ன்னு நமக்குத் தெரியாது. நீங்களும் ஜீவரத்னமும் பிரதர்ஸ். ஸோ குரலோட தொனியும் ஒரே மாதிரி இருக்க வாய்ப்பு அதிகம். நீங்க ரிஸீவரை எடுத்து பேசும்போது, உங்க பிரதர் ஜீவரத்னம் மாதிரியே பேசுங்க. நான் கீழே ஹாலில் இருக்கிற ஃபோனுக்குப் போய் ஹியர் பண்றேன்..."

எம்.எல்.ஏ. தலையசைக்க குணசேகர் ஹாலை நோக்கி வேகவேகமாய்ப் போய் அங்கிருந்த டெலிஃபோன் ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தார்.

நவரத்னம் "ஹலோ!" சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஹலோ..."

மறுமுனையில் பதட்டமாய் குரல் கேட்டது.

"ஹலோ... யார் பேசறது... ஜீவரத்னமா?"

"ஆமா..."

"நான் மல்லிகை மன்னன். நீ இப்பத்தான் தூங்கி எந்திரிச்சியா?"

"ஆமா... கொஞ்சம் தலை வலி... ஒரு மாத்திரை சாப்பிட்டு தூக்கம் போட்டு எந்திரிச்சேன். ஆமா... என்ன விஷயம்.. திடீர் ஃபோன்... குரல் வேற டென்ஷனா இருக்கு...?"

"டென்ஷன்ல இருந்துக்கிட்டிருக்கேன் நான்."

"விஷயத்தைச் சொல்லு"

"தேவேந்திரனோட கதைய்ய யாரோ முடிச்சுட்டாங்க தெரியுமில்ல..."

"தெரியும்..."

"உனக்கு பயம் வரலையா...?"

"எதுக்கு பயம்...?"

"சரியா போச்சு.. ஃபோன்ல எதையும் சொல்லிட்டிருக்க முடியாது. நான் நேர்ல வர்றேன். நீயும் நானும் கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்க வேண்டிய நிமிஷங்கள் இது... நான் வரட்டுமா வேண்டாமா...?"

"சரி... நீ உடனே நம்ம கெஸ்ட் ஹவுஸ் பங்களாவுக்கு புறப்பட்டு வா..."

*மர்மம் தொடரும்....*

கிரைம்சக்கரவர்த்தி

ராஜேஷ்குமார்

# பாடல் பிறந்த கதை

புரட்சித்தலைவர் எம்.ஜி. ஆர். நடித்து வீனஸ் பிக்சர்ஸ் தயாரித்த 'ஊருக்கு உழைப்பவன், திரைப்படம். அதில் உள்ள ஒரு பாடலின் சூழலை எனக்கு விவரித்தார்கள்.

த்ன் குழந்தை இறந்துவிடுகிறது. அதே



கவிஞர் முத்துலிங்கம்

சமயம் பிறர் குழந்தையின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு எம்.ஜி. ஆர். பாடல் பாட வேண்டும்.

பொதுவாக எம். ஜி. ஆரின் படங்களுக்கு ஒரு பாடல் எழுத வேண்டுமென்றால், அதற்கு நான்கு பல்லவி எழுதி டியூன் போட்டுக் கொடுக்க வேண்டியது வழக்கம். அதில் ஒரு பல்லவி:

**நெஞ்சுக்குள்ளே அன்பு என்னும் கடல்**
**-இருக்குது**
**நினைக்கும் போது பாசமென்னும் அலை**
**-அடிக்குது.**
**என் கண்ணுக்குள்ளே குழந்தை என்னும்**
**-மலர் சிரிக்கின்றது.**
**என் கவிதைக்குள்ளே மழலை ஒன்று குரல்**
**-கொடுக்கின்றது.**
**எது நடக்கும்? எது நடக்காது?**
**இது எவருக்கும் தெரியாது,**
**எது கிடைக்கும்? எது கிடைக்காது?**
**இது இறைவனுக்கும் புரியாது!**



இந்தப் பல்லவி படத்தின் வசனகர்த்தா ஆர்.கே. சண்முகத்திற்கு பிடித்துப் போய் விட்டது. உடனே இதை எடுத்துக்.கொண்டு சத்யா ஸ்டூடியோவிற்குச் சென்றோம். அங்கே தான் 'நவரத்தினம்' படத்தின் சூட்டிங்கில் எம்.ஜி.ஆர். இருந்தார். பல்லவியைப் படித்த எம்.ஜி.ஆர். "இது நன்றாக இருக்கிறது. ஆனால் நான் நினைப்பது போல இல்லையே" என்றார்.

உடனே வசனகர்த்தா "இதைவிட இந்த சிச்சுவேசனுக்கு நன்றாக எழுத முடியாது!" என சொல்ல "நான் உங்களையா எழுதச் சொன்னேன். முத்துலிங்கத்தை அல்லவா எழுதச் சொன்னேன்". என்று சொன்னவர், "வேறு மாதிரி எழுதிக்கொண்டு வா" என்று கூறிவிட்டார்.

பொதுவாக எம். ஜி. ஆர் அவர்கள் தாம் என்ன நினைக்கிறார் என்பதை வெளியே சொல்லமாட்டார். ஆனால் அவர் என்ன நினைக்கிறார் என்பதை புரிந்து கொண்டு யார் எழுதுகிறார்களோ அவர்களுக்குத்தான் தொடர்ந்து வாய்ப்புக் கொடுப்பார். அப்படி புரிந்து கொண்டவர்களில் நானும் ஒருவன் என்பதால்தான் தொடர்ந்து அவர் படங்களில் எழுதிக் கொண்டிருந்தேன்.

அடுத்த நாள் வீனஸ் ஸ்டூடியோவில் கம்போஸிங். எப்போதும் எனக்கு நடந்து கொண்டே இருந்தால்தான் பாடல் எழுத வரும். ஒரே இடத்தில் இருந்தால் பாடல் எழுத வராது. அதேபோல நான் சுருட்டுக் குடித்துக் கொண்டே எழுதிய பாடல்கள் ஐநூறுக்கும் மேல் மிகவும் பிரபலமாகி இருக்கின்றன.

ஆகவே படத்தின் இசையமைப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களிடம் சொல்லி விட்டு நடக்கத் தொடங்கினேன். வீனஸ் ஸ்டூடியோவிலிருந்து நடந்தே போக்ரோடு சிவாஜி கணேசன் அவர்களின் வீடுவரை வந்துவிட்டேன். அப்போதும் பல்லவி எதுவும் எனக்கு உதிக்கவில்லை. மீண்டும் திரும்பி வந்தேன்.

பாதி தூரம் வந்திருப்பேன். ஒரு பியட் கார் என்னை உரசுவது போல வந்து நின்றது. காரில் ஐசரி வேலன் இருந்தார்.

அப்போது நான் 'தென்னகம் பத்திரிகையில் 'எம்.ஜி.ஆர். பிள்ளைத் தமிழ்' என்று ஒரு சிற்றிலக்கியம் எழுதிக்கொண்டிருந்தேன். ஐசரி வேலன் அதைப் பற்றி மிகவும் பிரமாதமாக பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தார். உடனே எனக்கு ஒரு பொறி தட்டியது.

நாம் எம்.ஜி. ஆரை ஒரு பிள்ளையாகக் கருதித்தானே பிள்ளைத் தமிழ் எழுதுகிறோம். படத்திலும் எம். ஜி. ஆர். ஒரு பிள்ளைக்காக தானே பாடுவது போல காட்சி உள்ளது என யோசித்து,

**"பிள்ளைத்தமிழ் பாடுகிறேன்.**
**ஒரு பிள்ளைக்காகப் பாடுகிறேன்.**
**மல்லிகை போல் மனதில் வாழும்**
**மழலைக்காகப் பாடுகிறேன்.** என்று எழுதினேன்.

இதை எம்.ஜி.ஆர். உடனே ஒ.கே. செய்தார். பாடலும் மிகவும் பிரபலமானது. ஆனால் ரெக்கார்டுகளில் தவறுதலாக இப்பாடலை புலமைப்பித்தன் என்று அச்சிட்டதால் வானொலியிலும் தவறுதலாக அதையே சொல்கிறார்கள்.

அதேபோல் 'இன்று போல் என்றும் வாழ்க, என்ற படத்திற்கு நான் எழுதிய **'அன்புக்கு நான் அடிமை!' தமிழ் பண்புக்கு நான் அடிமை** என்ற பல்லவியை எம். ஜி. ஆர் ஒ.கே. செய்தார் சரணத்திற்கு டியூன் போட்டு பாட்டு எழுதச் சொன்ன அடுத்த நாளே ரெக்கார்டிங் வாகினியில் கம்போஸிங் நடந்து கொண்டிருந்தது.

நான் அங்கு போய் நடந்து கொண்டே யோசித்துக் கொண்டிருந்தேன். அதைப் பார்த்த படத்தின் தயாரிப்பாளர் வி.டி.லட்சுமணன் செட்டியார் "என்னப்பா அதைப் புடிக்கறான், இதைப் புடிக்கிறான், மட்டையைப் புடிக்கிறான், சவுக்குக் கட்டையை புடிக்கிறான், இந்த முத்துலிங்கம் சரணத்தை மட்டும் புடிக்க மாட்டேங்கறான்" என்றார்.

உடனே எனக்கு கோபம் வந்துவிட்டது.

"எதையுமே புடிக்காம பாட்டு எழுதறவங்க யாராவது இருந்தா அவங்கள வெச்சு நீங்க பாட்டு எழுதிக்குங்க! "என்று சொல்லிவிட்டு நான் கிளம்பிவிட்டேன்.

உடனே படத்தின் இயக்குநர் கே.சங்கரும் எம்.எஸ். விஸ்வநாதனும் என்னை சமாதானம் செய்தார்கள்.


"சினிமாவில் தெரிந்தும் பலர் பேசுவார்கள். தெரியாமலும் பேசுவார்கள். அதையெல்லாம் நாம் கண்டும் காணாமலும் போய்விட வேண்டும். இல்லையென்றால் இந்தத் துறையில் முன்னுக்கு வர முடியாது." என அவர்களுக்கு ஏற்பட்ட சில சினிமா அனுபவங்களை உதாரணம் கூறினார்கள். நானும் சமாதானமானேன்.

பின்னர் ஒவ்வொரு சரணமாக எழுதி, ஏ.வி.எம். ஸ்டூடியோவில் சூட்டிங்கில் இருந்த எம்.ஜி. ஆரிடம் காட்டுவதும் அவர் திருத்துவதுமாக காலையில் துவங்கிய ரெக்கார்டிங் இரவு 11 மணி வரை நீண்டது.

அடுத்த நாள் இப்பாடலை எடுத்துக் கொண்டு அவுட்டோர் சூட்டிங்கிற்கு செல்ல வேண்டியிருந்ததால் இந்த அவசரம்.

சூட்டிங் கிளம்பும் போது எம்.ஜி. ஆர். பத்திரிகையாளர்களிடம் முத்துலிங்கம்தான் இந்தப் பாடல் பிறக்க மிகவும் சிரமப்பட்டார். அவருக்கு என் நன்றியை சொல்லுங்கள் என்று சொன்னதாக 'சினிமா எக்ஸ்பிரஸ்' ராமமூர்த்தி என்னிடம் சொன்னார். •

# எஸ்.டி.எஸ். கண்ட பாரதி



பாரதியார் பிராமண குலத்தில் பிறந்தவர். பிராமண கலாசாரப்படி வளர்ந்தவர். ஆனால் பின்னர் அவர் ஒரு புரட்சியாளராக மாறிவிட்டார். அவருடைய கொள்கைகளும், நடைமுறைகளும் பிராமணர்களையே ஆத்திரமூட்டுபவையாக அமைந்தன.

தெரிந்தவரை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

- பிராமணர்கள் முறுக்கு மீசை வைத்துக் கொள்வதில்லை. பாரதியார் கற்றை மீசையாக வைத்து பெரிய ஜமீந்தார்கள் போல முறுக்கி விட்டுக் கொண்டார்.
- பிராமணர்கள் பூனூல் தரித்திருக்க வேண்டும். பாரதியார் தாம் தரித்திருந்த பூனூலையே அறுத்து எறிந்து விட்டார்.
- பிராமணர்கள் தமது உணவில் புனிதமாக இருக்க வேண்டும். எதை உண்பது, எப்படி உண்பது, யாரோடு சேர்ந்து உண்பது என்பனவற்றிலெல்லாம் பிராமணர்களுக்கு நெறிமுறை உண்டு, பாரதியார் இவற்றை எல்லாம் மீறினார். எல்லாரோடும் சேர்ந்து சகலவிதமான உணவுகளையும் உட்கொண்டார்.
- தீண்டத் தகாதவர்களுடன் பிராமணர்கள் ஒட்டி உறவாடக் கூடாது. கனகலிங்கம் என்ற ஹரிஜன இளைஞனுக்கு வேதமந்திரங்களை உபதேசித்து, அவனுக்கு அபிஷேகம் செய்து பூனூலும் அணிவித்தார். (தாமே பூனூலை வேண்டாம் என்று அறுத்தெறிந்தவர் ஹரிஜனனுக்கு ஏன் பூனூலை போட்டார் என்பது தான் புரியவில்லை. பூனூலை தரித்த பிராமணர்களுக்கு வீம்பு உண்டாவதற்காக அப்படிச் செய்தாரோ?)
- அவர் கடையம் என்னும் இடத்தில் தங்கியிருந்தபோது, ஏனைய பிராமணர்களின் கேலியையும், கிண்டலையும், தூஷணைகளையும் பொருட்படுத்தாமல், தாழ்த்தப்பட்ட மக்களுடன் சரி சமமாகச் சேர்ந்து பழகி, கூட உட்கார்ந்து சம போசனமும் செய்தார்.
- நாய், பன்றி, கழுதை போன்ற பிராணிகளையும் கோழி, வாத்து போன்ற பறவைகளையும் பிராமணர்கள் வளர்க்கக்கூடாது; அவை அசுத்தமானவை என்ற காரணத்தால். ஆனால் பாரதியாரோ சகல பிராணிகளிடமும் சம அன்பு கொண்டவர். "காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின்றன் கரிய நிறந் தோன்றுதையே நந்த லாலா" என்று பாடியவர். ஒரு சமயம் அவர் வாசலில் மேய்ந்து கொண்டு நின்ற கழுதைக் குட்டியை அணைத்து முத்தமிட்டார். அதைக் கண்டு அவர் வீட்டாரும், மற்றவர்களும் அவரைப் பித்தர் என்று கூட ஏசினார்கள்.
- புதுச்சேரி, கள்ளுக்கும் ஃபிரஞ்சு நாட்டுக் குடிவகைகளுக்கும் பெயர் பெற்ற இடமாகும். புதுவையில் பாரதியார் வாழ்ந்த போது மதுவருந்தியிருக்கிறார். கள்ளின் இன்பவெறி மயக்கத்தை அனுபவித்திருக்கிறார். மனிதனை உன்மத்தமாக்கக் கூடிய 'பிரம்ம மூலிகை' என்று சொல்லப்படும் கஞ்சாவையும் புகைத்திருக்கிறார். அதனால் அவரைக் 'கஞ்சா புலவன்' என்று கூட அவர் உறவினர்கள் ஏளனஞ் செய்திருக்கிறார்கள். பராசக்தியைக் குழந்தை வடிவத்தில் வைத்து அவர் பாடிய கண்ணம்மா பாடலில்-'கன்னத்தில் முத்தமிட்டால், உள்ளந்தான் கள் வெறி கொள்ளுதடீ; உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா! உன்மத்தமாகுதடீ' என்ற வரிகளும் கண்ணன் என் காதலன் என்ற பாட்டில் 'நின்றன் மோடி கிறுக்குதடி தலையை நல்ல மொந்தைப் பழைய கள்ளைப் போலே' என்ற வரிகளும் சுயானுபவத்தின் பிரதிபலிப்புகள் என்றே கொள்ளலாம். கஞ்சா புகைத்தல், கள் அருந்தல் போன்ற செயல்கள் அந்தக் காலத்து பிராமண சமூகத்தினருக்கு ஒவ்வாத இழி செயல்களாகக் கொள்ளப்பட்டன.
- இவை தவிர பாரதியார் பிராமண சமூகத்தினரை ஈவிரக்கமின்றிச் சாடி வந்திருக்கிறார். ஜாதி பேதம், வர்ண பேதம் பார்ப்பதை தவறு என்று கூறியிருக்கிறார். எல்லாரும் சமம், எல்லாரும் சரிநிகர் சமானம் என்று பாடியிருக்கிறார்.

"பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே" என்றும்,

"மனிதரில் ஆயிரம் ஜாதி என்ற வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை" என்றும்,

"நந்தனைப் போலொரு பார்ப்பான் இந்த நாட்டினில் இல்லை"என்றும்,

"சூத்திரனுக்கொரு நீதி, தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி, சாத்திரம் சொல்லிடுமாயின், அது சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்" என்றும்,

"பேராசைக்காரனடா பார்ப்பான்- ஆனால் பெரிய துரை என்னிலுடல் வேர்ப்பான், யாரானாலும் கொடுமை இழைப்பான். துரை இம்மென்றால் நாய் போலே உழைப்பான்" என்றும்,

"முன்னாளில் ஐயரெல்லாம் வேதம் சொல்வார். மூன்று மழை பெய்ததடா மாதம்; இந்நாளில் பொய்மைப் பார்ப்பார், இவர் எது செய்தும் காசு பெறப்பார்ப்பார்" என்றும்-இவ்வாறாகவும், இதற்கு மேலும் பல கட்டங்களில் பாரதியார் பாடியிருக்கிறார். இப்பாடல்களை அவர் எழுத்தில் வடித்தது மட்டுமன்றி பிராமணப் பெருமக்களுக்கு முன்னே வாய் விட்டுப் பாடியும் வந்திருக்கிறார்.

பாரதியாரின் மேற்கூறிய செயல்களால் பார்ப்பன மக்கள் மனம் புண்பட்டுப் போனார்கள். அதனால் அவர்கள் பாரதியாரை தம்மோடு சேர்ந்த ஒருவராக மதிக்கவில்லை. அவரை ஒரு 'அவுட்-காஸ்ட்'டாகவே கருதினார்கள். அவரை ஒரு பெரிய கவிஞராக மதித்து அந்த நேரத்தில் கனம் பண்ணாமல் விட்டதற்கு மேற்கூறியவைகளே காரணங்களாகும்.

அன்றைய கால கட்டத்தில் இப்படி அவர்கள் நடந்து கொண்டதும் தவறு என்று கொள்ள முடியாது. காந்தி மகாத்மாவின் புரட்சிகரமான எண்ணங்களும், செயல்களும், தீண்டாமை ஒழிப்பு இயக்கங்களும். தேசியப் போராட்டங்களும் பின்னர் இந்தியாவின் சிந்தனை ஓட்டத்தை திசை திருப்பும்வரை பாரதியாரின் செயல்கள் பெரிய குற்றங்களாகத் தென்பட்டது இயற்கையே.

பாரதியார் வறுமையினாலும், பிரிட்டிஷ் பொலிஸாராலும் விரட்டப்பட்ட போது அவருடைய சமூகம் அவருக்கு ஆதரவு கொடுக்கவில்லை. அவர் பசியையும், குடும்பத்தின் தேவைகளையும் பச்சாத்தாபத்தோடு பார்க்கவில்லை. உதவி புரிய முன்வரவில்லை. அதனால் ஒரு சாதாரண மனிதனின் Reaction பாரதியாரிலும் பிரதிபலித்து விட்டது அவ்வளவுதான்.

பாரதியார் ஒரு தீர்க்கதரிசியாகவும், ஞானியாகவும் விளங்கியதால், கால் நூற்றாண்டுக்குப் பின்னர் வெளிப்பட வேண்டிய அவருடைய சிந்தனைகளும், செயல்களும், எழுத்துகளும், பேச்சுகளும் கால் நூற்றாண்டுக்கு முன்னர் வெளிப்பட்டுவிட்டன.

இந்த உண்மையை கொஞ்சம் நிதான மனதோடு பார்த்தால், பாரதியார்மீது யாரும் 'பிழை சொல்லி' அவருடைய தனி மனித உணர்ச்சிக் குமுறல்களை, அவருடைய தேசியக் கவி என்ற அந்தஸ்தோடு மோதவிட மாட்டார்கள்.

திரு.எஸ்.சத்தியமூர்த்தி தாமே ஒரு பிராமணராக இருந்தும்கூட, பாரதியாரிடம் அளவு கடந்த பற்றுக் கொண்டவராக விளங்கினார். பல சந்தர்ப்பங்களில் அவர் பாரதியாரின் திறமைகளைச் சிலாக்கித்துப் பேசியும் எழுதியும் வந்தவராவார்.

பாரதியாரை அவர் காலத்திலேயே சரியாகப் புரிந்து கொண்டு, அவருடைய மேதா விலாசத்தை மேன்மைப் படுத்திய மிகச் சில பிராமணகுலப் பிரமுகர்களுள் திரு. சத்தியமூர்த்தி குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்கினார்.

பாரதியார்மீது திரு.சத்தியமூர்த்தி கொண்டிருந்த பற்றையும் பாச உணர்ச்சியையும் அறிந்திருந்தமையினாலேதான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பாரதி படத் திரை நீக்க விழாவிற்கு அவரை அபிமானத்தோடு அழைத்தார் சுவாமி விபுலாநந்தர்.

அன்று பாரதியைப்பற்றி விபுலாநந்தர் பேசுகையில், அவருடைய கவிதைகளின் சிறப்பை எடுத்துக் காட்டி அவரைப் பழந்தமிழ்க் கவிஞர்களுடனும், மேல் நாட்டுக் கவிஞர்களுடனும் ஒப்பிட்டுப் பேசினார்.

"பாரதி இந்த நூற்றாண்டில் தோன்றிய மஹாகவி, வரகவி, தேசியக் கவி" என்று அவர் முத்தாய்ப்பு வைத்தார். சுவாமிகளின் ஆற்றொட்டமான தெள்ளு தமிழ்ப் பேச்சு திரு.சத்தியமூர்த்திக்கு மிகவும் பிடித்துக் கொண்டது. அதைவிட பாரதியைப் பற்றி திரு. சத்தியமூர்த்தி அன்று வரை கொண்டிருந்த உயர்ந்த எண்ணத்தையும் மதிப்பையும் சுவாமிகளின் பேச்சு மேலும் அதிகரிக்கச் செய்தது.

சுவாமி விபுலாநந்தரின் வேண்டுகோளுக்கிணங்க, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பாரதியாருடைய திருவுருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்துவிட்டுச் சென்னை திரும்புகையில் திரு.எஸ்.சத்தியமூர்த்தியின் மனக் கண்களில் அந்த நிகழ்ச்சி ஒரு 'பிளாஷ்-பாக்' (Flash back) சினிமாக்காட்சி போல நிச்சயம் ஓடியிருக்கும்.

அது என்ன அந்த நிகழ்ச்சி? எப்போது நடைபெற்ற நிகழ்ச்சி?

நிகழ்ச்சி பாரதியாரின் பாடல் புத்தகங்களைப் பற்றியது. நடந்த வருடம் 1928!

மஹாகவி பாரதியார் இறக்கும் போது அவருக்கு வயது 39. இறந்த வருடம் 1921. பரம தரித்திர நிலையிலேயே அவர் இறந்தார். வறுமை அவரை வாட்டிப் பொசுக்கிய நிலையிலேயே இறந்தார். இறந்த விதமும் புதுமையானது.



'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாடிய பாரதிக்கு சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஆலயத்தில் நின்ற யானையும் ஒரு நெருங்கிய தோழனாக விளங்கியது.

பார்த்தசாரதி ஆலயத்துக்கு தினமும் சென்று திரும்புகையில், பாரதியார் கையில் தேங்காய் பாதியும், வாழைப்பழமும் கொண்டு வந்து அந்த யானைக்குக் கொடுத்து, அது உண்பதை உவகையோடு கண்டு களிப்பார். அதன் தும்பிக்கையைத் தொட்டுத் தடவி, 'குசலம்' விசாரித்து விட்டுத்தான் வீட்டுக்குச் செல்வார்.

வீட்டிலே பசி அரசோச்சிய போதிலும் அவர் அந்த தேங்காய் முடியையும், கதலிப் பழத்தையும் வீட்டுக்கு எடுத்துச் செல்ல மாட்டார். அந்த கஜத்தின் கரத்துள் திணித்து விட்டுத்தான் செல்வார். அப்படி ஒரு ஜீவகாருண்ணியம் அவருக்கு!

அன்றும் அவர் சிறிது நேரம் அந்த கோயில் யானையுடன் "சரசமாடுவதற்காக"ச் சென்ற போது யானை ஏனோ மூர்க்கம் அடைந்து பழம் வாங்கும் கையால் பாரதியை எட்டித்தள்ளி விட்டது. தடால் என்று கீழே விழுந்த பாரதி எழுந்து நடக்க ஒரு மாதம் பிடித்தது. ஆயினும் அவருடைய முதுகு முள்ளந்தண்டில் குறைபாடு இருந்தது. தக்க அறுவைச் சிகிச்சையோ, ஆஸ்பத்திரிச் சிகிச்சையோ அளிக்க யாரும் உதவவில்லை. ஏற்றவாறாகக் கவனிக்கப் பட்டிருந்தால் அவர் மேலும் சிலகாலம் வாழ்ந்திருக்கலாம்.

நடமாடத் தொடங்கி சுமார் ஒரு மாதத்துக்குள்ளாக "காலா உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன்; என்றன் காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்" என்று பாடிய கவிராஜ கம்பீரனை காலன் கவர்ந்து விட்டான்.

பாரதியார் தம் மனைவியையும் இரு பெண் குழந்தைகளையும் நிர்க்கதியாக விட்டுச் சென்றார்.

பாரதியாரின் மனைவி திருமதி செல்லம்மாள் பாரதி, குடும்பத்தின் வறுமையைப் போக்க பாரதி அன்பர்கள் சிலரின் பண உதவி கொண்டு பாரதியின் பாடல்களை நூலாக வெளியிட்டு விற்று வருமானம் தேட முயன்றார்.

பாரதியாரின் பாடல்கள் சிலவற்றைப் பள்ளிக் கூடப் பாடப் புத்தகங்களில் சேர்த்துக்கொண்டு அதற்காக ஏதோ சில ரூபாக்களைக் கொடுக்கச் சில பதிப்பகங்கள் பரிதாபத்தால் முன்வந்தன. இவ்வாறு பாரதி பாடல் 1928 ஆம் ஆண்டு வரை எப்படியோ உயிர் வாழ்ந்து கொண்டிருந்தது.

அந்தக் கால கட்டத்தில் பாரதியாரின் பாடல் புத்தகங்கள் சில பர்மா நாட்டுக்குள் நுழைந்தன. பர்மாவில் வட்டிக் கடையும், தேக்கு மர வியாபாரமும், பாக்குவியாபாரமும், சம்பா அரிசி வியாபாரமும் செய்து வந்த நாட்டுக் கோட்டைச் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் பாரதி பாடலைப் பர்மாவுக்கு எடுத்துச் சென்று அங்கு பொது நிகழ்ச்சிகளில் பாடி வந்தார்கள்.

பாரதி பாடல்கள் புரட்சிகரமானவை. அவை அங்கு பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகச் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டி விடுகின்றன என்பதை உணர்ந்த பர்மா அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டது.

அதாவது பர்மா அரசாங்க கஸட் பத்திரிகையிலே பாரதி பாடல் தடை உத்தரவு ஒன்றைப் பிரசுரித்தது. அதன்படி பாரதி பாடல்களை வைத்திருப்பது, அச்சிடுவது, பாடுவது போன்றவை தேசத் துரோகக் குற்றங்கள் ஆக்கப்பட்டன. பாரதி பாடல் பிரதிகளைப் பறி முதல் செய்யச் சரத்துக்கள் சேர்க்கப்பட்டன.

அதுவரை சும்மா கிடந்த சென்னை அரசாங்கம், பர்மா கஸட்டைப் பார்த்ததும் கண்ட பாவனையில் கொண்டை முடிக்க ஆரம்பித்தது.

(இன்னும் வரும்)

தொகுத்தளிப்பவர்
இரா.பத்மநாதன்

---

# வாரம் ஒரு வார்த்தை!

## 4.வாழ்வின் பொருள்

ஒரு பெரிய பாராட்டு விழா நடந்துக் கிட்டிருந்தது! ரயில்வேயிலே வேலை செஞ்சிக்கிட்டிருந்த ஒருத்தருக்குத்தான் அந்தப் பாராட்டு விழா.

அதுவும் சாதாரண தொழிலாளியா வேலை செஞ்சிக்கிட்டிருந்த ஒருத்தருக்கு அந்தப் பாராட்டுவிழா! பல முக்கியமான தலைவர்கள்லாம் வந்திருக்காங்க அவரைப் பத்திப் பேசறதுக்காக!

அந்தத் தொழிலாளி அன்னிக்குத்தான் தன்னுடைய வேலையிலே இருந்து 'ரிட்டயர்' ஆகிறார்!

எல்லாரும்தான் பதவியிலேயிருந்து ஒரு நாள் 'ரிட்டயர்' ஆறாங்க!

இருந்தாலும் எல்லாருக்கும் இந்த அளவுக்குப் பெரிசா விழா நடந்ததில்லே!

ஆனா இவருக்கு நடக்குது!

அது ஏன்?

காரணம் இருக்கு!

என்ன காரணம்ங்கறது அவரைப்பத்தி பலபேர் பேசறப்போதான் புரிஞ்சிது!

ஒருத்தர் பேசினார்:

"இன்னிக்கு பதவி ஒய்வு பெறுகிற இந்தப் பெரியவர் இருக்காரே, இவரு மத்த எல்லாரையும் போல சாதாரணமானவர் இல்லே!

தன்னுடைய கடமையிலே கண்ணா இருந்தவர். கடமையிலேயிருந்து அவர் தவறுனதே இல்லை. என்னிக்கு இந்த வேலையிலே சேர்ந்தாரோ அன்னையிலேயிருந்து இன்னிக்கு வரைக்கும் அவர் ஒருநாள் கூட 'லீவு' எடுத்தது இல்லை. இது பெரிய சாதனை!"ன்னார் அவர்.

இன்னொருத்தர் பேசினார்:

"அவரு இந்த வேலையிலே எப்படி சேர்ந்தாரோ அப்படியே கடைசி வரைக்கும் இருந்து ரிட்டயர் ஆறார்! வாழ்நாள் அவருக்கு ஒரு சின்ன புரமோஷன் கூட கிடைக்கலே! அப்படி இருந்தும் அவர் மனம் சலிப்படையலே! தளர்ச்சியடை யலே!



தொடர்ந்து வேலைக்கு வந்தார்! தன் கடமையைச் செய்தார்!" அப்படின்னார் இவர்.

இன்னொருத்தர் பேசினார்

"ஒரு சமயம் அவரோட சம்சாரத்துக்கு ரொம்ப உடம்பு சுகமில்லாமே போச்சு! அந்த சமயத்துலே கூட அவங்களை ஆஸ்பத்திரியிலே சேர்த்துட்டு, நேரா வேலைக்கு வந்துட்டார்"ன்னார். இப்படி இவங்கள்லாம் பேசினது உண்மைதான்! அப்படித்தான் அந்த பெரியவர் நடந்துகிட்டார்! ஒரு நாள் கூட கடமையிலே இருந்து தவறுனது இல்லே! லீவு நாள்லே கூட அவரு வேலைக்கு வந்துடுவார். அவரோட வேலை என்ன தெரியுமா?

தினமும் ரயில்வே ஸ்டேஷனுக்கு வருவார். கையிலே ஒரு சுத்தியலோ... இரும்புத்துண்டோ ஏதோ ஒண்ணு வச்சிருப்பார்! இதை கையிலே வச்சிகிட்டு பிளாட்பாரத்துலே வந்து நின்னுகிட்டு இருப்பார். ரயில் வந்து நிக்கும்!

உடனே இவரு தன் கடமையை ஆரம்பிச்சுடுவார். அதாவது 'இஞ்சின்'லே ஆரம்பிச்சி ஒவ்வொரு பெட்டியா பார்த்துக் கிட்டு வருவார்.

ஒரு பெட்டியும்-இன்னொரு பெட்டியும் இணையற இடம் இருக்குல்லே! அந்த இடத்துக்குப் போவார். கையிலே உள்ள சுத்தியலாலே அங்கே ரெண்டு தட்டு தட்டுவார், மறுபடியும் வருவார். அடுத்த பெட்டிக்குப் போவார். ரெண்டு பெட்டிக்கும் நடுவாலே போவார் அங்கே போயி வழக்கம்போல சுத்தியலாலே தட்டுவார்... மறுபடியும் வருவார்... இப்படியே கடைசி பெட்டி வரைக்கும் போவார். இதுதான் அவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த வேலை! இதை அவர் ஒழுங்கா செய்தார். அந்த ரயில் போயி அடுத்த ரயில் வந்து நிக்கும்... உடனே மறுபடியும் இவரு வேலையை ஆரம்பிச்சுடுவார். ஒவ்வொரு பெட்டிக்கு நடுவலே போயி தட்டிப்பட்டு வருவார்...

தென்கச்சி – கோ. சுவாமிநாதன்

இந்த வேலையை அவரு கடைசி வரைக்கும் தவறாமே செஞ்சி முடிச்சிருக்கார்.

அதனாலேதான் அவருக்கு இந்தப் பாராட்டுவிழா! பலபேரு பரிசு குடுத்தாங்க! பொன்னாடை போர்த்தினாங்க! பாராட்டுப் பத்திரம் வாசிச்சுக் குடுத்தாங்க...

எல்லாத்தையும் வாங்கிக்கிட்டு கடைசியா அவரு நன்றி தெரிவிச்சிப் பேசினார். தொண்டையை கனைச்சிக்கிட்டுப் பேச ஆரம்பிச்சார்.

"எல்லாரும் என்னை அளவுக்கு அதிகமா புகழ்ந்து பேசினீங்க! ஏதோ என் கடமையை செஞ்சேன்! அதுக்கு மாசா மாசம் சம்பளம் வாங்கிக்கிட்டேன்! இன்னிக்கி ரிட்டயர் ஆகிறேன்! அவ்வளவுதான்! இதுக்குப் போயி இவ்வளவு பெரிய விழா தேவை இல்லைங்கறது என் அபிப்பிராயம்! ஆனாலும் இந்த கடைசி நேரத்துலே ஒரு சந்தேகத்தை உங்ககிட்டே சொல்லிபுடணும்னு நினைக்கிறேன்...

இவ்வளவு வருஷமும் கடமை தவறாமே வேலை செஞ்சேன்!

உண்மைதான்!

ஒவ்வொரு ரயில்லேயும்-ஒவ்வொரு பெட்டியிலேயும் தவறாமே போயி தட்டிக்கிட்டிருந்தேன்!

ஆனா ஒரு விஷயம்.

ஏன் அப்படித் தட்டினேன்ங்கறது இந்த நிமிஷம் வரைக்கும் எனக்கு தெரியாத ஒண்ணு! தட்டச் சொன்னாங்க தட்டினேன்!"-னாரு! எப்படி இருக்கு இது! இந்தக்கதை யாருக்காகன்னு நினைக்கிறீங்க! ஏன் வாழறோம்ன்னு தெரியாமலேயே இந்த உலகத்துலே வாழ்ந்துகிட்டிருக்கிறவங்க சிலபேர் உண்டு! அவங்களுக்காக!

சும்மா சொல்றேன்னு நினைக்காதீங்க!

சிலபேரு 'செத்துப் போனாரு'ன்னு சொல்லும்போது தான் அப்படி ஒருத்தரு உயிரோட இருந்தாருங்கறதே ஞாபகத்துக்கு வருது!

இல்லையா?

(வார்த்தைகள் தொடரும்)

# அக்கரைப் பச்சை

எப்பிடி மேனை இருக்கிறியள்? புது வரியமும் வந்திட்டுது. தமிழனுக்கு எந்த வரியத்திலை தான் நல்ல காலம் வரப் போகுதோ? அந்த அல்வாய் முத்துமாரி அம்மனுக்குத் தான் வெளிச்சம். என்ன, என்னை ஆரெண்டு தெரியேல்லைப் போலை. நான் தான் மீனாட்சி. இந்தக் கிழவி என்னடா அடிக்கடி வந்து கழுத்தை அறுக்கிறாளே எண்டு முகத்தைச் சுழிக்கிறியளோ? வயசு போனால் உப்பிடித்தான் மேனை எதையும் மனசிலை போட்டு மூடி வைச்சிருந்தால், மூச்சு முட்டுற மாதிரி நெஞ்சுக்கை என்னவோ செய்யும். பட்டுப் பட்டெண்டு எதெண்டாலும் வெளியே சொன்னால் தான் பாரங்குறைஞ்சு நிம்மதியாயிருக்கும்.



முந்தி நானும் உங்களைப் போல இளவயசா இருக்கேக்கை உப்பிடித்தான் வயசு போனதுகளைப் பார்த்து, ஏன் இந்தக் கிழடுகள் ஒரு மூலைக்கை பேசாமல் கிடக்கிறதுக்கு, பழஞ்சீலை கிழிஞ்ச மாதிரி புறுபுறுத்துக் கொண்டு திரியுதுகள் எண்டு நினைப்பன். இப்பவெல்லோ விளங்குது நீங்களும் என்ரை வயசு வர... அது தான் ஒரு எண்பது எண்பத்தைஞ்சு வயசிலை இந்த மீனாட்சிப் பாட்டி சொன்னது மெத்தச் சரி எண்டு விளங்கும். "ஐயோ கிழவி, உன்ரை வயசு வரை நாங்கள் உயிரோடை இருக்க மாட்டம். ஒண்டில் சாப்பாடில்லாமல் செத்துப் போடுவம். அல்லாட்டில் செல்லடி, துப்பாக்கிக் குண்டு எண்டு ஏதாவதொண்டிலை மண்டையைப் போட்டிடுவம்?" எண்டு முணுமுணுக்கிறியள் போலை. எங்கடை கையிலை என்னத்தை மேனை வைச்சிருக்கிறம்? எல்லாம் மேலை ஒருத்தன் இருந்து விளையாட்டுக்காட்டுறான். நாங்கள் அவன் ஆட்டுவிக்கிறபடி ஆடுறம். அவ்வளவுதான்.

அது சரி, எதையோ சொல்ல வந்திட்டு பாதை மாறி எங்கையோ போறன். உப்பிடித்தான் மேனை இப்பவெல்லாம் ஒரே மறதி. சில வேளை சொல்ல வந்ததைச் சொல்லாமலே விட்டுறேன். என்ரை கதை கிடக்கட்டும். உங்கை நீங்கள் சாமான் சண்டியில்லாமல் கஷ்டப்படேக்கை உந்த வெளிநாட்டிலை இருக்கிறதுகள் எப்படியெல்லாம் அனுபவிக்குதுகள் எண்டு பெருமூச்சு விடுவியள். உங்களிலை பிழையில்லை. நானும் அல்வாயிலை இருக்குமட்டும் கனடா எண்டால், ஒரு சொர்க்கபுரி எண்டு தான் நினைச்சன். இஞ்சை வந்த பிறகெல்லோ என்ன கூத்தெண்டு தெரியுது.

முக்கால் வாசிப்பேர் 'டயற் டயற்' எண்டு அளவு சாப்பாடுதான். உடம்பு பெருத்துப் போச்சாம். கொலஸ்ரோல், சுகர் ஹாட் அற்றாக் எண்டு ஊரிலை கேள்விப்படாத வருத்தமெல்லாம் இஞ்சை சர்வசாதாரணமா எல்லாருக்கும் இருக்கு. அதாலை அரிசி, மா, சீனி எண்டு எல்லாம் மலிவா வேண்ட முடிஞ்சாலும் பயந்து சாப்பிடுதுகளில்லை.

சொன்னால் நம்ப மாட்டியள், நான் வந்த புதிசிலை குசினிக்கை போய் "உந்தத் தேங்காயைத் தாவன் மேனை திருவித் தாறன்!" எண்டு மருமேளைக் கேட்டன். "தேங்காயோ, அதெதுக்கு?" எண்டு பொடிச்சி பேந்தப் பேந்த முழிக்குது.

"என்ன பிள்ளை கறி வைக்கத் தேங்காய் வேண்டாமோ?" எண்டு கேட்டன். மருமோள் பெரிய பகிடியைக் கேட்ட மாதிரி விழுந்து விழுந்து சிரிச்சா.

"மாமி, இஞ்சை ஆருமே தேங்காய்ப் பாலிலை கறி வைக்கிறேல்லை. தேங்காய் என்னவோ ஒரு டொலர் தான். ஆனால் அதைச் சாப்பிட்டால் கொலஸ்ரோல் எங்கை இடமெண்டு வந்திடும்," மருமேளின்ரை கதையைக் கேக்க எனக்கு ஒரே அதிசயமாக் கிடந்தது. "அப்ப என்னெண்டடி பிள்ளை குழம்பு வரும்?" எண்டு கேட்டன்.

"எல்லாம் தண்ணியை ஊத்தினால் குளம்பு வரும்" எண்டு பொடிச்சி சொன்னதைக் கேட்டு நான் ஏங்கிப்போனன். வெள்ளைக் கறி எண்டால் சொட்டுப் பசுப்பால் விடுவம். எண்ட மருமேள் தொடர, என்ரை நினைவு அல்வாய்க்குப் போட்டுது.

என்ரை மூத்தவனிட்டை எப்பவும் ரெண்டு பால் மாடெண்டாலும் நிக்கும் தேங்காய் உச்ச விலை விக்கேக்கை கையிலை காசில்லாட்டில், ஒரு தேங்காய்ச் சில்லை அரைச்சுக் கறி வைச்சாலும் வைப்பமே ஒழிய, உந்தப் பச்சைத் தண்ணியிலை அல்லது பாலிலை குழம்பு வைக்கிற விளையாட்டொண்டும் எங்களுக்குத் தெரிஞ்சிருக்கேல்லை. அங்கை கோழி விக்கிற விலையிலை அடிக்கடி இறைச்சி காய்ச்ச காசுக்கு எங்கை போறது? ரெண்டு மூண்டு மாசத்துக்கொருக் கால் இறைச்சியைக் காய்ச்சினால் பொடியள் அண்டைக்கு சோத்தை ஒரு பிடி பிடிக்குங்கள். நான் கொஞ்சம் குழம்பை மட்டும் விட்டு சமாளிப்பன். எல்லாரும் சரி வரச் சாப்பிட எங்கை போறது?

இஞ்சை கனடாவிலை என்னெண்டால் கோழி மரக்கறியை விட மலிவு. ஆனால் அந்தக் கோழி இருக்கே, அது உயிரோடை இருக்கிற காலத்தை விட செத்துக் குளிர்பெட்டிக்கை இருக்கிறகாலம் கூட. அதை நினைச்சாலே எனக்கு இறைச்சி, மீன் எல்லாம் வெறுத்துப் போச்சு. சாப்பாட்டு விசயம் தான் ஒரு பக்கம் கிடக்கட்டும். இந்தக் குளிருக்கை வெளியிலை போறதெண்டால் குறைஞ்சது பத்துப் பன்னிரெண்டு உடுப்பாவது அடுக்கோணும். அந்தப் பயத்திலை நான் ஓரிடமும் வெளிக்கிடுறதில்லை.

இஞ்சை வீட்டுக்கை என்ன வேலியாலை எட்டி ஆரோடையும் கதைக்க முடியுமே? கதவை அடைச்சுக் கொண்டு உள்ளுக்கை இருந்தமெண்டால் 'ஏன் நாயெண்டு?' கேக்க ஒருத்தர் வரமாட்டினம். எல்லாம் ஏதோ ரெண்டு வேலை, மூண்டு வேலை எண்டு பறந்து திரியுங்கள். ஒரு நாளிலை இருவத்திநாலு மணித்தியாலம். என்னெண்டு மூண்டு வேலை செய்து கொண்டு எப்பிடி நித்திரை கொள்ளுதுகள் எண்டு அந்த அம்மாளாச்சிக்குத்தான் வெளிச்சம்.

ஊரிலை எங்கடை பெரிய வேப்பமரத்துக்குக் கீழை இவர்- என்ரை மனுசனைத் தான் சொல்லுறன். சாய்மனைக் கதிரையிலை படுத்திருக்க, பக்கத்திலை அந்தப் பரவிவிட்ட வல்லிபுரக் கோவில் வெள்ளை மணலிலை நான் இருந்து கதைச்சுக் கொண்டிருப்பம். சிலு சிலுவெண்டு அடிக்கிற வேப்பமரத்துக்காத்திலை உடம்புநோ, தலையிடி எல்லாம் பறந்திடும். பின்னேரத்திலை முன் வீட்டு ராசா, பின்வளவு பாக்கியம், என்ரை மச்சாள் கனகம்மா எண்டு எல்லாரும் வந்து அதிலை போட்டிருக்கிற வாங்கிலை வந்திருந்து ஊர்க்கதை, உலகக் கதை, அரசியல் எண்டு கதைக்கத் தொடங்கினால், 'அட்டா இந்த நேரம் ஏன் இப்பபடிப்பறக்குது?' எண்டு அங்கலாய்ப்பாகக் கிடக்கும். குடிக்கிறதென்னவோ பனங்கட்டியும் தேத்தண்ணியும் தான். சாப்பிடுவது கூப்பன்கடை அரிசியும் முருங்கை இலை, முசுட்டைக் குழம்பும்தான். ஆனால் எங்கடை மனுசரோடை சேர்ந்து வாழேக்கை, ஏன் இடம்பெயரேக்கை கூட ஒரு நிம்மதி இருக்குப் பாருங்கோ.

இஞ்சை கனடாவிலையும் எங்கடை சொந்தம் பந்தம் எண்டு எக்கச்சக்கமா இருக்கினம். நீங்கள் சொன்னால் நம்ப மாட்டியள். ஒரு மைல் சுற்றாடலிலை இருக்கிற சிலதுகளைக் கண்டே ஒருவரியத்துக்கு மேலை இருக்கும். அப்பிடிச் சனத்தைக் காணவேணுமெண்டால் ஒரு கலியாண வீடு,கோயில் திருவிழா வரவேணும். மற்றும்படி எல்லாரும் யந்திர வாழ்க்கைதான்.

இந்த மனுசமனம் இருக்கே அது எப்பவும் திருப்திப்படாது. தூரத்துப் பச்சை தான் கண்ணுக்கு குளிர்ச்சியாக்கிடக்கு. என்ன செய்யிறது? உங்களையும் மினக்கடுத்திப் போட்டன். ஏதோ மனதுக்கை கிடந்ததைக் கொட்டினது. அதுவும் உங்களட்டைச் சொன்னது-என்ரை இனஞ்சனத்தைக் கண்ட சந்தோசம். இண்டைக்கு எனக்குப் போதும். பிறகு சந்திப்பம் மேனை.

**அல்வையூர் காந்தி அருணாசலம்-கனடா**

---

# மறைந்துவிடாத காயங்கள்

நேற்று இரவு முழுவதும் பெய்த மழையின் பிரதிபலிப்பு வீதியில் நன்றாகவே தெரிந்தது. இந்திரா பசளைப் பையொன்றில் கீரைகளைக் கட்டி தலையில் தூக்கி வைத்துக் கொண்டு, சந்தையை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். வீதியில் ஆங்காங்கே பள்ளங்களில் தேங்கி நின்ற தண்ணீரைக் கண்டதும் அவளுக்கு தான் வாழ்க்கையில் அனுபவித்த வேதனை தான் நினைவுக்கு வந்தது. பள்ளத்தை மறைத்து நிற்கும் தண்ணீரைப் போல அவளும் தன் குடும்பத்திலுள்ள ஓட்டைகளை மற்றவர்களின் காதுக்கு எட்டாமல் இவ்வளவு காலமும் பார்த்து வந்தாள். ஆனாலும் தண்ணீர் வற்றும் போது ஒருநாள் அந்தப்பள்ளம் மீண்டும் தெரிந்துவிடும் என்பதுபோல அன்று நடந்த சம்பவம் போலிக் கௌரவத்தை அம்பலமாக்கிவிட்டது. அவள் குடும்பத்தைப் பற்றி மற்றவர்கள் முகத்திலேயே கேவலமாகப் பேசுமளவிற்கு ஆகி



விட்டது. அதை நினைத்து இந்திராவின் நெஞ்சம் ஒவ்வொரு நொடியும் அழுது கொண்டிருந்தது.

"இங்க பாருங்க... நீங்க குடிக்கிறத விடாட்டியும் பரவாயில்லை... சாராயம் வியாபாரம் பண்ணுறதயாவது விட்டிடுங்க. கொஞ்ச நேரத்துக்கு முன்னால பொன்னன் குடிச்சிப்போட்டு பொஞ்சாதியின்ர கையக் கத்தியால கிழிச்சிட்டான். நீங்க தான் 'காசு பிறகுதா... இப்ப இதக் கொண்டு போ' எண்டு சொல்லி சாராயம் குடுத்ததாமெண்டு உங்களையும் நம்ம குடும்பத்தையும் அவள் மண்ணள்ளித்திட்டுறாள்... ரோட்டுல எவ்வளவு சனம் புதினம் பார்த்ததெண்டு தெரியுமா?" இந்திரா சாப்பிட்டு முடித்த கணவனிடம் சொல்லியபடி, சேலைத் தலைப்பால் வாயைப்பொத்திக் கொண்டு அழுதாள்.

"அடியே.. நிம்மதியாய்ச் சோறு சாப்பிட விடமாட்டியா?... நான் உழைக்கிறன் உனக்கென்னடி மத்தவங்களப் பத்தி அக்கற... உன்ர கொப்பன் சீதனம் தந்தவனா, வீட்டுல இருந்து சாப்பிடுறதுக்கு?" சொல்லிக் கொண்டு எழும்பிய அவனால் பூமியில் நிலையாக நிற்கக்கூட முடியவில்லை. நிறை போதையிலிருந்தவன், தண்ணீரைக் குடித்து விட்டு செம்பைத் தூக்கி எறிந்தான். அது சுவரில் பட்டு ஒலியெழுப்பி ஓய்ந்தது. அந்தச் சத்தத்தில் கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த எட்டு மாதக் குழந்தை பீறிட்டு அழத் தொடங்கியது.

"காசு உழைக்கிறதுக்கு வேற தொழில் இல்லையா?... நான் மரக்கறியாச்சும் விற்றுக் காசு உழைக்கிறனே. அப்படியாச்சும் செய்யுங்கன்னா கேக்கமாட்டீங்க... நாலு பேர்ர வயித்துல மண்ணள்ளிப் போடுற வேலைய விட்டிடுங்க!" அழுத குழந்தையை தோளில் போட்டு, முதுகில் தட்டியபடி அவனருகில் போய் நின்று இம்முறை நிதானமாகவே சொன்னாள்.

"ஏன்டி எனக்கா புத்தி சொல்லுறா?... உனக்கு எவ்வளவு தைரியமடி.. என்னையே எதிர்த்துப் பேசிறளவுக்கு வந்திட்ட என்ன?" என்றபடி திடீரென்று அவள் தலைமுடியைப் பிடித்து உலுப்பியபடி, தலையை சுவரில் அடித்தான். அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. மனதிலுள்ள வலியைவிட தலையில் பட்டவலி அவளுக்குப் பெரிதாகப் படவில்லை. அவளுடன் சேர்த்து தோளில் சாய்ந்திருந்த குழந்தை மீண்டும் பலமாக அழுதது.

அன்று வீட்டையே இரண்டாக்கிவிட்டுப் போனவன் நான்கு நாட்களாக இன்னும் வீட்டுக்கு வரவில்லை.

"என்ன இந்திரா இன்றைக்கு கீரை வியாபாரம் போலக் கிடக்குது," ஐஸ்பழம் விற்கின்ற தனபாலம் சைக்கிளை அருகில் விட்டபடி இந்திராவிடம் கேட்டுக் கொண்டு போனான். அப்பொழுதுதான் அவள் மனதை ஓரிரு நாட்களாக உறுத்திக் கொண்டிருக்கும் சிந்தனைகள் யாவும் மீட்சி கண்டன. கீரைப்பையை சற்று உயர்த்தி தலையில் சரிப்படுத்தி வைத்துக் கொண்டாள். சந்தை கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிந்ததும் வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

சந்தை பெரும் பரபரப்பாக இருந்தது. இந்திரா இன்று தனது வியாபாரத்தை வேகமாக முடித்துக் கொண்டாள். கையில் மொத்தமாக இருநூற்றுப்பத்து ரூபா கிடைத்தது. அதில் தன் பிள்ளைக்கு சட்டையொன்றையும் மீதிப் பணத்தில் அரிசி, வாழைப்பழம், சக்கரை என்று கொஞ்சம் சாமான்களையும் வாங்கி எடுத்தாள்.

வீட்டை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தவளை என்றுமில்லாதவாறு, இன்று ஊரிலுள்ளவர்கள் ஒருமாதிரியாகப் பார்த்துக் கொண்டார்கள். சிலர் தங்களுக்குள்ளே அவளைக் கண்டு முணுமுணுத்துவிட்டுப் போனார்கள். இந்திராவால் ஒன்றையும் அறிந்து கொள்ள முடியவில்லை. முன்பிருந்த கவலையில் அவர்களின் செயலும் சேர்ந்து அவளை நடைப்பிணமாக்கிவிட்டது.

பொன்னனின் வீடு வந்ததும் அங்கிருந்து ஒப்பாரிச் சத்தம் கேட்டது. 'ஐயோ பொன்னன் செத்துட்டானோ!?' என்று அவள் மனம் நினைத்தது. அவ்விடத்திலேயே ஒரு கணம் நின்றிருந்தவேளை, ஒரு கை தோளில் தொட்டது. திரும்பிப் பார்த்தாள். அன்னம்மாக் கிழவி நின்றிருந்தாள்.

"அடியே புள்ள... உன்ர புருசன் விக்கிற பாழாய்ப்போன சாராயத்தக் குடிச்சி பொன்னனோட சேர்ந்து மூணுபேர் செத்துட்டானுகள்.. சாராயத்துல நஞ்சு கூடிட்டுதாம். உன்ர புருசனை பொலிஸ் புடிச்சிட்டுப் போகுது. குடி குடியைக் கெடுக்குமெண்டு சும்மாவா சொன்னாங்க... இவனுகள் எப்பதான் திருந்தப் போறானுகளோ?" அவள் சொல்லி முடிக்கவும் இந்திராவின் கையிலிருந்த பொருட்கள் நழுவி மண்ணில் விழவும் நேரம் சரியாக இருந்தது.

**அ.கோகுலதீபன்-கல்முனை**

---

# புதுமைப் பெண்!

கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருக சத்தியத்துக்கு முன் நிறுத்தப்பட்டாள் சத்தியா! "சொல்லுடி, சொல்லுடி அவன் தான் உன்டை வயித்தில வளர்ர குழந்தைக்கு அப்பன் எண்டு. அடிச்சுச் சொல்லுடி, பாரடி அவன்ட கள்ள முழிய திருடன் போல இருக்கிறான்!" என்று சத்தியாவின் தோழிகள் அவளைப் பாடாய்ப்படுத்தினார்கள்.

சத்தியாவுக்கு வார்த்தையே வெளிவர மறுத்தது. பஞ்சாயத்துப் பெரியவர் சத்தியாவிடம் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுத் துளைத்த வண்ணமிருக்க, பார்வையாளர் பட்டாளம் பலரும் பலவாறு பேசியபடி அரட்டையடித்துக் கொண்டிருக்க, அவளது கடந்த கால நிகழ்வுகள் அவளுக்கு ஒன்றன் பின் ஒன்றாக துரித வேகத்தில் வந்து கொண்டிருந்தன.

ஆம் அந்த டீன் ஏஞ் வயதில் அவளுக்கு அப்போது பல்கலைக் கழக அனுமதி கிடைத்திருந்தது. அதே ஊரிலிருந்து சத்தியாவுடன் பல்கலைக் கழக அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தான் சரண். சரண் அவ்வூர் தோட்டத்துப் பெரியவரின் மகன் என்பதை சத்தியா நன்கு அறிவாள். அவள் சரணுடன் படிப்பு விடயத்தில் சகஜமாக பழகி வந்தாள்.

அன்று தமது இறுதியாண்டை முடித்துக் கொண்டு இருவரும் வீடு செல்லும் நாளும் வந்தது. சரண் சத்தியாவைத்தேடி வந்து கொண்டிருந்த வேளை, எதிர்பாராத விதமாக அவளை இடையில் சந்தித்தான். வழக்கம்போல் இருவரும் ஒருவருக்கொருவர் மாறி, மாறி வணக்கம் செலுத்திக் கொண்டதும், சரண் பேச்சை ஆரம்பித்தான்.

"சத்தியா நான் உங்கக்கிட்ட மிச்ச நாளா ஒண்ணு பேசணும் எண்டு இருந்தன். அதுக்கு இண்டைக்குத்தான் சரியான சந்தர்ப்பம். இண்டைய நாள விட்டா இனி எப்பவுமே பேச முடியாது சத்தியா," என்றான் அவன். அதற்கு அவள் "என்ன சரண் சொல்லுங்க?" என்றாள் சகஜமாக. "சத்தியா எனக்கு எதையுமே ஒளிச்சு மறைச்சுப் பேசத் தெரியாது. அதனால நேரடியாவே விசயத்திக்கு வாரன் சத்தியா."

"என்ன சரண் புதிர் எல்லாம் போடுறீங்க?" என்றாள் விகடமாக.

"சத்தியா நாங்க ரெண்டு பேரும் திருமணம் செய்து கொண்டா என்ன?" என்று வினா எழுப்ப, "ஆ..." வெனக் கத்தியே விட்டாள் சத்தியா.

"ஏன் சத்தியா இப்ப ஊரைக் கூட்டுறீங்க? நான் இப்ப என்ன சொல்லிட்டன் அப்படி. இது இயற்கைதானே? ஓர் ஆணும் பெண்ணும் விரும்பினா அதில என்ன தவறு? அதுவும் நாங்க ரெண்டு பேரும் படிச்சிட்டம் தானே?" என்றான் சரண்.

"இல்லை சரண் உங்க கூட என்ன வைச்சுப் பாக்காதீங்க. நான் ஒரு ஏழை



சரண். ஆனா நீங்க...." என அவள் வசனத்தை முடிக்கு முன் "சத்தியா நிறுத்துங்க. இனியும் இப்படி பேசாதீங்க, ஏன் சத்தியா இன்னும் கோழைத்தனமாக வாழ்ந்து கொண்டிருக்கிறீங்க? சீ நீங்க ஒரு படிச்ச பெண்ணா? படிச்சிட்டும் நீங்க இன்னும் பத்தாம் பசளியா வாழ்ந்து கொண்டிருக்கிறீங்க!...... வெட்கமா இல்லையா சத்தியா உங்களுக்கு? புரட்சிப் பெண்ணா, புதுமைப் பெண்ணா வாழப்பழகிக்குங்க சத்தியா." என்றான் அவன்.

அதன்பின் சத்தியா எதுவுமே பேசவில்லை. அமைதியாக இருந்தாள். அவளது மௌனத்தை கலைத்தவனாக சரண் பேசத் தொடங்கினான். "நாளைக் காலையில நாம வீட்ட போறதால இன்னைக்கு சாயங்காலம் நாம பீச் றோட்டில மீட் பண்ணணும். நீங்க கட்டாயம் வரணும். என்ன புரியுதா?" என்றான் பவ்யமாக.

"சரண் நான் ஒரு ஏழை. என்ன கடைசி வர கைவிட மாட்டன் எண்டு சத்தியம் பண்ணிக் குடுங்க சரண்!" என்றாள் அவள். மறு கணமே அவன் சத்தியத்தை சக்கரைப் பொங்கல் போல் பண்ணிக் கொடுத்தான்.

அந்தி சாய்ந்த நேரம் சரணைச் சந்திக்க சத்தியா சென்று கொண்டிருந்தாள். இருள் கட்டியிருந்த வானம் இடி மின்னலுடன் இடைவிடாத மழையைப் பெய்துகொண்டிருந்தது. கையில் குடைகூட இல்லாத நிலையில் அவள் நன்றாக நனைந்திருந்தாள். நனைந்த ஆடையில் அவளுடைய அழகு இயற்கையை விட மேலும் மெருகூட்டியிருந்தது. ஏரிக்கரையோரத்தில் ஓர் ஒதுக்குப்புற வாடியில் ஒதுங்கியிருந்த சரணின் கண்கள் சத்தியாவை வண்டாக மொய்க்கத் தொடங்கின. சரணின் பார்வை பட்டதும் அவள் பெண்மைக்கே உரிய நாணத்தால் வெட்கித் தலை குனிந்தாள். அருகே வந்த சரண் அவளை ஆதரவாக வருடினான். இடங் கொடுக்க மறுத்த சத்தியாவை இறுக அணைத்தான். அவனது வலிய கரத்தில் இருந்து விடுபட முடியாத சத்தியா, தனது பெண்மையை முழுதாக இழந்து விட்டாள் அவனிடம்.

"அமைதி, அமைதி!" என்று பஞ்சாயத்துப் பெரியவர் குரல் எழுப்பவும் சுய நினைவுக்கு வந்த சத்தியா, இரண்டு மாத இடைவெளியின் பின் இன்று தான் தாய்மையடைந்த நிலையில் சத்தியத்துக்கு முன் நிற்பதையும், தகப்பன் நான் இல்லை என்று சத்தியம் செய்தபடி அதே சரண் சத்தியத்துக்கு முன் முழித்தபடி நிற்பதையும் உணர்ந்தாள்.

ஆத்திரம் அடைந்த சத்தியா, ஆவேசத்துடன் பேசத் தொடங்கினாள். "இப்பிடிப்பட்ட அயோக்கியனுக்கு மனைவியாக நான் விரும்பவில்லை. அதோட இவனால உருவான இந்தக் கருவ நான் உருவமா பிரசவிக்கப் போவதில்லை எண்டும் நான் முடிவெடுத்திட்டன். காரணம் இவனைப் போலவே நாளைக்கு இவண்ட சந்ததியும் என்னைப் போல ஒரு அபலைப் பெண்ணை அனியாயமா கெடுத்து அவளும் சத்தியத்துக்கு முன் சாவதைவிட, இப்பவே இந்த கருவ நான் முளையில கிள்ளி..." என முடிக்குமுன் தனது இடுப்பிலே செருகியிருந்த கத்தியால் தானே தன் வயிற்றில் குத்தினாள். பீறிட்டுப் பாய்ந்த இரத்தம் எதிரே நின்ற சரணின் முகத்தில் மின்னல் போல் பாய கூடியிருந்தவர்களே அதிர்ந்து போக, சத்தியத்திற்குமுன் சத்தியா உயிரை மாய்த்தவளாக, புதுமைப்பெண்ணாக நிலத்தில் சாய்ந்தாள்.

**பற்குணன் அம்பிகாபதி-மன்னார்**

# மேனியால் என்னைக் கவசமிடு!



"என்ன அப்படிப் பார்க்கிறாய், குரு?"

"மனதுக்குச் சந்தோஷமாயிருக்கிறது, அதனால் பார்க்கிறேன். ஏன் பார்க்கக்கூடாதா வினீ?"

"பார்க்கலாம் பார்க்கலாம். நீதானே பார்க்க முடியும்... ஆனால், அங்கங்கே துளையிடுவதுபோல அப்படிப் பார்க்காதே. சங்கடமாக இருக்கிறது."

## இலக்கிய நயம்

"உன்னைப் பார்க்குந் தோறும் என்னுள் மகிழ்ச்சி பொங்குகிறதே... என்னைத் தடுக்காதே."

வினயா தலையைக் குனிந்து கொண்டாள். முன்னால் விழுந்த குழல் கற்றையை விரல்களால் ஒதுக்கி விட்டுக் கொண்டே ஓரக் கண்ணால் பார்த்தாள். அவன் கண்கள் எக்ஸ்ரே கதிர்களாய் நீண்டு அவளுள் புகுந்தன. உயிரில் சிறு நடுக்கத்தை உணர்ந்தாள். விழிகளைத் தாழ்த்தி நிலத்தில் விரல்களால் வட்டங்களிட்டாள்.

சற்று நகர்ந்து முன்னேறிய குரு, அவள் விரல்களை மெதுவாகப் பற்றினான். மறுகையால் அவள் மோவாயைப் பற்றி நிமிர்த்தினான்.

"உன் முகதரிசனமே என் மோட்ச விஜயமாய்க் கருதி ஓடோடி வந்த என்னை ஏமாற்றிவிடாதே வினயா..." என்று சிரித்தான்.

"என்ன இது...?" என்று சிணுங்கியவள், ஈர்க்கிலை உருவிவிட்ட ஓலையாக மீண்டும் குனிந்தாள். அவன் அவளது மோவாயை மேலும் அழுத்தி நிமிர்த்தினான்.

"என்ன வெட்கம்?" என்றான்.

அவள் விழியோரங்களில் நீர் துளிர்த்தது. அழுதுவிடுவாள் போல இருந்தாள்.

"என்னடா?"

"ஊஹூம்..." என்று தலையை ஆட்டினாள்.

"ச்சீ... என்ன இது..?" என்று ஆதுரத்துடன் கேட்டபடி விழிகளைத் துடைத்துவிட கையை நீட்டினான். அவள் தலையைப் பின்னுக்கிழுத்து மூக்கை உறிஞ்சினாள். வலது கையால் அவள் பின் கழுத்தைச் சுற்றி அருகே இழுத்தான். அவள் விம்மல் அவனைப் பதற வைத்தது. அப்படியே இழுத்து இறுக அணைத்துக் கொண்டான்.

"என்னடா... ஏன்?" என்று காதுக்குள் கிசுகிசுத்தான். மெல்ல அவனிடமிருந்து விலக முயற்சித்தபடியே,

"ஒன்றுமில்லை!" என்றாள்.

நெஞ்சோடு சேர்த்தணைத்து முதுகைத் தடவினான். தன் முகத்தால் கூந்தலுக்குள் அவள் கழுத்தை உராய்ந்தான். அவளுடல் துவண்டு அவனுடன் ஒன்றியது. மனப் படபடப்பும் சமனப்பட்டது.

"வினீ, உனக்கொன்றும் துக்கமில்லையே?"

"ஊஹூம்" என்று ஒற்றைச் சொல்லுடன் அவனை மேலும் இறுக்கினாள். வெகு காலம் இதற்கெனவே காத்திருந்தது போல அவனை வெகுவாகத் தன்மீது படரவிட்டாள்.

செடிகளில் பூக்களில் உராய்ந்து அசைந்து வந்த தென்றல் மென்மையாகத் தொட்டு அவர்களை இயக்கியது. தென்றலுக்கு ஈடு கொடுத்து இருவரும் மெல்லென அசைந்தார்கள்.

அவன், "நன்றி... நன்றி, வினீ.." என்று உளறினான்.

அவள் எதையோ சொல்ல முயன்றவளாக அவனிடமிருந்து விலக எத்தனித்தாள்.

"வேண்டாம்" என்று அவன் அவள் காதுக்குள் உதடசைத்தான்.

"இந்தக் காற்று என்மீது படுவதைத் தாங்கமுடியாது வினீ, என் நெஞ்சைக் காற்றுக்கு விட்டுவிடாதே... என்னைக் கருக்கிவிடும்... குளிரும் இந்த மலர் மேனியால் என்னைக் கவசமிடு... விலகாதே..." என்று குளறினான்.

அவள் அவனோடு இழைந்தாள். பெருமூச்சு விட்டாள். 'தீம் தரிகிட தீம் த்ரிகிட' என்றொரு லயகதி மனதுக்குள் ஓடியது.

"என்ன?" என்றாள், தான் எதைக் கேட்கிறோம் என்று புரியாமலே.

"ஒரு விஞ்ஞானியின் மகிழ்ச்சி" என்றான்.

"விஞ்ஞானியா, யார்?"

"நான் தான்."

"என்ன கண்டுபிடித்திருக்கிறாய்?"

"புதிது புதிதாய் என்னென்ன வெல்லாமோ கண்டு பிடிக்கிறேன். புதியன அறியுந்தோறும் புதுப்புது உவகையும் எனக்குள்..."

"புதியனவா, என்ன அவை?"

"இதுவரை எனக்குத் தெரிந்த நான் இல்லை இப்போது உன்னருகில் இருந்தால் என்னைக் கூடப் புதிதாகக் கண்டுபிடிக்கிறேன். உனக்குள்ளும் புதிது புதிதாய் இன்பங்களின் ஊற்று.. என்னை வேற்று நினைவின்றித் தேற்றும் உன்னருகாமை..."

"போதும் என்ன இது புலம்பல்?"

"புலம்பலா? புதிதாய் ஒன்றைக் கண்டு பிடித்த விஞ்ஞானியால் சும்மா இருக்க முடியுமா? கூவிக் கொண்டு தெருத்தெருவாய் ஓடமாட்டானா? நானோ ஒன்றல்ல, ஓராயிரம் புதுமைகளை உன்னைத் தழுவுந்தோறும் அறிந்து கொள்கிறேன். சும்மா இருக்க முடியுமா, வினீ?"

"சரி சரி, பேசாமல்தான் இருங்களேன்!"

"எனக்குள் பெருகி வழியும் காதல் என்னைச் சும்மா இருக்க விடாது வினீ, புதுமைகளின் சுரங்கம் நீ. எத்தனை புதுமைகளை உனக்குள் ஒளித்து வைத்திருக்கிறாய்... நீயும் அதையெல்லாம் அறியமாட்டாய். நான் மட்டுமே உன்னிடம் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறேன். நான்தானே பேச வேண்டும்?"

"சரி சரி"

"என்ன சரிசரி? என் காதலன் கண்டுபிடிப்புகளை உலகுக்குத் தெரிவிக்க வேண்டாமா? உன்னைத் தழுவினால் உன்மத்தமாகும் மனது கண்டுபிடிக்கும் உண்மைகளை உலகத்து விஞ்ஞானிகளால் சொல்லிவிட முடியுமா? நான்தானே சொல்ல வேண்டும்?"

### தருவது முழடில்யன்

"ம்... மேடை போட்டு நின்று சொல்லுங்கள்!"

"சொல்லத்தான் போகிறேன். என் வினியிடம் நான் கண்ட அதிசயங்களை எல்லாம் உலகும் அறியட்டும். மாம்பழ மேனியில் மறைந்திருந்த புதுமைகளை நான் வெளிக்கொணர்ந்த விதம் அறியட்டும். உடலியல் விஞ்ஞானிகளுக்கெல்லாம் இந்த உண்மைகள் வியப்பூட்டட்டும்! வா, என் புதுமை ஊற்றே!"

**அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு.**

(குறள்: 1110)

# ஸ்போர்ட்ஸ்

## இலங்கை-இங்கிலாந்து மோதல்கள்

நஸீர் ஹுஸைன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இலங்கைக்கு வந்துள்ளது. இலங்கை அணியுடன் 3 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் இங்கிலாந்து அணி விளையாடவுள்ளது.

1982ல் இலங்கை அணி, தனது கன்னி டெஸ்டை விளையாடியது. இதுவரை இலங்கை-இங்கிலாந்து அணிகள் 6 டெஸ்ட் போட்டிகளில் மோதியுள்ளன. இதில் இங்கிலாந்து 3 தடவைகளும், இலங்கை 2 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. ஒருபோட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மேற்கிந்தியத் தீவுகள், ஸிம்பாப்வே அணிகளுடனான போட்டிகளில் வென்றிருக்கும் இங்கிலாந்து, கடைசியாக பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. அங்கு பலம் வாய்ந்த பாகிஸ்தான் அணியை சொந்த மண்ணிலேயே தோற்கடித்து பலம் வாய்ந்த அணியாகத் திகழ்கின்றது.

இலங்கை அணி, தென்னாபிரிக்காவிடம் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் தோல்விகளைச் சந்தித்திருப்பினும், நியூஸிலாந்துடனான ஒருநாள் போட்டித் தொடரில் வெற்றி பெற்றிருப்பது அவர்களுக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்திருக்கிறது.

அத்துடன் சொந்தமண்ணில் இலங்கை அணியின் கை ஓங்கியே இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்களின் விவரம் வருமாறு:

**டெஸ்ட்:**

முதலாவது டெஸ்ட் பெப்ரவரி 22-26
காலி (சர்வதேச மைதானம்)

இரண்டாவது போட்டி மார்ச் 07-13
கண்டி (அஸ்கிரிய மைதானம்)

மூன்றாவது டெஸ்ட் மார்ச் 15-19
கொழும்பு (எஸ்.எஸ்.ஸி. மைதானம்)

**ஒருநாள் போட்டி:**

முதலாவது போட்டி மார்ச்-23
தம்புள்ள (பகல்)

இரண்டாவது போட்டி மார்ச்-25
கொழும்பு-பிரேமதாச (பகலிரவு)

மூன்றாவது போட்டி மார்ச்-27
கொழும்பு-எஸ்.எஸ்.ஸி. (பகல்)

## சாதனை வீரர் காலமானார்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னால் தொடக்க ஆட்டக்காரரான பங்கஜ் ரோய் கடந்த 4ம் திகதி காலமானார். கல்கத்தாவைச் சேர்ந்த ரோய் இறக்கும் போது அவருக்கு வயது 72.

டெஸ்ட் போட்டிகளில் முதலாவது விக்கெட் இணைப்பாட்ட சாதனையான 413 ஓட்டங்களை வினு மன்கட்டுடன் இணைந்து எடுத்தவர் பங்கஜ் ரோய். இதில் ரோய் 173 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

1955-56 காலப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்த நியூஸிலாந்துக்கு எதிராக சென்னை மைதானத்தில் இச்சாதனை படைக்கப்பட்டது.

1951-52 பருவகாலத்தில் டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஆரம்பித்த ரோய், 1960-61 பருவகாலம் வரை 43 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். 43 டெஸ்களில் 2442 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 5 சதங்கள் அடங்கும். 173 இவர் ஒரு இனிங்ஸில் எடுத்த அதிகபட்ச ஓட்டங்களாகும்.

1959ல் இங்கிலாந்திற்கெதிராக லோட்ஸ் மைதானத்தில் நடந்த ஒரேயொரு டெஸ்டிற்குத் தலைமை தாங்கிய பங்கஜ் ரோய், கல்கத்தா நகரின் ஷெரிஃப் ஆகவும் இருந்துள்ளார்.

## இந்திய வீரர்களுக்கு அறிவுரை

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் ஜெஃப் மார்ஷ், அவுஸ்திரேலிய அணியின் கப்டனாகவும் பயிற்சியாளராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

இந்திய அணிக்கு வெளிநாட்டுப் பயிற்சியாளர் ஒருவரைத் தேடிய போது, இவரது பெயர்தான் முதலில் பரிசீலனைக்கு வந்தது. தன்னால் தனது குடும்பத்தை விட்டு அதிக நாட்கள் பிரிந்து வெளிநாடென்றில் இருக்க முடியாதென மார்ஷ் மறுத்திருந்தார்.

எனினும் அவ்வப்போது இந்தியா வந்து இந்திய கிரிக்கெட் அணியின் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

இதன் படி தனது முதல் கட்ட இந்திய சுற்றுப்பயணத்தை அண்மையில் மேற்கொண்டார் மார்ஷ். இந்தியா சென்று பெங்களூர், மும்பை கிரிக்கெட் அகடமிகளைப் பார்வையிட்டார்.

அதன் பின் மார்ஷ் சில கருத்துக்களை வெளியிட்டார். அதில் இந்தியாவில் உள்ள எல்லா இளம் வீரர்களையும் டெண்டுல்கர் போல் விளையாட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கக் கூடாது எனவும், வீரர்கள் எல்லாரும் தமது சொந்த ஸ்டைலில் விளையாட விட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

பயிற்சியாளர்களும், இளம் வீரர்களும் இதனை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும் என்று மார்ஷ் அறிவுரை கூறியுள்ளார்.

# சிந்தியா பதில்கள்

✉ **சிகரெட் புகைக்கிறவர்கள் அதில் அப்படி என்ன சுகம் காண்கிறார்கள் சிந்தியா?**

ஆர்.அழகராஜ், சின்ன பம்பக்கொல்ல தோட்டம்.

இப்படி ஓர் அறிந்துகொள்ளும் ஆர்வத்தில் ஆரம்பித்தவர்கள்தான் பிறகு விட முடியாமல் புகைத்துக் கொண்டிருக்கிறார்கள். அழகராஜ், எல்லாவற்றையும் அறிந்து கொண்டுவிட வேண்டும் என்று ஆசைப்படாதீர்கள். ஆபத்து என்பதையும் விட, எல்லாவற்றையும் அறிந்துதான் ஆவதென்ன?

✉ **'ஆளவந்தான்' படத்திற்கு இசையமைப்பாளர் யார்?**

முகுந்தன், கொழும்பு-15.

அதைத்தான் இங்கு வந்தே சொல்லிவிட்டுப் போனாரே.... சங்கர் மகாதேவன்.

✉ **ஒஸ்லோவில் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப் போகிறதாமே?**

எஸ்.குமரன், கொழும்பு-06.

'புராணத்துப் பாற்கடலில் சூரியனின் பொற்தோணி வந்ததுபோல, வெண்பனி போர்த்த உலகில் பகல் விடியும்' என்று ஒஸ்லோவில் இருந்த கவிஞர் ஜெயபாலன் எழுதினார். மக்களுக்காக இரு தரப்பும் மனது வைத்து, நமக்கும் அங்கே 'விடியும்' என்றால்... ஏதோ நம்மால் முடிந்தது, அந்தத் திக்கு நோக்கித் தொழுதுவைக்கலாம்!

✉ **சிந்தியா! சக்தி எப்.எம். வானொலி சேவையில் நீங்கள் விரும்பிக் கேட்கும் நிகழ்ச்சி?**

என்.எம்.நிஸாம், காத்தான்குடி-02.

இதயராகம்.

✉ **"ஆயுதக் குழுக்களோடு சகவாசமே நமக்குக் கிடையாது" என்று இங்கே அடித்துப் பேசினார் சங்கரியார். பிறகு, "புலிகளின் ஆயுதப் போராட்டத்தை மதிக்கிறோம்" என்று சொன்னார். இப்போது ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் உட்பட்ட கூட்டணியோடு கைகோர்த்து நிற்கிறார். உண்மையில் சங்கரியாரினதும் த.வி.கூட்டணியினதும் நிலைப்பாடு என்ன?**

ரி.விமலேந்திரன், யாழ்ப்பாணம்.

யுத்தக் கொடுமைகள்,பொருட்கள் விலையுயர்வு, வாழ்க்கையைத் தள்ள முடியாமல் படும் அவலம் என்று இன்னல்களுக்குள்ளேயே இருக்கும் மக்களுக்கு அவ்வப்போதாவது சிரிப்புமூட்ட சங்கரியார் போல் ஓரிருவர்தான் இருக்கிறார்கள். சீரியஸாக கேள்விகள் கேட்டு அதைக் கெடுத்துக் கொள்வானேன்?

✉ **'தெனாலி' திரைப்படத்தில் உங்களுக்குப் பிடித்த பாடல்?**

சி.துஷ்யந்தன், மண்டூர்.

சமீபத்தில் வந்தவற்றுள் என்னை மிகவும் கவர்ந்த பாடலும் அதுதான். 'ஸ்வாசமே...'. எஸ்.பி.பி. நம்ம ஆள் அவரை விடுங்கள். சாதனா சர்கம் என்ற அந்த மும்பைக் குயில்! குரலில் எத்தனை ஜாலம் நிகழ்த்துகிறது!

✉ **அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்களா, எதற்கும் அடங்காத துணிச்சல்காரர்களா... யார் அதிகம் ஆபத்தானவர்கள்?**

சி.மனோன்மணி, கண்டி.

அதிகாரமுள்ள கோழைதான் மிகமிக ஆபத்தானவன். அவன் ஒவ்வொரு அசைவிலும் எதிரியைக் காண்பான். சின்னதாக கருத்து வேறுபடுபவர்களையும் அழித்து விடுவதுதான் தனது வாழ்வுக்குப் பாதுகாப்பானது என்று எண்ணுவான்.



✉ **நீங்கள் பார்த்த மிகவும் சோகமான படம் எது?**

யா.ரோஷான், ஒந்தாச்சிமடம்.

'பாளையத்து அம்மன்'. இடைவேளைக்கு முன்பே எழுந்து வரவேண்டியதாகி விட்டது. சோகம்-கொடுத்த காசு அநியாயமாய்ப் போனதையிட்டு!

✉ **நியூஸிலாந்தில் எப்படி நம்மவர்கள்?**

கே.குரு கணேசன், ஹட்டன்.

தென்னாபிரிக்காவிலிருந்து வந்த பூனைகள், நியூஸிலாந்துக்குள் நுழைந்ததும், ஆனைகளான அதிசயம் பார்த்தேன். நியூஸிலாந்துப் பூனைகள் ஆனைகளாக கென்யாவுக்கோ பங்களாதேஷுக்கோ போக வேண்டுமாக்கும்!

இன்னொன்று சொல்ல வேண்டும். விளையாட்டின் விதிகளைப் போலவே, அம்பயர்களுக்கும் எல்லோரும் ஒரே விதமாகவே சைகைகள் செய்யவேண்டும் என்று விதிகள் அமைக்க முடியாதா? ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக ஆடுகிற கூத்துத் தாங்கமுடியவில்லை சாமி!

✉ **சிந்தியா! நீங்கள் சொல்லுங்கள். பெண்களிடம் அறிவு மிக மிகக் குறைவாக இருந்தாலும், அழகில் மிக்கவர்களாக இருப்பதால் தானே நாம் அவர்களைக் காதலிக்கிறோம்?**

யோ.பிரசாந்தன், தெகிவளை.

இருக்கும். அறிவுமிக்கவர்களாக இருந்தால் அவர்கள் எப்படி உங்களைக் காதலிக்க முடியும்?

✉ **கவலையை மறக்கத்தானா மது அருந்துகிறார்கள்?**

இ.ஆனந்தன், கண்டி.

ஆமாம். கவலையை மறக்க மது அருந்தியவர்கள் தான் பிறகு மதுவை மறக்க முடியாமல் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

✉ **உழைப்பு, அதிர்ஷ்டம் இதில் எது வேண்டும்?**

க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று-07.

உழைப்பும், விடாமுயற்சியும் தான் அதிர்ஷ்டத்தை நம்மிடம் கொண்டு வரும்.

இங்கிலாந்துப் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சில் ஒருமுறை ஒரு நிருபருக்குப் பேட்டியளிக்க சம்மதம் தெரிவித்தார்.

நிருபர் வந்தவுடன், "நண்பரே, நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. உங்களைப் போலவே என்னைப் பேட்டி காண விரும்பிய ஏழெட்டுப் பத்திரிகை நிருபர்களை நான் திருப்பியனுப்பிவிட்டேன். உங்களுக்கு மட்டும் தான் சம்மதம் தந்திருக்கிறேன்..." என்றார்.

கொஞ்சமும் ஆச்சரியப்படாத நிருபர், "தெரியும் பிரதமர் அவர்களே, நான்தான் அந்த ஏழெட்டுப் பேரும்" என்றார். ■

# மன்னாதி மன்னன்

44

இராஜகுமாரன்

## "பெண்ணே பூவைத் தா....!"

பேசா மடந்தையான வீமாபுரி இளவரசிக்கும் விக்கிரமாதித்த மன்னனுக்கும் இடையில் தொங்கவிடப்பட்டிருந்த திரைச்சீலை அதன் பழைய கதையைக்கூற தொடங்கியது.

மந்தாகினிபுரம் என்ற நாட்டை மன்மத வசீகரன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய மந்திரியின் பெயர் மங்களகரன். அரசனுக்கு மதனமோகன் என்றொரு மகனிருந்தான். அமைச்சனான மங்களகரனுக்கு தந்திரலோகன் என்றொரு மகன் இருந்தான். அரசருடைய மகனும் அமைச்சருடைய மகனும் ஒரே வயதினராக இருந்தமையினால், ஒன்றாகப் பாடம் படித்து ஒன்றாகவே நண்பர்களாக வளர்ந்து வந்தார்கள்.

இரு இளைஞர்களும் ஒருநாள் காட்டுக்கு வேட்டையாட தங்களுடைய குதிரைகளிலேறி புறப்பட்டனர். உதவிக்கு வேறு எவரையும் அழைத்துக் கொண்டு போகாமல் மதனமோகனும் தந்திரலோகனும் தனியாகவே புறப்பட்டுச் சென்றனர்.

அன்றுநாள் முழுவதும் வேட்டையாடி களைத்துப் போனார்கள். கானகத்தின் நடுவில் இருந்த ஒரு குளத்தடியில், தாங்கள் உணவுக்காக சேகரித்த பழங்களை அருந்தி விட்டு, குளத்திலிருந்து நீரெடுத்து குடித்தனர்.

மன்னர் மகன் மதனமோகன் நன்றாகக் களைத்துப் போயிருந்தமையினால், ஒரு மரத்தடியில் படுத்துறங்கினான். அமைச்சரின் மகன் தந்திரலோகன் உறங்காமல் காவலுக்காக நின்றிருந்தான். சற்றுத் தொலைவில் ஓர் ஆலயம் இருப்பதைத் தந்திரலோகன் கண்டான். 'அங்கு சென்று பார்த்து வரலாம்'



என நினைத்து கோமிலடிக்குச் சென்றான்.

ஆலயத்தை வலம்வரும் போது அதன் வடக்கு வீதியில் அழகான ஒரு பெண் நிற்பதைக் கண்டான்.

'இந்தக் காட்டில் உள்ள கோயிலில், தன்னந் தனியாக அழகிய பெண்ணொருத்தி நிற்கிறாளே' என்று வியப்படைந்தான். அப்பெண்ணருகில் சென்று உற்றுப் பார்த்ததில், அது ஓர் அழகான கற்சிலை என்பதைக் கண்டறிந்தான். அப்பெண்ணின் கையில் ஒரு பூச்செண்டுமிருந்தது. சில நேரம் வரை அச்சிலையையே பார்த்த வண்ணமிருந்தான்.

இவ்வாறு நின்று கொண்டிருக்கையில், அரசகுமாரன் தூங்கி எழுந்து தன்னைத் தேடுவாரே என்றெண்ணியவனாக மதனமோகன் படுத்திருந்த இடத்தை வந்து சேர்ந்தான். அமைச்சர் மகன் அங்கு வந்து சேர்வதற்கும் அரசகுமாரன் எழுந்திருப்பதற்கும் சரியாக இருந்தது.

எழுந்திருந்த மதனமோகன் சுற்று முற்றும் பார்த்தபோது, அங்கொரு கோயில் இருப்பதைக் கண்டான். "அங்கு போய் வரலாம்!" என்று தந்திரலோகனை அழைத்தான்.

"நான் அங்குபோய் பார்த்து விட்டு வந்து விட்டேன். நீ வேண்டுமானால் போய் பார்த்துவிட்டு வா. ஆனால் வடக்குப் பக்கம் போகாதே," என்று எச்சரித்து அரசகுமாரனை அனுப்பி வைத்தான்.

அரசன் மகன் மதனமோகன் அந்த ஆலயத்துக்குச் சென்று பார்த்தான். வட பகுதிக்குச் செல்ல வேண்டாமென்று நண்பன் தந்திரலோகன் சொல்லியனுப்பியமையினால், அப் பக்கம் போகாமல் இருப்பதற்கே மதனமோகன் ஆரம்பத்தில் கருதினான். இருப்பினும், 'அவ்வாறு நான் போய்ப் பார்க்க முடியாத அதிசயம் அங்கே என்ன இருக்கிறது, என்று போய் பார்க்கத்தான் வேண்டும்' என்று அவன் மனம் தூண்டியது.

வட பக்கம் சென்றான். வடபக்கத்தின் சுவரில் அழகிய பெண்ணொருத்தி கையில் பூச்செண்டுடன் நிற்பதைக் கண்டு, அதிசயித்தான். அந்தப் பெண் உண்மையில் உயிருள்ள ஒருத்தியாகவே இருக்க வேண்டுமென்று நம்பினான்.

அந்த அழகில் அவன் தன்னை பறிகொடுத்தான். "பெண்ணே? பூவைத் தா!.... பெண்ணே பூவைத் தா!" என்று தனது கையை நீட்டியவாறு, தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தான்.

'ஆலயத்துள் சென்ற தன் நண்பன், இத்தனை நாழிகையாகியும் திரும்பி வரவில்லையே, என்று கலக்கமடைந்த தந்திரலோகன் எழுந்து ஆலயத்தை நோக்கிச் சென்று பார்த்தான்.

அந்த அழகிய சிலையைக் கண்டால் நிச்சயமாக தனது நண்பன் அந்த அழகில் மதிமயங்கி- மெய்மறந்து விடுவான் என்று, தான் கருதியது உண்மையாகிப் போய்விட்டதைக் கண்டான்.

தந்திரலோகன் மதனமோகனின் கையைப் பிடித்து "இளவரசே! நேரமாகிறது. வாருங்கள் போகலாம்!" என்று பலமுறை அழைத்தும், அரசகுமாரன் அசையவேயில்லை. சிலையையே பார்த்த வண்ணம். "பெண்ணே பூவைத் தா... பெண்ணே பூவைத்தா!" என்று பித்துப் பிடித்தவன் போல் புலம்பிய வண்ணம் இருந்தான்.

மன்னன் மகனை ஆலயத்தில் விட்டு விட்டுச் செல்லவும் தந்திரலோகனின் மனம் ஒப்பவில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல், கலங்கிப் போயிருக்கும் சமயம் அந்த ஆலயத்தின் பூசகராகவுள்ள குருக்கள் அங்கு வந்து சேர்ந்தார். அவரிடம் தந்திரலோகன் தன் நண்பனுடைய நிலையை எடுத்து விளக்கினான்.

பூசகரிடம் அந்தச் சிலையைச் செய்த சிற்பி யார், அவர் எங்கிருக்கிறார். என்று விசாரித்தான். பூசகர் அங்கிருந்து பத்து மைல் தொலைவிலிருந்த ஓர் ஊரில், கோதண்டராமன் என்றொரு சிற்பி இருக்கிறார். அவர் தான் இந்த சிற்பத்தைச் செய்தார் என்று அந்த ஊருக்குச் செல்லும் வழியையும் தெரிவித்தார். தான் சிற்பக்கலைஞரைக் கண்டு விவரமறிந்து கொண்டு வரும்வரை தன் நண்பனை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு தந்திரலோகன் தன்னுடைய குதிரையிலேறி சிற்பக்கலைஞன் வசிக்கும் ஊருக்கு கிளம்பிச் சென்றான்.

கோமில் பூசகர் கூறியபடி அந்த சிற்பக் கலைஞரை தந்திரலோகன் அந்த ஊரில் கண்டான். "சிற்பியாரே! அந்த ஆலயத்தில் வடவீதிச் சுவரில் தங்களால் வடிக்கப் பட்டிருக்கும் அழகிய மங்கையின் சிலையைப் பார்த்தேன். மிகவும் அழகான சிலை அது. அந்தச் சிலையை வடிப்பதற்கு நீங்கள் ஓர் அழகான பெண்ணைப் பார்த்துத்தான் செதுக்கியிருக்க வேண்டும். எனது நண்பன் அந்தச் சிலையை உண்மையான பெண்ணென்று நம்பி அவள் கையிலிருக்கும் பூவைத் தரும்படி கேட்ட வண்ணம், தன்னை மறந்த நிலையில் நிற்கிறான். அந்த தோற்றத்திற்குரிய பெண்ணழகி எங்கேயிருக்கிறாளென்பதைத் தயவு செய்து சொல்லுங்கள்" என்று மிகவும் வினயமாகக் கேட்டான்.

தந்திரலோகனின் கோரிக்கையைக் கேட்ட சிற்பக் கலைஞர், பெருமகிழ்ச்சியடைந்தார். தான் செதுக்கிய கற்சிலை உயிருள்ள ஒரு பெண்ணுருவாக இருப்பதாகக் கருதி ஓரிளைஞன் தன்னையே மறந்த நிலையில் இருக்கிறான் என்பதைக் கேட்டறிந்ததே அவருடைய பெருமகிழ்ச்சிக்குக் காரணமாகும்.

"நான் அந்தச் சிலையை வடிப்பதற்கு வேறு எந்தப் பெண்ணையும் பார்த்து உருவாக்கவில்லை. ஆனால் அந்தச் சிலையைப் போன்ற பெண்ணொருத்தி எங்கோ இருக்கத்தான் வேண்டும்," என்று கூறினார்.

"இவ்வாறு நீங்கள் உறுதியாகக் கூறுகிறீர்களே அதற்கான காரணம் என்ன என்று அறியலாமோ?" என்று தந்திரலோகன் வினவினான்.

"அந்தச் சிலையை செய்வதற்கு முன்னர், அச்சிலை எவ்வாறு அமையவேண்டும் என்பதை நான் மனதில் பலமாகக் கற்பனை செய்து கொண்டிருந்தேன். ஒருநாள் மாலை வேளையில் என் வீட்டுக்கு பெருமாள் என்ற பெயருடைய குயவன் ஒருவன் வந்தான். அவனிடம் இரத்தினம் போல் ஒளிவீசும் ஒரு பெண்ணின் விரல் நகம் இருப்பதைக் கண்டு அதனை வாங்கிப் பரிசீலித்தேன். அதனை எனக்குத் தரும்படி கேட்டேன். அவனும் தந்துவிட்டான். அந்த நகத்தைப் பார்க்கும் போதெல்லாம், எப்படியும் சாமுத்திரிகா இலட்சணங்கள் அத்தனையும் ஒருங்கேயமைந்த ஒரு பெண்ணினுடைய நகமாகத்தான் அது இருக்குமென்று முடிவு கட்டினேன்.

நான் பயின்ற சிற்பக் கலையின்படி அந்த நகத்துக்குரியவள் எத்தகைய அழகியாக இருப்பாள் என்று கற்பனையில் கண்டு கொண்டேன். அதனை வைத்தே அப்பெண்ணின் உருவை சிலையாக வடித்தேன்!" என்று சிற்பக்கலைஞர் விளக்கமளித்தார்.

இதனைக் கேட்டறிந்த தந்திரலோகன் அந்தக் குயவன் எங்கிருக்கிறான் என்று கேட்டறிந்து, அந்தக் குயவனிருக்கும் இடம் தேடிச் சென்றான்.

சிற்பக்கலைஞன் கூறிய நகத்தின் கதையை குயவனிடம் தந்திரலோகன் சொன்னான். அந்தச் சிற்பக் கலைஞர் கோதண்டராமனிடம் நீங்கள் கொடுத்த அந்த நகம் உங்களிடம் எவ்வாறு வந்து சேர்ந்தது?" என்று வினவினான்.

குயவன், "மட்பாண்டங்களைச் செய்வதற்காக நான் ஒருநாள் மண்ணைப் பிசைந்து கொண்டிருக்கும் போது, பக்கத்திலுள்ள காட்டில் வசிக்கும் எனக்குத் தெரிந்த வேடனான கார்க்கோடகன் என்பவன் அந்த நகத்தைத் தந்தான்" என்று குயவன் கூறியதும், அந்த வேடனான கார்க்கோடகன் இருக்குமிடத்தை அறிந்து கொண்டு அவனைத் தேடி தந்திரலோகன் புறப்பட்டான்.

*(மன்னன் வருவான்...)*

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் அடுத்தடுத்த இதழ்களில்.

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:.................... ஒப்பம்:..................



### நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி*

டொலர் பெறுமதியை மிதக்க விட்டது ஏன் என்ற பத்திரிகையாளரின் கேள்விக்குப் பதிலளித்த மத்திய வங்கித் தலைவர், காகிதத்தில் கப்பல் செய்து மழை நீரில் மிதக்கவிட்டுப் பார்த்த சின்ன வயது அனுபவம் தனக்கு இருப்பதாலும், மிதக்கும் பொருளுக்கு அடர்த்தி குறைவெனத் தான் பாடசாலையில் படித்துள்ளதாலும், டொலரின் பெறுமதி நிச்சயம் குறைந்து விடும் என்ற நம்பிக்கை தனக்குள்ளதாகத் தெரிவித்தார். அத்தோடு டொலரை மிதக்க விட்டால் அது நாளடைவில் இற்றுப்போய்விட, பாங்க் பெட்டிக்குள் புத்தம் புது நோட்டாக இருக்கும் ரூபாய்க்கு மதிப்பு அதிகரித்து விடுமென்ற தனது இரகசியத் திட்டத்தையும் அவர் பகிரங்கமாக வெளிப்படுத்தினார்.

கம்பியூட்டரால் திருமணப் பொருத்தம் பார்க்கும் சோதிட சொப்ட் வெயாரில் கம்யூட்டர் வைரஸ் ஒன்று தொற்றிக் கொண்டதால், சூரியன் இருக்கும் இடத்தில் சந்திரன் புகுந்து விட்டதாகவும், சனி உச்சத்துக்குப் போய் புதனைத் தின்றுவிட்டதாகவும். ராகுவும் கேதுவும் வின்டோஸ் வழியாகத் தப்பி ஓடிவிட்டதாகவும், குரு இடம் பெயராது கொன்ரோல் பன லைப் பற்றிப் பிடித்துக்கொண்டு நிற்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால் இதற்கான அன்ரி வைரஸ் ஸ்கேனர்ஸ் கண்டுபிடிக்கப்பட்டு சீர் செய்யும் வரை அண்மை யில் கொம்பியூட்டர் மூலம் பார்க்கப்பட்ட பொருத்தங்கள் யாவற்றையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் படியும் திருமணம் செய்துகொண்டோர் டைவேர்ஸ் பண்ணிக் கொள்ளும்படியும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மின்சார விலையேற்றத்துக்கான காரணத்தை விளக்கிய மின்சக்தி அமைச்சர் டொலர் விலை அதிகரிப்பையடுத்து சூரியன் கடல் நீரை ஆவியாக்குவதற்கு தற் போது அதிக கட்டணம் அறவிடுவதாகவும், அதனால் கூடுதல் விலைகொடுத்து மழை யைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகவும், அத்தோடு ஆறுகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட விழைந்துள்ளதாலும் நீர்வீழ்ச்சிகள் மின்சார இயந்திரங்களை இயக்க சம்பள உயர்வு கோருவதாலும்; வேறு வழியின்றி மின்சாரக் கட்டணங்களை உயர்த்த நேர்ந்துள்ளதாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வியாபாரிகளிடமிருந்து வரி, கப்பம், திறை, திட்டி வாங்குவதைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகளைக் கண்டித்து சட்டம் சொல்லும் இயக்கம் (அதாவது டெல்-லோ இயக்கம்) விடுத்துள்ள அறிக்கையில் தாங்கள் வியாபாரிகளிடம் கொண்டுள்ள மிகுந்த பாசத்தால் அவர்களுக்கு புரிந்துணர்வு பொங்கி வழிந்து நிதியுதவி செய்வதை, வரி வாங்குவதாகவும் கப்பம் வாங்குவதாகவும் சில விஷமிகள் பொய்த் தகவல் கூறி இத் தடைகளை விதிக்கிறார்களெனவும், தாம் வியாபாரத்தைப் பெருக்கும் ஓர் ஊக்குவிப்பு நடவடிக்கையாக அவர்களுக்கு ஆயுதங்களைக் காட்டுவதைக் கொச்சைப்படுத்தி மிரட்டலெனச் சித்திரிக்கிறார்களெனவும், அதனால் அரசாங்கம் தம்மிடமிருந்து ஆயுதங்களைக் களைந்தது. அவசரகாலச் சட்டத்தை மீறும் ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கையெனவும் தெரிவித்துள்ளனர். கொழும்பிலும் இவ்வாறு துப்பாக்கியொன்றால் அளவுக்கதிகமாக ஊக்குவிக்கப்பட்ட கடை முதலாளியொருவர் கடையை மூடிவிட்டு ஊருக்குப் புறப்பட்டு விட்டதாகத் தகவல்.

### காதில பூ கந்தசாமி எழுதிய ஒரு குட்டிக்கதை இது:

பாழான யாழ்ப்பாணத்தில் மஸ்கன்ஸ், மஸ்கன்ஸ் என்றொரு கொம்பனி இருந்த தாம். அந்தக் கொம்பனி அஸ்பெஸ்றர், அஸ்பெஸ்றர் என்றொரு ஷீட்டை யாழ்ப்பாணத்திலேயே உற்பத்தி செய்து வந்ததாம். அதற்கு கொழும்பிலும் ஒரு கிளையிருந்ததால், அதை அது கொழும்புக்கும் அனுப்பி வந்ததாம். இதைக்கண்டு அங்கிருந்த ஒரு சுழியனின் மூளையில் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கும் அபாரத் திட்டமொன்று உதித்ததாம். அவன் உடனே மஸ்கன்ஸ் கொம்பனிக்காரரிடம் சென்றானாம். சென்று, "மஸ்கனே மஸ்கனே, உனது அஸ்பெஸ்றர் ஷீட்டுகளை இந்த யுத்த நெருக்கடி, செக்பொயிண்டுகளுக்குள்ளால கொழும்புக்கு அனுப்பினால் அவை உருப்படியாய்ப் போய்ச் சேர வேண்டுமல்லவா, கவலையை விடு. அவற்றை என்னிடம் கையளி, நான் எனது லொறியில் பத்திரமாய்க் கொண்டுபோய் கொழும்பில் சேர்க்கிறேன்!" என்றானாம்.

மஸ்கென்ஸ் மனம் குளிர்ந்தார். ஆகா, இப்படியொரு அருமையான யோசனையைச் சொன்னாயே, இதோ எனது முற்பணம், இந்த அஸ்பெஸ்றர் ஷீட்டுகளை அப்படியே கொண்டுபோய் கொழும்பில் சேர்த்துவிட்டு வா, உனக்கு பிற்பணத்தையும் போக்குவரத்துச் செலவையும் நான் தருகிறேன்" என்று கூறி ஷீட்டுகளை அவனிடம் கையளித்தார்.

ஷீட்டுகள் லொறியேறின. லொறி ஓடத் தொடங்கியது. சிறிது தூரம் போனதும் லொறி நின்றது. ஷீட்டுகள் இறக்கப்பட்டன. இறக்கப்பட்ட இடம் எது? அதற்கிடையில் கொழும்பு வந்துவிட்டதா? இல்லை இல்லை, அது யாழ்ப்பாணமேதான். சுழியன் அவற்றை யாழ்பாணத்திலே இறக்கி விற்றுவிட்டான்! லொறியையும் மறைத்து வைத்துவிட்டான். நீண்டநாட்களாக ஷீட்டுகள் கொழும்புபோய்ச் சேராததையறிந்த முதலாளி சுழியனிடம் கேட்டார்.

"ஷீட் டெங்கே?"

"காணாமல் போய்விட்டன."

"காணாமல் போய்விட்டதா? எனது ஷீட்டைத் திருப்பித் தா!"

மன்னித்துக் கொள்ளுங்கள். எனது லொறியும் காணாமல் போய்விட்டது. காணாமல் போன உங்கள் ஷீட்டுக்காக எனது லொறியை நினைத்து ஆறுதல் பட்டுக்கொள்ளுங்கள். நான் காணாமல் போன எனது லொறிக்காக உங்கள் ஷீட்டை நினைத்து ஆறுதல் பட்டுக் கொள்கிறேன்."

"வஞ்சகனே எனது முற்பணத்தையும் சுருட்டிக் கொண்டு விட்டாயே?"

அதை, நீங்கள் எனக்கு இன்னும் தராத பிற்பணத்தை எண்ணி ஆறுதல் பட்டுக் கொள்ளுங்கள்!"

முதலாளி தலையிலடித்துக்கொண்டார் 'அட மகேஸ்வரா! இவன் எப்பேர்ப்பட்ட பேர்வழியடா!'

சுழியன் சொன்னான், "பெயரைச் சொல்லித் திட்டாதேங்கோ, ஒரு நாள் இவன் பாராளுமன்றத்துக்கும் போவான் இருந்து பாருங்கோ."

**(யாவும் கற்பனை. இப்படியான கற்பனைக் கதைகள் உங்களுக்கும் தெரிந்தால் எழுதி அனுப்பலாம்)**

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

அருள் ஜூவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lapik.com/arul
436337

# பனியினால் ஒரு மாளிகை



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

↓ புதைகுழிகளில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டு, மேடையொன்றில் குவிக்கப்பட்டிருக்கும் மண்டையோடுகள் இவை என்று எண்ணிவிடாதீர்கள்.

ஜெர்மனியில் ஒரு கலை நிகழ்ச்சி நடந்தது. அதில் நாடகம் ஒன்று மேடையேற்றப்பட்டது. அந்த நாடகத்திற்காக உருவாக்கப்பட்ட மண்டையோடுகள் தான் இவை.

'எலிசபெத்' என்ற கடைசி ஒஸ்ரிய பேரரசியின் கதையைக் கொண்ட அரச நாடகம் இதுவாகும்.

← வண்ணமயமாகக் காட்சியளிக்கும் இந்த மாளிகையைப் பார்த்தால், பளிங்குக் கற்களால் கட்டப்பட்டது என்று நினைப்பீர்கள். பனிக்கட்டிகளால் கட்டப்பட்டிருக்கும் இந்த வண்ண மாளிகை அமெரிக்காவின் மினசோட்டாவில் 1996ல் கட்டப்பட்டது.

1996ம் ஆண்டு சென்ட் போல் பனிக்காலக் களியாட்ட விழாவின்போது நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பனியினாலான மாளிகை இன்றும் பார்ப்போரைப் பரவசப்படுத்தி வருகிறது.

## அரச நாடகம்




## அதிக நீளம்

→ படத்தில் இருக்கும் இந்த முயலாரின் சிறப்பம்சம் யாதெனில், முயல்களிலேயே மிகவும் நீளமான காதுகளை உடையவர் இவர்தான் என்பதாகும்.

'கவிட் மெஜஸ்டிக் ஸ்டார்' என்ற பெயரைக் கொண்ட இந்த முயலாரின் நீளமான காதுச் சாதனையைச் சமப்படுத்தி இருப்பவர் 'கவிட் நீகல் மெஜிக்' என்ற முயலார்.

இவர் வேறு யாருமல்ல, 'கவிட் மெஜஸ்டிக் ஸ்டார்' முயலாரின் பேரன்.





## கள்வனின் காதல்

← 'கஹோ நா பியார் ஹை' என்ற ஒரு படத்தில் நடித்ததன் மூலம் பல பெண்களின் தூக்கத்தைக் கெடுத்த கனவுக் கண்ணனானவர் ஹ்ரித்திக் ரோஷன்.

இதன் பின் 'ஃபிஸா', 'மிஷன் காஷ்மீர்' என இரண்டு படங்களில் நடித்து பெரும் புகழ் பெற்று விட்டார். இவர் தலையைக் கண்டாலே, பெண்கள் கூட்டம் அலை மோதும் அந்தளவிற்கு இளம் பெண்களின் இதயங்களைக் கவர்ந்த கள்வன் ஹ்ரித்திக்.

எனினும் நிஜமாகப் பெண்களைக் கண்டால் ஒதுங்கிப் போய்விடுவார். காரணம் இவர் காதலி சூஸன் கான். அண்மையில் காதலி சூஸனைக் கைப்பிடித்துக் கொண்டார் ஹ்ரித்திக்.

பெங்களூரில் மிக எளிமையாக நடந்து முடிந்த இவரது கல்யாணத்தில் கலந்து கொண்டவர்களில் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் தான் அதிகம். அவ்வளவு பாதுகாப்புடன் இவரது திருமணம் நடைபெற்றது.

நடிகரும், இயக்குநருமான ராகேஷ் ரோஷனின் மகன்தான் ஹ்ரித்திக். ராகேஷ் ரோஷன் இயக்கி நடித்த இந்திப் படமொன்றில் ரஜினிகாந்தும் நடித்திருந்தார். இதில் ரஜினியின் மகன் வேடத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்திருந்தார் ஹ்ரித்திக். இப்படம் தமிழிலும் மொழி மாற்றப்பட்டு வெளியானது.

## 3வது பிறந்தநாள் வாழ்த்து



### அற்புதராஜா பிரியராஜ்

### 09.02.2001

அற்புதராஜா-யசோதாமாரி தம்பதிகளின் செல்லப் புதல்வன் பிரியராஜ் தனது 3வது பிறந்தநாளை கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, அம்மம்மா, தர்சன் அண்ணா, பிரியன் அண்ணா, சிந்து அக்கா, பானு அக்கா, வாகீசன் மாமா, யாழ்ப்பாணத்திலுள்ள மாமா, மாமி, மச்சான், மச்சாள்மார், கொழும்பிலுள்ள மாமி, மச்சான்மார், மற்றும் உற்றார் உறவினர்கள் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர்.

## அதிரடித் தேவதைகள்





→ துணிச்சலான மூன்று பெண்கள் துப்பறியும் அதிரடிப் படம் 70களில் 'சார்லிஸ் ஏஞ்சல்ஸ்' என்ற பெயரில் வெளியாகி இருந்தது. இதன் இரண்டாவது பாகம் இவ்வளவு வருடங்கள் கழித்து இப்போதுதான் வெளியாகி இருக்கிறது.

பல வருடங்களுக்கு முன் தொலைக்காட்சித் தொடராக வந்த 'சார்லிஸ் ஏஞ்சல்ஸ்'தான் இப்போது படமாக வந்திருக்கிறது. அதிரடித் தோற்றத்தில் தோன்றும் இந்த மூன்று அழகிகளும்தான் படத்தில் நாயகிகள்.

பிரபல ஹொலிவூட் நடிகைகளான லியூ, பேரிமூர், கமரூன் டயஸ் ஆகியோர்தான் இந்த மூவரும். பெண்களின் மனதில் துணிச்சலை விதைக்கக் கூடிய வகையில் எடுக்கப்பட்ட இப் படத்தின் முதல் பாகம் 70களில் சக்கைப்போடு போட்டது.

அண்மையில் வெளியான இப் படமும் பரபரப்பாகத்தான் போகிறது.

இப்படத்தில் துணிச்சலான வேடத்தில் தோன்றிய கமரூன் டயஸ் (நீல நிற ஆடை அணிந்திருப்பவர்) உண்மையில் சரியான பயந்தாங்கொள்ளியாம்.

மிக சமீபத்தில் இவர் இத்தாலிக்குச் சென்று ரோமில் உள்ள ஹொட்டல் ஒன்றில் தங்கியிருந்தார். ஒரு நாள் இரவு டயஸின் அறைக்குள் திருடர்கள் இருவர் புகுந்துவிட்டனர்.

படத்தில் எதிரிகளைப் பந்தாடிய டயஸ், திருடர்களைப் பார்த்துப் பயந்து அலறிவிட, திருடர்கள் அப்படியே ஓடி விட்டார்களாம்.